இதழ் - 62

ரூ.50



**யாழ் - கொழும்பு**
**பயணமும்**
**திண்டாடும்**
**பஸ் பயணிகளும்**



25 JAN 20

**மலையகத்தில்**
**அதிகரிக்கும்**
**சிறுவர்**
**தற்கொலைகள்**

# இருக்கிறம்

ඉරුක්කිරම්

மாதம் இருமுறை

ஒரு பொல்லாப்புமில்லை


25 நவம்பர் 2010
பக்கங்கள் - 64
காத்திருப்பு 06 இருக்கை 02




## மீண்டும் மக்கள் குடியேறும் விசுவமடு

**மரணங்கள் மலியத் தொடங்கிய முதல் நிலம்**

வினைத்திறன் மிக்க சேவை நிர்வாகம் மற்றும் பிரஜைகளின் ஆலோசனை பெறல் என்பவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து செயற்படும் ஒரு உயரிய அமைப்பே “இலங்கை ஆசிய நிலையம்” உள்ளூராட்சி சபைகளின் வெளிப்படையான தன்மையை மேம்படுத்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை பொதுமக்கள் அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே ஆசிய நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.








நியாயமான, சுதந்திரமான நீடித்து நிலைத்திருக்கும் உலகம். இதற்குத்தான் அபிவிருத்திக் கூட்டுறவுக்கான மனிதநேய நிறுவனம் **HIVOS** பங்களிக்க விரும்புகிறது. சகல பிரஜைகளும் அதாவது ஆண்களும், பெண்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும், வளங்களையும் சம அளவில் அடையக்கூடியதான ஒரு உலகிற்காக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து **HIVOS** பாடுபடுகிறது.

மனிதநேயப் பெறுமானங்களினால் வழிநடத்தப்படும் **HIVOS**, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள வறிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கிறது. இம் மக்களது சூழ்நிலைகளின் நீண்டகால அபிவிருத்திக்காகவும், குறிப்பாக பெண்களை வலுப்படுத்தவும் இது பாடுபடுகிறது.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# இருப்பு



## 'உறவுகளைத் தேடி'

## கார்த்திகைப் பூ



வணக்கம் என் உறவுகளே!

பெயர்தல் என்பது இன்று எம்மைப் பொறுத்தளவில் ஒரு பெயராகவே நீண்டு கொண்டு செல்கின்றது. நியாயங்களுக்காக இன்னுமின்னும் எமது இனம் நரக வேதனைகளுடன் மௌனங்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறது. வந்தார்கள். வென்றார்கள். எங்கள் வாழ்வும் எங்கள் வரலாறும் இன்று இவர்கள் முன் மண்டியிட்டுக் கிடக்கிறது.

கார்த்திகைப் பூக்களின் வாசனைகளால் வசந்தம் வீசிய எங்கள் தேசம் இன்று சுடுகாட்டு மலர்களால் நிரம்பிக் கிடக்கின்றது. மௌன சாட்சியாகிவிட்ட இத் தேசத்தில் பூக்கும் வெள்ளைப் புத்தனின் கள்ளமில்லாச் சிரிப்பு எங்கள் சிந்தனைகளையும் சிரிப்பையும் காவுகொண்டிருக்கிறது. இனியென்ன? இருந்ததையும் இழந்துவிட்ட பிறகு இருப்பிற்காய் இல்லாததை தேடுவதில் என்ன பயன்?

புத்தனின் போதனைகளே வெறும் புத்தகங்களாகிவிட்ட இத்தேசத்தில் இனியும் அமைதியையும் அன்பையையும் நாங்கள் போதிப்பதில் பலனொன்றும் இல்லை. மௌனமாய் துடித்துக் கொண்டிருக்கும் எங்கள் இதயங்கள் நிலையான இருப்பிற்காய் பயணிக்கவேண்டும்.

வலியது வாழும். வரண்ட தேசத்தில் நாம் அனுபவித்த கொடுமைகளோ அதனிலும் வலியது. வென்றவர்களின் வெறிபிடித்த கரங்கள் எங்கள் மூலங்களைப் பிய்த்தெறியத் தொடங்கியிருக்கின்றன. அனைத்தும் இன்று அவர்களுக்குச் சொந்தமாகிக் கொண்டிருக்கிறது. எங்கள் வரலாறு உட்பட தோற்றுப் போனவர்களாய் எங்கள் தலைகள் எம்மண்ணில் புதையுண்டிருக்கும் அந்த ஆன்மாக்களை நோக்கி குனிந்து குறுகிக் கொண்டிருக்கின்றன. பிழை எது? தவறு எது? நியாயம் கற்பிக்க இது நேரமில்லை. நிலைத்து நிற்க எங்கள் கரங்கள் பலப்படட்டும்.

எமக்காக எவரும் வரப்போவதுமில்லை. வரவும் மாட்டார்கள். பற்றைகளால் மூடப்பட்டிருக்கும் எங்கள் புனித பூமியின் உள்ளே மௌனமாக உருவாகிக்கொண்டிருக்கும் புத்தர்களின் குடியேற்றங்கள், எதிர்காலத்தில் எங்களுடைய இருப்பை இல்லாதொழிக்கப்போகின்றன.

எல்லாம் தெரிந்தும் இன்னும் எங்கள் ஆன்மாக்கள் நிசப்தமாய் சுவாசித்துக் கொண்டிருக்கின்றன. வேதனைகளும் சோதனைகளுமே எங்கள் வாழ்வென்றாகிவிட்ட பிறகு அதனையே சுவாசிக்கும் எங்கள் உயிரும் உடலும் புதிதாய் விஸ்வரூபம் எடுக்கட்டும். கருநாகங்களால் சூழப்பட்டிருக்கும் கார்த்திகைச் செடிகள் மீண்டும் எங்கள் தேசத்தில் பூக்கவேண்டும்.

இனியாவது மூடப்பட்டிருக்கும் எங்கள் விழிகள் திறக்க வேண்டும்.

கார்த்திகைப் பூவின் வாசத்தை நுகர காத்திருக்கும் உங்களைப் போல் நானும்...

அன்புடன்

[signature]

-ஆசிரியர்-

## வாசகர் கருத்து!

சில இடைவெளிகளுக்குப் பின்னர் 'இருக்கிறம்' மீண்டும் எனது கைகளுக்குக் கிடைத்தது. இலங்கையில் தமிழ் சஞ்சிகைகள் வருடக்கணக்கில் வந்துகொண்டிருந்தாலும் கூட பொருளாதார சிக்கலினால் வறுமையுடன் போட்டி போட வேண்டியுள்ளமைக்கு நாம்தான் காரணம். தரமற்ற வெளிநாட்டு குப்பைகளை வாங்குவதற்குப் போட்டி போடும் நாம் நம்முடைய உள்நாட்டுப் பண்டத்தை வாங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை. அந்தவகையில் மாதம் இருமுறை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வெளிவரும் இருக்கிறம் எனும் இலக்கிய சஞ்சிகையை நாம் ஒவ்வொரு வரும் பணம் கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும். மேலும் 'இருக்கிறம் வருட சந்தா முறையினை அறிமுகப்படுத்தினால் அதனை ஊக்கப்படுத்தி மாதத்திற்கு பத்து புதிய வருட சந்தாதாரர்கள் என்ற முறையில் பயணம் செய்தால் வருடத்திற்கு 100 சந்தாதாரர்களை சேர்க்க முடியும். அத்துடன் மலையகம் சம்மந்தமான செய்திகள், ஆக்கங்களுக்கும் பக்கங்களை ஒதுக்கினால் நல்லது. மொத்தத்தில் 'இருக்கிறம் இன்னும் சில புதிய மாற்றங்களுடன் வெளிவருமாக இருக்குமானால் நிச்சயம் வாசகர்கள் மனதில் நிரந்தரமாக இருக்கும்.

**பாலா. சங்குபிள்ளை. ஹட்டன்**



சென்ற இதழின் 'பதிப்பகத்தார்' பார்த்தேன். பெரும்பான்மையினர் செய்யும் அடாவடித்தனங்கள்தான் தமிழரை கொதித்தெழ வைக்கின்றது என்பதில் ஐயமில்லை. கோபுவின் அரசியல் கட்டுரை காலத்தை ஒருமுறை மீட்டுப்பார்க்க வைத்ததுடன் எம்மை சற்று நிதானமாக மற்றவர்களிடம் பழகுமாறு வலியுறுத்துவதாகவும் இருந்தது. ஒவ்வொரு ஆக்கமும் சிறப்பாக இருக்கின்றது. மக்களின் பிரச்சினைகளை நீங்கள் வெளியிடுவது பாராட்டத்தக்கதுதான். விற்பனை, விளம்பரம் பற்றி நீங்கள் எழுதியிருந்தீர்கள். இவற்றை பெருக்கவேண்டுமானால் சில ஜனரஞ்சகமான அத்தோடு சில பொழுதுபோக்கு விடயங்கள், அதிகளவான சிறுகதைகள், தொடர்கள் ஆகியவை அவசியம் என்பது காலத்தின் கட்டாயம்.

**க. தவராசா**
**முரங்கன். மன்னார்**

சில காலங்களாக இருக்கிறத்தை தொடர்ந்து வாசித்து வருகிறேன். எப்போது வருகின்றது? எப்போது வராது என்ற விடயமே தெரியவில்லை. குறிப்பிட்ட தினத்தில் கடையில் போய் பார்த்தால் இன்னும் வரவில்லை என்கின்றார்கள். உங்களுக்கு வாசகர்களின் ஒத்துழைப்பும் தேவை என குறிப்பிட்டு இருந்தீர்கள். அது என்றும் இருக்கின்றது. ஆனால் நீங்கள் வாசகன் எதிர்பார்க்கும் நேரத்தில் தராதபோது அது எப்படி சாத்தியமாகும்?

**யோ. நவநீதன்**
**கல்லடி வேலூர், மட்டக்களப்பு**

நவம்பர் 25 இல் வெளிவந்த 'இருக்கிறம்' பார்க்கக் கிடைத்தது. அருமை. 'அதற்குத் தக' சூப்பரோ சூப்பர். எதையும் கருத்தாழத்தோடு மட்டுமல்லாமல் சுவாரஷ்யம் மிகுந்ததாகவும் எழுதும் ஆற்றல் அஷ்ரப் சிஹாப்தினையே சாரும். அத்தோடு அந்த ஆக்கத்தில் அவர் எவ்வளவு ஆதங்கப்பட்டு எழுதி இருக்கின்றார் என்பது நன்றாக புரிந்தது. புரிய வேண்டியவர்களுக்குப் புரிந்தால் சரி. மேலும் இம் முறை 'சட்டம் பேசுகிறது' பயனுள்ள அதேவேளை ரசிக்கும்படியும் அமைந்துள்ளது பாராட்டத்தக்கது.

**கவிமலர், தெஹிவளை**

இருக்கிறமின் அபிமான வாசகன் நான். 'காற்றாய் வருவேன்' தொடர் உண்மையிலேயே திகிலூட்டுகிறது. அடுத்த தொடர் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பை வாசகனுக்குத் தூண்டவைக்கின்றது. சிறுகதைகள், கட்டுரை எல்லாமே சூப்பர். 'In the mood for love' படத்தின் விமர்சனம் கதையை கண்முன்னே காட்டியுள்ளது. வாழ்த்துக்கள்.

**க. யாழினி, வெள்ளவத்தை**

'இருக்கிறம்' ஆசிரியருக்கு வணக்கம். உங்கள் வெளியீட்டை மாதம் தவறாது வாசிக்கின்றேன். உண்மையில் வெற்றிக்குரிய செயல்தான். மக்களின் பிரச்சினைகளை தேடியறிந்து எழுதுகிறீர்கள். அரசியல் பக்கங்கள் சூப்பர். 'அதற்குத் தக', 'சிறுகதை', 'தொழிநுட்பத் தகவல்கள்', 'பதிப்பகத்தார்', 'ஆசிரியர் தலையங்கம்' என எல்லாமே நன்றாக இருக்கின்றது. வன்னி மண்ணின் மைந்தர்கள், தாங்கள் வாழப் படும் பாட்டை எழுதியமைக்கு நன்றி. மூன்றாவது ஆண்டில் கால்பதித்தமைக்கும் வாழ்த்துக்கள்.

**அ. கல்யாணி, ஹட்டன்**


காத்திருப்பு 06 - இருக்கை 02

இதழ் 62

# இருக்கிறம்

ஒரு வெளிப்படையான மாதம் இருமுறை

ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட் வெளியிடுகிறது
#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 11 2530836
தொலைநகல்: +94 11 2580390
மின்னஞ்சல் irukiram@gmail.com

நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்
ஆசிரியர் : அருளானந்தம் சஞ்சீத்
அலுவலக நிருபர் : க. கலாவர்ஷ்னி
கார்ட்டூன் : சஞ்சீத்
வடிவமைப்பு : சி. திவாகரன்
கணனி தட்டச்சு : த. ஜீவராஜ், எஸ். ஸ்ரீகாந்த்



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.



நேரடி ரிப்போர்ட் - மீண்டும் குடியேறும் விசுவமடு

**மரணங்கள் மலியத் தொடங்கிய ............ பக்கம் - 04**

விசுவமடு என்ற அழிவடைந்த நிலத்தில் மீளக் குடியமரும் மக்களுடைய ஒரு நாள் வாழ்க்கை பற்றிய விவரணம் மற்றும் சிதைவடைந்துபோயுள்ள விசுவமடுவின் நினைவுகளை மீட்டிப் பார்க்கும் மக்களின் இன்றைய நிலை பற்றிய நேரடி ரிப்போர்ட்..

உண்மையின் பதிவு - திண்டாட்டம்

**யாழ் - கொழும்பு பயணமும் .................. பக்கம் - 08**

ஏ-9 வீதியூடாகச் செல்லும் யாழ்ப்பாணம்-கொழும்பு பஸ் சேவைகளில் நடப்பது என்ன என்பதை மிகவும் நாசூக்காகவும் சுவாரஸ்யமாகவும் வெளிப்படுத்தும் 'உண்மையின் பதிவு', அப்பயணத்தின் போது மக்கள் படும் அவஸ்தைகளையும் அல்லல்களையும் உண்மையின் கண்ணாடியாகக் கூற முற்படுகிறது. புரட்டுங்கள் பக்கங்களை. அறியுங்கள் பயண அவஸ்தையை.

முஸ்லிம் அரசியல் - வெளியேற்றம்

**முஸ்லிம்களின் வெளியேற்றத்துக்கு ........... பக்கம் -50**

வடக்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டு கடந்த ஒகஸ்டுடன் 20 வருடங்களாகின்றன. இன்றும் கூட அவர்கள் அகதி நிலையையே அனுபவித்து வருகிறார்கள். கண்ணீர் ததும்பும் சோகத்தின் சிதறல்கள் உள்ளே.

தமிழ்க்கட்சிகள் - புதிய வியூகம்

**தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமைப் ................. பக்கம் - 54**

இனப்பிரச்சனைக்கான தீர்வு காண்பது தொடர்பில் காலம் காலமாக பல உத்திகளும், தந்திரங்களும், போராட்டங்களும் இடம்பெற்றன. இன்று அதன் நிலை என்ன? தமிழர்களின் இருப்பு என்ன? அவ்விருப்பிற்காக தமிழ்த் தலைவர்கள் எடுத்து வரும் நடவடிக்கை பற்றியும், அரசால் பகடைக் காய்களாக்கப்படும் தமிழ்க்கட்சிகள் பற்றியும் விரியும் கட்டுரை.

புலனாய்வுப் பார்வை - கற்றுக் கொண்ட பாடங்கள்

**ஒரு காலம் குருதி.....................................பக்கம்-18**

ஐம்பது ஆண்டுகளாக உரிமைக்காகப் போராடிய ஒரு சமூகம் இப்போது தண்டனையை அனுபவித்துக் கொண்டு நிர்க்கதியாக நிற்கின்றது. வீரமும் தியாகமும் நிறமிழந்து போக, பிரகடனங்களும் முழக்கங்களும் அர்த்தமற்றுப், போக வழியேதுமற்றவர்களாக மக்கள் வெட்டவெளியில் நிறுத்தப்படுகிறார்கள். இது தவறுகளுக்கான அறுவடையா? அல்லது தண்டனைகளுக்கான பரிசா? என்று தெரியாத நிலையில் தான் பலரும் தடுமாறுகிறார்கள். காலத்தின் கோலங்களாக உண்மையின் ஆய்வு புலனாய்வுப் பார்வையாக...

திரைப்பார்வை - மைனா

**மைனா திரைப்படம் பற்றிய பார்வை.............பக்கம் - 24**

நெஞ்சங்களைப் பதை பதைக்க வைக்கும் காதல் காவியம். நீண்டகாலத் திற்குப் பின் தமிழில் ஒரு நல்ல படம்.



சட்டம் பேசுகிறது - பாதுகாப்பு

**பொலிஸில் முறைப்பாடு செய்யும் முறை....? பக்கம் - 35**

நடைமுறையில் உள்ள அரசியலமைப்பில் பொலிஸில் முறைப்பாடு செய்வது பற்றி அத்தியாயமே உள்ளது. இதை அநேகர் அறியவில்லை. குறிப்பாகத் தமிழர்களது நிலை மிகவும் மோசமாகவுள்ளது. முறைப்பாட்டை சிங்களத்தில் தான் கட்டாயம் செய்ய வேண்டும் என்று எண்ணுபவர்களும் உண்டு. 'சட்டம் பேசுகிறது' பகுதி அது பற்றி ஆராய்ந்து தமிழர்களது தேவையை இலகுவாகத் தெரிவிக்கிறது.

நேர்முகம் - கிருஷிகன்

**நானொரு வைத்தியராக வரவேண்டும்........' பக்கம் - 56**



கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற முல்லைத்தீவு மாணவன் கிருஷிகனுடனான ஒரு நேர்காணல்.

மலையகப் பார்வை - தற்கொலை

**அதிகரிக்கும் சிறுவர் தற்கொலைகள்... பக்கம் - 46**

மலையகத்தில் இன்று சிறுவர் தற்கொலைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. அண்மையில் புஸல்லாவைப் பிரதேசத்தில் மட்டும் அடுத்தடுத்து சிறுமிகள் தற்கொலை செய்துகொண்டனர். இதற்கான காரணம் மற்றும் எதிர்காலத்தில் இவற்றைத் தடுப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் போன்ற விடயங்களை விளக்கும் கட்டுரை...

பொருளாதாரம் - திராட்சை உற்பத்தி

**யாழ்ப்பாணத்தின் திராட்சையும்... பக்கம் - 20**

திராட்சைகளை விரும்பாதவர் யாருமே இல்லை. இவ்வுற்பத்தியில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நோய்த்தாக்கங்கள், சந்தைப்படுத்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பவற்றை விபரிக்கும் கவர்ஸ்டோரி...

தீபச் செல்வன்



# மரணங்கள் மலியத் தொடங்கிய முதல் நிலம்

அவலக் குரல்கள் அந்த வீதியில் இன்னும் கேட்டுக் கொண்டிருக்கின்றன. யுத்தம் பின்னால் துரத்திக் கொண்டிருக்க இந்த வீதியால் மக்கள் எப்படி அந்தரித்து ஓடியிருப்பார்கள்? பரந்தன். முல்லை வீதி என்கிற அந்தத் தெருவே உயிர் காக்க அந்தரித்து ஓடிய சனங்களின் கால் தடங்கள் நிறைந்திருப்பதைப்போல இருக்கிறது. குன்றும் குழிகளுமாக இருக்கிற இந்த தெருவைப் பார்க்கிற பொழுது அந்த மாபெரும் சனங்கள் இந்த வீதியால் எப்படிச் சென்றிருப்பார்கள் என்று கேள்வி எழுகிறது. தெருவின் கரைகளில் பக்கங்களில் உள்ள காணிகளில் எல்லாம் கைவிடப்பட்ட நிலையில் பொருட்கள் சிதறிக் கிடக்கின்றன. வாகனங்கள், சக்கரங்கள் கழற்றப்பட்ட வாகனங்கள், வெறும் சக்கரங்கள், பலகைப் பெட்டிகள், கூரைத்தகரங்கள் என்று கைவிடப்பட்ட பொருட்கள் அழிந்த நிலையில் இருக்கின்றன. மீண்டும் விசுவமடு நகரம் இயங்கிக் கொண்டிருக்கிறது. போர் தொடங்கி தீவிரம் பெறத் தொடங்கிய முதலாவது இடம் விசுவமடு என்று கூறப்படுகிறது. உயிர்கள் கொட்டத் தொடங்கிய அந்த நிலம் தனக்கேயுரிய வளத்தின் முகத்தை அணிந்திருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலில் மல்லாவி, துணுக்காய் போன்ற இடங்கள், பின்னர் முல்லைத்தீவு நகரத்தை அண்டிய இடங்கள், ஒலுமடு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை போன்ற இடங்களில் மக்கள் குடியேற்றப்பட்டார்கள். யுத்தம் கடுமையாக நடந்த புதுக்குடியிருப்பு நகரம் விசுவமடு, உடையார்கட்டு போன்ற இடங்களில் மீளக்குடியமர்வு நடைபெறாதிருந்த நிலையில் அண்மையில் (16.09.2010) விசுவமடு மேற்குப் பகுதியில் மீள் குடியேற்றம் நடைபெற்றது. குறித்த மக்கள் முதல் நாள் (15.09.2010) முல்லை விசுவமடு மகா வித்தியாலத்திற்கு கொண்டு வரப்பட்டார்கள். முகாம் வாழ்வு என்கிற தண்டனை காலத்தை முடித்துக் கொண்டு திரும்பிய மக்கள் வளமான மண்ணை நம்பியே மீண்டும் நிலம் திரும்பியிருக்கிறார்கள். ட்ரக்டர்களில் மக்கள் ஏற்றப்பட்டு காணிகளுக்கு கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். எல்லாவற்றையும் இழந்த பிறகும் புன்னகையை மட்டும் திரும்பி எடுத்துச் செல்கிறார்கள் அந்தச் சனங்கள்.

பாடசாலை வளாகம் ஒரு இடைத்தங்கல் முகாம் போலிருந்தது. மண்டபம் ஒன்றில் பதிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. படிக்கட்டுக்களில் மக்கள் குந்தியிருந்தார்கள். களைத்துப்போன முகங்களில் ஊருக்கு வந்து விட்டோம் என்ற மகிழ்வு தெரிந்தது. ஒரு பக்கத்தில் மிதிவெடிகள் போன்ற வெடிபொருட்களை கண்டால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விளக்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அபாயமான பொருட்களை கண்டால் யாரும் தொட வேண்டாம் என்பது தொடர்ந்து அறிவுறுத்தப்படுகிறது. சிறுவர்கள், பெரியவர்கள் என்று எல்லோரும் தங்கள் பொதிகளை சரி பார்த்து தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

தனமணியம்மாள் என்ற தாய், வலயம் ஒன்று என்கிற கதிர்காமர் தடுப்புமுகாமிலிருந்து வந்திருந்தார். "யுத்தம் எங்களை மேலும் வறுமையாக்கி விட்டது" என்று குறிப்பிடும் அவர் தான் விசுவமடுச் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்துதான் பிழைத்து வந்ததாக என்னிடம் குறிப்பிட்டார். "காணியில் வெறுந் தென்னைகள்தான் இப்பொழுது நிற்கின்றன. இரண்டு பெண் பிள்ளைகளை கரை சேர்க்க வேண்டும் என்ற என் கடமையை நினைக்கும் பொழுது நான் எப்படி வாழப்போகிறேன்?" என்று கேள்வி எழுப்பினார். "அரசாங்கம் என்னைப் போன்றவர்களுக்கு தொழிலுக்கான முதல் தந்து உதவ வேண்டும்" என்று சொல்கிற தனமணியம்மாள் தனது தொழிலில் மாத்திரம் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வளம் அழிந்து விட்டதாக சொல்கிறார்.

பாடசாலையின் மேல்மாடி கட்டிடத்தில் இருந்து சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பாடசாலை வாயிலில் மதியநேர உணவு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. சிலர் வாங்கிய உணவை சொப்பிங் பைகளிலும், இறப்பர் பாத்திரங்களிலும் வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த உணவில் எனக்கும் சாப்பிடத் தந்தார்கள். பாடசாலையில் முக்கியமான இடத்தில் செஞ்சோலை மாணவிகளது நினைவாலயம் அமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பாடசாலையைச் சேர்ந்த 14 பேர் இதில் இறந்திருந்தார்கள். செஞ்சோலை படுகொலையால் இந்தப் பாடசாலை ஆறாத துயரத்திற்கு முகம் கொடுத்தது. இன்று செஞ்சோலை மாணவிகளது நினைவு ஆலயம் அழிக்கப்பட்டிருக்கிறது. மாணவிகளது புகைப் படங்கள் பொருத்தப்பட்டிருந்த கட்டிடம் வெறுமையாக இருந்தது.

பாடசாலை கட்டிடத்தில் இருந்த ஐங்கரநேசன் ஜெகதீஸ்வரி தனது 11 வயதான பெண்பிள்ளையை யுத்தம் தின்று விட்டதாக சொல்லி அழுதார். இராமசாமி சிவபாக்கியம் என்கிற தாய் விசுவமடு பாடசாலை வளாகத்தில் வைத்தியசாலையாக இயங்கிய கட்டிடத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். யுத்தம் தீவிரம் அடையத் தொடங்கிய நாட்களில் கிளிநொச்சி வைத்தியசாலை அந்த மண்டபத்தில்தான் இயங்கியிருக்கிறது. முள்ளிவாய்க்கால் கொலைகளும் மரணங்களும் அங்கிருந்துதான் தொடங்கியிருக்கின்றன. யுத்த கால இடர் முகம் படிந்த அந்தக் கட்டிடம் வரலாற்றின் ஒரு துயரச் சின்னமாக பாதுகாக்கப் படவேண்டியது. இன்னும் அழும் குரல்கள் கேட்கும். அடங்காத நெருக்கடி மிக்க மண்டபத்தைப் போல

# மீண்டும் மக்கள் குடியேறுகிற விசுவமடு

சாந்தமாக அது தன் முகத்தை வைத்திருந்தது. அந்தக் கட்டிடத்தின் மேற்பக்கத்தில் வைத்தியசாலை என்பதற்கான பாதுகாப்பு குறியீடாக செஞ்சிலுவைக் குறியீடு வரையப்பட்டிருந்தது.

விசுவமடு கிராமம் 1960களில் படித்த மக்கள் குடியேற்றப்பட்டு உருவாக்கப்பட்ட விவசாயக் குடியிருப்புத் திட்டம். 'வெளிக்கிடு விசுவ மடுவுக்கு' என்று நம்பிக்கையுடன் சனங்களை அழைத்த கிராமம். படித்து அரசசேவையில் ஈடுபடுவதைவிட வாழ்வில் முன்னேற வேண்டுமாக இருந்தால் விசுவமடு போகலாம் என்று சொல்லப்படும் அளவுக்கு இந்தக் கிராமம் வாழ்வில் முன்னேறும் வளத்தை வைத்திருந்தது.

“குடியேற்றத்தின் பொழுது ஒவ்வொரு நபருக்கும் மூன்று ஏக்கர் காணிகள் படி வழங்கப்பட்டன. 19 கிராமசேவையாளர் பிரிவுகள் இருக்கின்றன. 1400 குடும்பங்கள் வசித்து வந்திருக்கின்றன. பிரதானமாக விசுவமடு மேற்கு 1968 இல் 220 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. பரவல் பாசனம் விவசாயத்தை மேற்கொள்ள விசுவமடுக்குளத்தை நம்பி இந்த மக்கள் குடியமர்ந்தார்கள். அதன் பின்னர் 1972 இல் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் 210 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 309 குடும்பங்கள் குடியேற்றப்படும் இந்த மீள்குடியமர்வு, அந்தப் பிரதேசத்தில் நடைபெறுகிற முதலாவது மீள்குடியமர்வு” என்று உதவி அரசாங்க அதிபர் செ. தயானந்தா என்னிடம் குறிப்பிட்டார்.


மக்கள், கிராமம் முழுக்க கொண்டு சென்று விடப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெரிய கிராமத்தை சுற்றிச் சுற்றி உழவு இயந்திரச் சத்தங்கள் கேட்டபடியிருந்தன. போனதும் தறப்பாலை விரித்துப் போர்த்துக் கொண்டு முதல் நாளை மக்கள் எதிர்கொள்ளத் தொடங்கினார்கள்.

மறுநாள் (17.09.2010) மக்களை அவர்களின் காணிகளில் பார்க்க முடிந்தது. எல்லோருமே பெரும் வேலைகளுடன் நின்றார்கள். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருமே கை



களில் எதையாவது வைத்துக் கொண்டு காணிகளை துப்புரவாக்கத் தொடங்கியிருந்தார்கள். நீண்ட தென்னை மரங்களும், பெரும் சீமெண்ட் வீடுகளும், பெரும் வீதிகளும், செழித்த சிவப்பான மண்ணுமே விசுவமடு என்கிற அடையாளத்தை இன்னும் காட்டுகின்றன. விவசாயத்தில் ஒரு பிரமாண்டமான நிலமாக விசுவமடு முக்கியம் பெறுகிறது. திரும்பும் இடமெல்லாம் பெருந்தென்னைத் தோட்டங்கள்தான் தெரிகின்றன. ஓட்டு வீடுகளைத் தவிர 'சீட்' என்கிற கூரைத்தகடு போடப்பட்ட வீடுகளின் கூரைகள் எதுவுமில்லை. கைவிடப்பட்ட பொருட்கள் நிறைந்து கிடப்பதை பார்க்கும்பொழுது சனங்களின் வாழ்வு எப்படி சீரழிந்தது என்பது மிகவும் தெளிவாக புலப்படுகிறது.

“தைப்பொங்கல் அன்று (14.04.2009) எதிர்பாராத தருணத்தில் எறிகணைகள் வந்து விழும் பொழுது எல்லாவற்றையும் விட்டுவிட்டு நாங்கள் ஓடினோம்” என்று குணசிங்கம் செல்வநாயகி என்னிடம் குறிப்பிட்டார். பேரழிவுகளின் எச்சங்கள் காணி முழுவதும் நிறைந்து கிடக்கின்றன. எல்லோருமே எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடியிருக்கிறார்கள் என்பதை காட்டும் அடையாளமாக கைவிடப்பட்ட பொருட்களின் எச்சங்கள் கிடக்கின்றன. நிலத்தின் மேலாக பலகைகளை அடுக்கி மண்போடப்பட்ட பதுங்குகுழிகள் சில அமைக்கப்பட்டிருந்தன. எறிகணை தாக்குதல்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காய் தத்தமது காணிக



ளில் தஞ்சமடைந்திருந்த மக்கள். உடனே அவற்றைத் தயாரித்து பதுங்கியிருந்ததாக குறிப்பிட்டார் செல்வநாயகி. வீட்டின் சுவர்க்கரையாக சுற்றி மண் மூட்டைகளை அடுக்கி அதிலும் தாம் ஒளிந்திருந்ததாகச் சொன்னார். "சுவர்க்கரையாக இருந்து இருந்து பார்த்தோம். முடியாத கட்டம் வந்த நிலையில் ஓடி விட்டோம்" என்று பெரிய மூச்சுடன் சொன்னார்.

புத்தடிச் சந்தியில் நிறைய ஆவணங்கள் கைவிடப்பட்டுச் சென்ற நிலையில் அழிந்து போயுள்ளன. பாடசாலை மாணவர் வரவு இடாப்பு. பரீட்சைத் தாள்கள் தவிர படிவங்கள் போன்ற ஆவணங்கள் கைவிட்டுச் சென்ற நிலையில் மழை. வெயில் எல்லாவற்றிலும் நனைந்து உக்குகிற நிலையில் இருக்கிறது. பக்கத்தில் புத்தடி விநாயகர் ஆலயம் பாழடைந்த நிலையில் இருக்கிறது. பக்கத்தில் ஒரு சில மளிகைக்கடைகளும் தேநீர்க்கடையும் இயங்கியிருந்திருக்கின்றன. இப்பொழுது பாழடைந்த நிலையில் அவை இருக்கின்றன. அந்த சந்தியில் வைத்து விசுவமடு கிழக்கைச் சேர்ந்த சசி என்பவரைச் சந்தித்தேன். கடந்த காலத்தில் கலகலப்பாக அந்த சந்தி இருந்ததாக என்னிடம் குறிப்பிட்டார். முன்னால் உள்ள ஆழமான பெரும் வாய்க்காலால் வருடம் முழுவதும் குளத்து நீர் பாய்ந்து குளிர்ச்சியாக இருந்தது என்றும் சொன்னார். அந்த சனங்களின் உணவுத்தட்டுக்கள் முதல் பாய் போன்ற பொருட்கள் சந்திவரை வந்து சீரழிந்திருக்கின்றன. குழந்தைகளது பொம்மைகள் உடைந்த நிலையிலும், புகைப்படங்கள் தெருக்களிலும் சிதைவுகளிலும் கிடந்தன.

அதே சந்தியில் சந்தித்த உமாரமணன் என்பவர் அந்த இடத்தை விட்டு இடம்பெயர்ந்தோடிய திகிலான அனுபவத்தை சொல்லிக் கொண்டிருந்தார். பிரமந்தனாறு, சுண்டிக்குளம் ஊடாகவும் கல்மடு. தர்மபுரம் ஊடாகவுகம் இராணுவம் சுற்றி வளைத்த நிலையில் விசுவமடுவைக் கைப்பற்றிய வேளை பேரதிர்ச்சியுடன் றெட்பானா நோக்கி இடம்பெயர்ந்து சென்றதாக சொன்னார். "விசுவமடுக் குளத்தில் இருந்து வரும் இந்த வாய்க்கால்தான் எங்களை உயிர் வாழ வைத்தது" என்று லோகநாதன் மதுரேஸ்வரி தெரிவித்தார். கோகிலதாசன் விஜிதா என்ற தன் மகளைக் காட்டி அவரது கணவர் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டதாக குறிப்பிட்டார்.

"வாய்க்காலில் தண்ணீ பாயும் பொழுதுதான் கிணறுகளில் தண்ணீர் நிரம்பியிருக்கும். அதனால்தான் எங்கள் காணி செழித்திருக்கும். நல்ல வருமானம் கிடைக்கும்" என மதுரேஸ்வரி தெரிவித்தார். விசுவமடுவில் உள்ள எல்லாக் கிணறுகளும் அடியுடன் வற்றிவிட்டன. கிணற்றின் உள்ளே நிலம் காய்ந்து போய்க்கிடக்கிறது. வாய்க்கால்களிலும் தண்ணீர் இல்லை. யுத்த நாட்களில் இந்தக் விசுவமடுக்குளத்தை படைத்தரப்பு உடைத்ததாக சொல்லப்படுகிறது. கடந்த வருடம் பெருமழை நாட்களிலும் தண்ணீர் மறித்து கட்டாததால் குளத்தில் நீர் வற்றி அடிமட்டத்துடன் நிற்கிறது.

விசுவமடுக்குளத்திற்குச் செல்லும் வழியில் காசித்தம்பி கனகலிங்கம் என்பவரைக் கண்டேன். மிக வேகமாக குளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். ஒன்றரை வருடத்தின் பின்னர் இன்றுதான் குளத்தைப் பார்க்கச் செல்வதாக சொன்னபடி சென்று கொண்டிருந்தார். இன்றுதான் மீளக்குடியேறியிருக்கிறன் தான். தண்ணீருக்கு என்ன செய்வது என்று தெரியாமல் அல்லாடுவதாக சொன்னார். விசுவமடுக்குளத்தில் தண்ணீர் வற்றி அடியுடன் நின்று விட்டிருந்தது. சில பெண்களும் சிறுமிகளும் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தார்கள். மற்றொரு பக்கமாக இராணுவத்தினரும் சிங்களத்தில் ஏதோ சத்தமிட்டபடி குளித்துக் கொண்டிருந்தார்கள். குளத்தடியில் கைவிடப்பட்ட நிலையில் உக்கிப் போயிருந்த சைக்கிள் எனது பார்வையை இழுத்தது. யுத்த நாட்களில் குளித்துக் கொண்டிருந்த யாரோ விட்டுச் சென்றதைப்போல அது கிடந்தது. "இந்தக் குளத்தில் நிரம்பி வழிந்து செல்லும் நீரினால் பிரமந்தனாற்றுக் குளமும் நிறைந்திருக்கும்" என தன் ஞாபகத்தை மீட்டுச் சொன்னார் கனகலிங்கம். விவசாயம் செய்வதற்காகவே தான் படிப்பையும் கைவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து விசுவமடுவுக்கு வந்ததாக அவர் குறிப்பிட்டார். விசுவமடு மேற்கில் உள்ள அட்டைக்குளமும் வற்றி காய்ந்து போயிருக்கிறது. அந்தக் குளத்தின் ஊடாக பாசனம் எதுவும் மேற்கொள்வதில்லை. ஆனால் கால்நடைகள் அதில் சென்று நீர் அருந்தும். ஆனால் இப்பொழுது கால்நடைகள் குடி தண்ணீரில்லாமல் அலைந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது.

குளத்தின் கீழ்ப்பக்கமாக ஒரு சிறிய கோயில் இருந்தது. சுற்றிவர மரங்கள். நீண்டகால புளியமரம் ஒன்று வளர்ந்து நிற்கிறது. இராணுவத்தினர் விளையாடும்பொழுது போடும் சத்தங்கள் பின்பக்கத்தில் கேட்கின்றன. மிக அமைதியாக கந்தசாமி பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அன்றுதான் மீளக் குடியேறிய அவரது உதடுகளிலிருந்து 'உன்னிடம் வந்து விட்டேன் அம்மா' என்ற வார்த்தைகள் மட்டும் தெளிவாகக் கேட்டன. வைரவர் கோயிலின் சிறிய கூரை கவிழ்ந்து கிடக்கிறது. கிட்டத்தட்ட இருபது நிமிடங்கள் அவர் பிரார்த்தனையில் ஈடுபட்டு கலைந்து வந்தார்.

"எனது வீடு பலாலி இராணுவ வலயத்தில் இருக்கிறது. எனது மகன் சமாதான காலத்தில் அங்கு போய் முந்திரிகைப் பழம் பிடுங்கி வந்து தந்தான். அந்த மகனுடன் எனது மற்றைய மகனும் யுத்தத்தில் இறந்து விட்டார்கள்" என்று துயரத்துடன் குறிப்பிட்டார்.

விசுவமடுக் குளத்தை நம்பிய பரவல் பாசனத்தையும் தொட்டியை நம்பிய ஏற்றுப் பாசனத்தையும் முக்கிய பிரிவுகளாகக் கொண்ட இந்த விவசாயக்கிராமத்தில் இந்த இரண்டு நடவடிக்கைகளும் கடந்த யுத்தத்தினால் பாதிப்படைந்து இருக்கிற நிலையில் இன்று மக்கள் மீளக்குடியேறியிருக்கிறார்கள். அந்த மக்கள் மீண்டும் தங்கள் வாழ்க்கையைப் புதுப்பித்து பழைய நிலையை எட்டுவதற்கு குளத்தை மீளக்கட்டி, இயந்திரங்களை திருத்திக் கொடுக்க வேண்டும். ஏதுமற்று வந்த மக்களின் இன்றைய அவசிய தேவையாக இதைச் செய்ய வேண்டியிருக்கிறது.

விசுவமடு என்கிற பிரமாண்டமான விவசாயக்கிராமம் நமது நிலத்தின் முக்கியமான வளமாயிருக்கிறது. யுத்தம் மிகவும் கோரத் தாண்டவம் ஆடத் தொடங்கிய இந்த முதல் நிலத்தில் அழிவுகளுக்குள்ளும் சோகக் கதைகளுக்குள்ளும் திரும்பி வந்திருக்கிற மக்கள். வாழும் நம்பிக்கையுடன் வந்திருக்கிறார்கள். கைவிடப்பட்ட பொருட்கள் நிறைந்த பேயடித்து விரட்டப்பட்ட கிராமத்தில் நிற்கும் தென்னைகள் நமது முழு நிலத்திற்குமான ஆதாரமாக நம்பிக்கையாக நிற்கின்றன. மீண்டும் நீர்க்கிராமமாக விசுவமடு மாறி அந்த மக்களின் வாழ்வு செழிக்கும் என்று நம்புவோம்.





# காலமும் கோலமும்!




## தெரிவிப்பது நாங்கள்.. தேவைப்பட்டால் நீங்கள் தீர்மானித்துக் கொள்ளுங்கள்..

ஜி.என்.சுபி

"டேய் மச்சி இங்க பாருடா என்ன வந்திருக்கு என்று. உனக்கு ஒன்றும் வரல்லியாடா?" இதுதான் நம்ம அடிக்கடி செல்போன பார்த்திட்டு கேக்கிற கேள்வி. இப்ப புரிஞ்சிருக்குமே

நிமிஷத்துக்கு நிமிஷம் நம்ம செல்போன்ல அலாரம் அடிக்கிறதோ இல்லையோ ஆனா செய்தி எச்சரிக்கை (நியூஸ் அலேர்ட்) தவறாம அடிச்சிக்கொண்டேயிருக்கும். இதையெல்லாம் ஒவ்வொரு செய்தி ஸ்தாபனமும் "நான் முந்தி நீ முந்தி" என்று ஒவ்வொருத்தரும் தங்களது சேகரித்த செய்தியினை ஒன்றன் பின் ஒன்றாக போட்டுக்கொண்டே இருப்பார்கள்.

எது உண்மை எது பொய் என்று வாசிக்கிறவங்க எல்லோருக்கும் தெரியாதுதானே? முதல் செய்தியைப் பார்க்கும் போதே அதற்கடுத்தடுத்து வந்து குவிகின்றது மீதி செய்திகள். இத்தனையையும் வாசிக்கும் போது ஒவ்வொரு செய்தியும் புதிதாகத்தானே இருக்க வேண்டும். ஆனால் இங்கு பார்த்தால் ஒன்றிரண்டு இடத்தில் இருந்து வராது. ஐந்தாறு இடத்தில் இருந்து வரும். இதில் நடந்த விஷயம் ஒன்று.

தொழில்நுட்பம் என்பது எப்பவுமே முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அதில் எங்கேயாவது சிறிய பிழை நடந்தாலும் அது பெரிய விபரீதத்தைக் கொண்டு வரும். அதுதான் எங்கள் வகுப்பில் சிலருக்கு மூளையை மற்றப்பக்கம் திருப்பிப் போட்டது. தொழில்நுட்பம் எப்படித்தான் விரைவாக வளர்ந்தாலும் செய்தி என்றால் உண்மையைத்தவிர வேறொன்றும் இல்லை. இயலுமானவரை உண்மையைக் கொடுத்தால் தான் அந்தச் செய்தி அனுப்பும் நிறுவனத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை வரும். அப்படியில்லை என்றால் கடந்த செப்ரம்பர் 17ஆம் திகதி கரடியனாறு குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது உங்களுக்கு நினைவிருக்கும். எங்களின் வகுப்பே பெரிய சவாலுக்கு முகங்கொடுத்தது. அன்று மட்டும் 30க்கு மேற்பட்ட நியூஸ் அலர்ட். ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பக்கத்தால ஒவ்வொரு செய்தி வந்தது. இதனை சரியா பிழையா என்று பார்க்க கணனிக்குப் பக்கத்திலும் ஒவ்வொருவர் கணனிக்குக் காவலுக்கு. முதலில் ஒரு செய்தி குண்டு வெடித்ததென்று. அடுத்தது 15 பேர் இறந்தனர். இதனை வாசித்து முடிக்கும் முன்பு 25 பேர் பலி என வந்தது. சற்று நேரத்தில் இன்னொரு இணையச்செய்தி நிறுவனம் சில செய்திகளை குவித்து விட்டு இறுதியாக 60 பேர் பலி எனக்கூறி காயப் பட்டவர்களின் எண்ணிக்கையையும் கூறிவிட்டு சற்று ஓய்வெடுத்துக்கொண்டது. தொடர்ந்து குளறுபடியான எண்ணிக்கையில் பல இணைய செய்தி நிறுவனங்களும் உள்ளூர் செய்திச் சேவைகளும் செய்திகளை அனுப்பிக் கொண்டிருந்தன. எங்களால் எது உண்மை பொய் என்று கண்டு பிடிக்கவே முடியவில்லை. 25 பேரா? 60பேரா?

இதில் ஒரு பகிடி என்னென்று தெரியுமா? நாங்கள் எங்களின் வாராந்த பத்திரிகை வெளியீட்டில் தலைப்புச் செய்தியாக அந்த செய்தியைத்தான் தெரிவு செய்தோம். எங்களின் ஆசிரியரிடமும் கேட்டோம். அவரும் சொன் னார் இன்னும் நிறைய தகவல் வந்திருக்கு என்று. தேடித்தேடி தேடலும் தொடர்ந்தது. ஆனால் தலைப்பிலே தகராறானதுதான் பின்பு விவகாரத்தில் விவரமாய் வந்துவிட்டது.

ஆனாலும் அடுத்த நாள் பத்திரிகைகள் சிலவற்றைப் பார்த்ததும்தான் தெரிந்தது சில சுவாரஸ்யங்கள். "வீரத்தில் சிங்கமாய்" இருக்கும் பத்திரிகையொன்று சந்தேகத்தில் 20க்கும் மேற்பட்டோர் பலி என தலைப்பிட்டது. தினமும் மக்கள் குரலாய் வருகை தரும் பத்திரிகை தெட்டத் தெளிவாய் 60 பேர் பலி எனக்குறிப்பிட்டது. இதில் மக்கள் எதனை எடுத்துக்கொள்வது? அவசரமாக செய்தியைக் கொடுத்தாலும் ஆராய்ந்து கொடுப்பதுதான் ஊடகத்தின் திறமை. உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் செய்திகள் பொதுமக்களுக்கு சென்றடைய உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது தெரிவிப்பது நாங்கள் தீர் மானிப்பது நீங்கள் என்று தெரிவித்து விட்டு சிவனே என்று இருந்து விட வேண்டியதுதான்.







ஏ-9 வீதி மீண்டும் கடந்த வருடம் திறந்த போது யாழ்ப்பாணம் - கொழும்பு பயணத்திற்காக மக்கள் பட்ட அவஸ்தை சொல்லில் அடங்காது. ஆனால் இப்போதைய நிலை தலைகீழாக மாறியுள்ளது. இது ஒருவித முன்னேற்றம். ஆனாலும் அதிலும் சில பின்னடைவுகள் இருப்பது வருந்தத்தக்கது.

கடந்த 2006 முதல் 2009 வரை ஏ-9 பாதை மூடப் பட்டிருந்த காலப்பகுதியில் இரு வழி பயணக் கட்டணமாக 20 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்து யாழ்ப்பாணம் - கொழும்பு போய் வந்தோம். இன்று ஆயிரம் ரூபாய் கொடுத்து சொகுசு பஸ்களில் யாழ்ப் பாணம் போக விரும்புவதில்லை. 600 ரூபாய் பஸ்ஸில் நெளிந்து, வளைந்து பயணிக்கின்றோம். இதெல்லாம் 'எங்கட குணத்தை மாற்றேலாது' என்பதற்கு நல்ல உதாரணம்.

இன்று யாழ் - கொழும்பு பயண சேவையில் 50 இற்கும் அதிகமான தனியார் பஸ்கள் ஈடுபடுகின்றன. இவற்றில் சொகுசு பஸ்கள் ஏராளம். இந்தியாவில் இருந்து வந்த நண்பன் ஒருவன் கூறினான் 'வெள்ளவத்தையில பார்க்கிறதைப் போல இவ்வளவு அதிகமான திறமான பஸ்களை நான் இந்தியாவில பார்க்கல' என்று. இலங்கையினுள் தூர இடங்களுக்கான பஸ் சேவைகளில் அதிகமாக, அரைச் சொகுசு பஸ்களே பாவிக்கப் பட்டு வந்தன. இன்று யாழ்- கொழும்பு போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டதும் அதிகளவான சொகுசு பஸ்கள் இறக்குமதியாகியுள்ளன. போட்டித் தன்மை கூடியதில் சொகுசு பஸ்களின் கட்டணங்கள் கூட இரண்டாயிரத்து 500 ரூபாவிலிருந்து 900 ரூபாயாக ஒரு வருட காலப்பகுதியினுள் மலிந்துவிட்டது. அரைச்சொகுசு பஸ்களில் 450 ரூபாய் முதல் 700 ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

நாம் மேற்சொன்ன எமக்கே உரித்தான சில பண்புகளால் பயணங்களின் போது சொகுசு பஸ்கள் பலவற்றில் பல இருக்கைகள் வெற்றிடமாகவே இருக்கின்றன. சில வியாபார நுணுக்கங்கள் அறிந்த முகவர்களின் பஸ்கள் இன்றும் கனதியுடனே பயணிக்கின்றன. நான் அறிந்த ஒரு பஸ் உரிமையாளர் தனது 700 ரூபாய் பயணப் பெறுமதியுடைய பஸ்ஸை 450 ரூபா வரை குறைத்துள்ளார். ஆனால் அவரது பஸ்ஸில் ஏழெட்டுப் பேரே பயணம் செய்கின்றனர். ஆனால் பல 600 ரூபாய் பஸ்களில் கூட்டம் களை கட்டுகின்றது. இங்குதான் பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன.

பஸ் பிரயாணங்களுக்காக முன்பதிவு செய்வதற்கு



# யாழ் - கொழும்பு பயணமும் திண்டாடும் பஸ் பயணிகளும்

யாழ் - கொழும்பில் பல வர்த்தக நிலையங்கள் முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. இதனை விட நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். ஒரு வசதியான பஸ் முகவர் 'ஒன்லைன் புக்கிங்' சேவையையும் ஆரம்பித்துள்ளார். ஒரே பஸ்ஸில் இவ்வாறாக மாறி மாறி இருக்கைகளை முன்பதிவு செய்யும்போது ஒரே இருக்கைகள் பலருக்கு பதியப்பட்டு விடுகின்றன. ஏறுபவர்கள் எல்லோரும் சமாளித்துப் போவார்கள் என்று இல்லை. காசு கொடுத்து எமக்கான இருக்கைகளை ஒதுக்கிக் கொள்ளும் போது சமாளித்துப் போக வேண்டிய அவசியமும் இல்லை. இன்னும் சில இடங்களில் முற்பதிவு செய்ய முகவர்கள் காட்டும் 'இருக்கை வரைபு' வேறாகவும் பஸ்ஸில் உண்மையில் இருக்கும் இருக்கைகளின் நிலை வேறாகவும் இருக்கும். இந்த நிலையில் பல பஸ்களில் தினமும் இழுபறிகள் நடப்பதை பிரயாணிகள் உணர்ந்திருப்பார்கள். பிரயாணிகள் பதிவு செய்த முகவர்களிடம் கோபித்துக் கொள்ள, முகவர்கள் பஸ்ஸை கொண்டு வரும் ஓட்டுனர், நடத்துனர்களிடம் கோபித்துக் கொள்ள 10 மணித்தியால பயணம் திண்டாட்டமாகவே போய்விடுகின்றது.

பயணத்திற்கும் எனக்கும் என்றுமே ஒத்துவருவதில்லை. ஒவ்வொரு முறையும் ஏதாவது பிரச்சினைகள் வந்தே தீரும். இதன் மூலம் பல சுவாரசியமான, கடுப்பான, அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. ஒருமுறை வெள்ளவத்தையில் ஆட்களை ஏற்றிக்கொண்டு ஒன்பது மணிக்கு கொட்டாஞ்சேனை போனது பஸ். அங்கு ஆறு பேர் பக்கம் பக்கமா 'சீற் புக்' பண்ணியிருந்தார்கள். பஸ்ஸில் 'சீற்' இருந்தது. ஆனால் பக்கம் பக்கமாக இல்லை. கொட்டாஞ்சேனை முகவர் சொன்னார் 'ஆறு பேருக்கும் சீட்டை குடுத்துட்டு நீங்க பஸ்ஸை எடுங்க. இல்லாட்டி பஸ் இந்த இடத்தை விட்டு நகராது' எண்டு. பஸ்ஸுக்குள் இருந்த மிகுதி 40 பேரும் மடையர்கள் என்பது அவர்களின் நினைப்பு போல. இதில் பிழை அவர்களில் மட்டும் இல்லை. இதனால் இரண்டு மணித்தியாலங்கள் அதிலேயே நின்றோம்.

இன்னொரு முறை ஆரம்பத்தில் இருந்தே அந்த பஸ்ஸில் குழப்பம். பதிவு செய்த ஒழுங்கில் பஸ்ஸுக்குள் 'சீற்' இருக்கவில்லை. இதனால் ஏறிய எல்லோருமே நடத்துனருக்கு திட்டும் பேச்சும் தான். அப்பாடா! எப்படித்தான் அவர்களுக்கு பொறுமை வருகிறதோ தெரியவில்லை. எல்லோரிடமும் பேச்சையும் வாங்கிக் கொண்டு வேலையையும் செய்வதென்றால் தனித் திறமை வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஏற்றும் போதே பஸ்ஸின் பின் ஓரிரு இருக்கைகள் தவிர்ந்த எல்லாம் முழுமையாகிவிட்டது. கிளிநொச்சியில் வயதான தம்பதியினர் இருவர் ஏறினார்கள். அவர்களுக்கு கடைசி 'சீற்' மட்டுமே மிஞ்சியது. அவரது பேச்சு 'முன்னுக்கு சீற் தாரம் எண்டு 500 ரூபா காசை வேற வாங்கிப் போட்டாங்கள். இதுக்கு தான் நம்பிக்கையான ஆக்களிட்ட புக் பண்ணனும்' எண்டு கடிந்து கொண்டார்.


பஸ், நிறைந்த பயணிகளோடு ஓமந்தையில் நிறுத்தப்பட்ட போது தான் அந்த முகம் சுழிக்கும் சம்பவம் இடம்பெற்றது. பயணி ஒருவர் முறிகண்டி தாண்டிய உடனேயே இருக்கையில் மலம் கழித்து விட்டார். இதை அருகில் இருந்தவர்கள் கூட சரியாகக் கண்டு கொள்ளவில்லை. சோதனைக்காக ஏறிய இராணுவத்தினர் பஸ்ஸை விட்டு இறங்கி ஒரேயடியாக ஓட்டமெடுத்த போதே நிலைமை விளங்கியது. பிறகு ஓமந்தையில் வைத்து பஸ்ஸைக் கழுவி 'சென்ட்' அடித்து பயணம் மீண்டும் ஆரம்பிக்க ஒரு மணித்தியாலம் தாமதமாகிவிட்டது. பிழை செய்தவர் வயதானவர் கூட. அவரை எதுவுமே சொல்லி பிரயோசனமில்லை. (எல்லாம் முறிகண்டிக் கச்சான் செய்த வேலை) நீண்ட தூர பணத்திற்கு புறப்படுபவர்கள் அதற்கேற்றால் போல் தங்கள் உடலையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். சாப்பாட்டு விடயங்களிலும் அவதானமாக இருக்க வேண்டும். எல்லா இடங்களிலும் எல்லா வசதிகளும் நினைத்த நேரத்தில் கிடைத்து விடுவதில்லை.

உணவுத் தரிப்பிடங்களுடன் குறைந்தது ஒன்பது மணித்தியாலங்களாவது பயணிக்கும் யாழ் - கொழும்பு பயணத்தில் சௌகரியமாக பயண முறையையும், வசதியான இருக்கையையும் நாமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு 200 ரூபாவைப் பார்த்து பல கஷ்டங்களை எதிர்நோக்குவதுடன் நமது உடலுக்கும் அது தீங்காக அமையும். என்னதான் இருந்தாலும் என் மனம் உட்பட பலரது மனங்களும் 'அந்த 200 ரூபாவை ஏன் தேவையில்லாமல் செலவழிக்கணும்' என்றே எண்ணத் தோன்றும். அது மனித இயல்பு. எம்மையறியாமல் எவ்வளவு பணத்தை வீணடிக்கின்றோம் என்பதை நாம் சரியாக உணர்வோமானால் இந்த அற்ப விசயங்களை தூசு போல் ஒதுக்கிக் கொள்ளலாம். இந்தக் கட்டுரை சொகுசு பஸ் உரிமையாளர்களுக்கு சாதகமாக அமைந்துவிட்டது என நினைக்க வேண்டாம். எமக்கு சாதகமான பயணத்தை நாம்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.


அந்நியன்







# இழப்பால் உறையும் உண்மைகள்!



ஒன்று இல்லாத போதுதான் அந்த இழப்பின் முழுத் தாற்பரியத்தினையும் விளங்கிக் கொள்ளுகின்றோம். அது எங்கள் ஜென்ம விரோதியாக இருந்தாலும்கூட எங்களெல்லோருக்கும் தெரியும் ஒரு விடயம் அல்லது ஒரு நபர் எங்கள் வாழ்க்கையில் இருந்து இல்லாமல் போனால் எங்கள் வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதைக் கற்பனை பண்ணவும் எங்களுக்கு முடியாமல் போகின்றது. என்னென்ன விதமாக இது எங்களது வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தைக் கொடுத்தது. எப்படியான வழிகளில் எங்கள் இருப்புக்கே அது காரணியாகியது என்பதெல்லாவற்றையும் அதன் இழப்பின் போதுதான் புரிய ஆரம்பிக்கின்றோம். நாட் செல்லச் செல்ல மெல்ல மெல்ல இந்த உண்மைகள் எங்களுக்குள் உறைய ஆரம்பிக்கின்றன.

சமீபத்தில் பிரான்ஸிலிருந்து ஒரு தமிழ் நண்பர் எம்மைப் பார்க்க வந்தார். சில வருடங்களுக்கு முன்னே அங்கு நான் சென்றிருந்தபொழுது ஏற்பட்ட நட்பு அவருடையது. நட்பு என்றால், ஆக்ரோஷமாக தமிழ் தேசியவாதத்தினையும் விடுதலைப் புலிகளையும் எதிர்த்து என்னுடன் வாதாடியதால் தோன்றிய நட்பு. "தமிழ் தமிழ் எண்டு நிண்டு இண்டைக்குத் தமிழ்ச்சனம் அழிவைக் கண்டதுதான் மிச்சம். தமிழுக்கு நிண்டவங்களெல்லாம் இண்டைக்கு வெளிநாட்டில ஹாயா தங்கடை பிள்ளையளை இங்கிலீசில படிப்பிச்சுக்கொண்டு இருக்கிறாங்கள்.. ஏன் நீங்கள் சிங்களப் பாஷையைப் பேசினால் என்ன? சிங்களவங்கள் ஆனா என்ன..?" இந்த மாதிரி விவாதங்கள் இரவெல்லாம் நீளும். அந்த நண்பர் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக தனது ஊரான யாழ்ப்பாணம் சென்று தங்கிவிட்டு வந்திருந்தார். எங்கள் சந்திப்பு நீண்ட அந்த ஒரு மணித்தியாலமும், பெரும்பாலும் அவர் பக்கத்திலிருந்து







மௌனமே நிலவியது. வாயைக் கிண்டிக் கிளறிப் பார்த்தும் ஒரு பலனுமில்லை. "கதைக்க அப்படி ஒன்றுமில்லை" என்றார். "அட புலிகள் போனதுக்குப் பிறகு உங்களுக்குக் கதைக்கவும் ஒண்டுமில்லாமல் போயிற்றுதா?" என்று சிரித்தேன். ஒத்துக்கொண்டார். விடுதலைப் புலிகளின் இழப்பின் காரணமாக அரசியலில் பேச ஒன்றுமில்லாத அந்த ஒரு விளைவைப் பற்றிச் சிந்தித்த வண்ணம் நாங்களிருவரும் மௌனமானோம். உண்மைதான், இனிச் சொல்ல என்னதான் இருக்கிறது.




அந்த நண்பரும் நானும் மட்டுமல்ல, இதே போன்றே இன்று பலரும் இந்த இழப்பினை



# பதிப்பகத்தார்


கொழும்புத் தமிழ்ச் சங்கம்

உணர்ந்து கொண்டு வருகிறார்கள். அதில் ஜே.வி.பி முதலிடம் பெற்று நிற்கின்றது என்று தயங்காமல் கூறலாம். தமிழ் மக்களின் நியாய பூர்வமான சுய நிர்ணயக் கோரிக்கையை சிங்கள அரசியல் தலைமைத்துவம் தட்டிக் கழித்துக் கிடப்பில் போட விடாமல் பண்ணி யது விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம். உலகெல்லாம் நாடுகளில் செயற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு சர்வ சாதாரண அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு எப்படி எதிர்ப்பினைக் காட்டுவது? வளர்த்தார்கள் ஜே.வி.பியை. பௌத்த சிங்களத் தீவிரவாதத்தின் முகமூடியாக ஜே.வி.பியை ஆக்கினார்கள். அதை வசதியாகப் போட்டுக் கொண்டு அதன் பின்னால் மறைந்து கொண்டு ஆடினார்கள். சுயாதீனமாக பாராளுமன்றத்தில் ஒரு ஐந்து ஆசனம் தன்னும் எடுக்க முடியாத அந்தக் கட்சியை, "எமது வெற்றிக்கு ஜே.வி.பி அவசியம் தேவை.." என்று பசப்பி அதனுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் நின்றதன் மூலம் அதன் ஆசன பலத்தையே பன்மடங்காக்கினார்கள். "ஐயோ ஜே.வி.பி எதிர்க்கின்றதே நாம் என்ன செய்யலாம்.." என்று பேச்சுவார்த்தை மேடைகளிலும் வெகுசன ஊடகங்களிலும் பூதாகரமாக வளர்த்துப் பூச்சாண்டி காட்டினார்கள். சுனாமியின் பின்னர் புலிகளுடனான பிடொம்ஸ் ஒப்பந்தத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்கே போக வைத்து வெற்றி பெறச் செய்தவர்கள் இவர்கள்தான். ஆனால் அவர்கள் வளர்த்த இந்தப் பொய்யைப் பாவம் ஜே.வி.பி தானே நம்பிவிட்டது.

தாங்கள் ஏதோ சிம்மாசனத்தைத் தீர்மானிக்கும் அசைக்க முடியாத சக்தி என்று மார்தட்டிக் கொண்டு நின்றபோதுதான், பேரிடியாக வந்தது புலிகளின் இழப்பு. இனி எதைச் சொல்லி







அரசியல் பிழைப்பினை நடத்துவது? ஒரே இரவில் தென்னிலங்கையின் அரசியல் களத்திலிருந்து அது தூக்கியெறியப்பட்டது. இன்றோ சரத் பொன்சேகாவுக்காக அது வாய் கிழியக் கத்தலாம். அரசாங்கத்தில் யாரும் கண்டு கொள்ளுவதே கிடையாது. எத்தனை பௌத்த பிக்குகளின் உதவியையும் அது நாடலாம். ஆனால் ஒரு அணுவும் அசையாது. அவரைக் கைது செய்தது சட்டத்திற்கு மாறானது என்று நிறுவி உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போடலாம். ஆனால் வெல்லவே முடியாது. இப்பொழுது சரத் பொன்சேகாவின் தயவாலேயே ஒரு ஐந்து ஆசனங்களைப் பாராளுமன்றத்தில் பெற்றிருக்கும் இந்தக் கட்சி அடுத்த பாராளுமன்றத் தேர்தலுடனேயே வெகு சீக்கிரம் காலாவதியாகப் போகின்றது. தம்முடைய உயிர் மூச்சாகவே விடுதலைப் புலிகள் இருந்திருக்கின்றனர் என்பதை உணர்ந்து கொண்டு வருகின்றது.

ஜே.வி.பிக்கு மட்டுமல்ல அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்பட்ட தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றுக்கும் விடுதலைப் புலிகள்தான் உயிர் மூச்சாக இருந்திருக்கின்றனர். பின்னே ஒன்று விட்ட ஒவ்வொரு நாளும் தமிழ், ஆங்கில பத்திரிகைகளிலெல்லாம் எங்கள் ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் அறிக்கைகள் மூலம் உறுமிக்கொண்டிருந்த தலைவர் ஆனந்தசங்கரிக்கு என்ன நடந்தது? சத்தத்தையே காணவில்லையே. டெலோ? ஈ.பி.ஆர்.எல்.எப்? புளொட்? இராணுவத்தின் தயவு கொண்டு முகாம்கள்தோறும் அட்டகாசமாகத் திரிந்தவர்கள் எல்லாம் இன்று இருந்த இடம் தெரியாமல் அடக்கமாகத் திரிகின்றார்கள். புலிகளை அகற்றிவிட்டால் போதும், ஜனநாயகத்தை நாம் கொண்டு வருவோம் என்று மார்தட்டியவர்களெல்லாம் தென்னிலங்கையின் 'ஜனநாயகம்' கண்டு வாய் மூடி மௌனியாகி விட்டனர். அவர்கள் இனி எந்த அரசியலைச் செய்யலாம்?

"நாங்கள் 13ஆம் திருத்தச்சட்டத்தின் அதிகாரத்திலும் கூடிய அதிகாரங்களைக் (13th amendment plus) கொண்டு தருவோம்" என்று கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இன்று ஜனாதிபதி கொண்டுவந்த 18வது திருத்தச் சட்டத்துடன் எங்கள் 13வது திருத்தச்சட்டம் மைனஸில் நிற்கும் இந்தத் தருணத்தில் ஏன் அதைப் பற்றி வாய் திறக்கிறாரில்லை? ஆயுதப் போராட்ட அரசியலில் நாம் இறங்கியது தவறு, விட்டுக்கொடுப்பு அரசியல்தான் ஒரே வழி என ஒரே கூறிக்கொண்டிருந்தவரின் நிலைமை இன்று உண்மையில் கவலைக்கிடமாக மாறிவிட்டது. அரசாங்கத்தை ஒண்டிக்கொண்டு அமைச்சர் பதவியை தக்கவைத்து அதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் காட்டிக் காட்டி அரசியலில் ஒதுங்கலாம் என்று கடைசியாக அவர் நினைத்த நினைப்பிலும் இப்பொழுது மண் விழுந்து விட்டது. இன்று இலங்கையில் எந்த அபிவிருத்தித் திட்டமும் ஜனாதிபதியின் அலுவலகத்தின் மூலம், அவர் நியமிக்கும் அவருடைய சகோதரர்களின் நிர்வாகத்தின் கீழேயே செயற்படுத்தப் படலாம் என்று தீர்மானமாகி விட்டது. வடக்கில் எந்தத் திட்டமானாலும் சரி, ஜனாதிபதிச் செயலணியின் அனுமதியின்றி தீர்மானிக்கப்படவும் முடியாது நிறைவேற்றப்படவும் முடியாது. கிழக்கிலும் பிரதேச சபை அலுவலகங்களுக்குக்கூட திரு பசில் ராஜபக்ஸ விஜயம் செய்து 'திட்டங்களைப் பார்வையிடுகிறார்'. சரி சரி, இனி என்ன செய்வது, ஜனாதிபதி திட்டங்களைத் தரட்டும், நாம் அவற்றிற்கு தபால்காரனாக இருந்து அவற்றை விநியோகம் செய்தாவது பிழைப்பைக் கொண்டுபோவோம் என்று யோசிக்க ஆரம்பித்தவுடன் அதற்கும் வைத்தார்கள் ஆப்பு. இறக்கினார்கள் கே.பியை. அரசாங்கத்தின் ஆதரவுடன் களமிறக்கப்படுகின்ற வேட்பாளர் தான் வெல்லும் சாத்தியக்கூறுகள் கொண்ட அரசியல் சூழலை ஏற்படுத்தி, அந்த வேட்பாளரைத் தீர்மானிக்கும் சகல அதிகாரங்களும் பொருந்தியவர்களும் தாமே என்பதையும் சூசகமாக உணர்த்த ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த அரசியலை விளங்குவதற்கு பெரிய வித்துவானாக நாம் இருக்கத் தேவையில்லை. விடுதலைப் புலிகளைப் பற்றிய புனைவுத் தகவல்களைத் தருவதற்கும், அவர்களின் அங்கத்தவர்களைக் கொல்வதற்கும், தமிழ் மக்களை அச்சுறுத்தி அடக்குவதற்கும், அரசியல் நிலைமையைத் தேவையில்லாமல் குழப்பி ஒருவிதமான தீர்வினையும் எட்ட விடாமல் செய்வதற்குமே இந்தத் தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்துக்குத் தேவையாக இருந்தன. இன்று அந்தத் தேவை மறைந்து விட்டது. இனி தமது கைப்பொம்மையாக இயங்கக்கூடிய தமிழ் பிரதிநிதித்துவம்தான் அரசாங்கத்தின் தேவை. வடக்கு கிழக்கினை நிரந்தரமாகப் பிரித்து வைக்கும் பிரதிநிதித்துவமாகவும் அது இருக்க வேண்டும். அதுவும் தனது கட்சி மூலம் ஒரு காலத்தில் வளரக்கூடிய பெரிய சக்தியாக மாறும் வாய்ப்புக்களையும் வேரோடு ஒழிக்க வேண்டும். அதற்காகத்தான் இத்தனை நகர்வுகளையும் அரசாங்கம் மேற்கொண்டது. கருணாவைக் கொணர்ந்து கிழக்கில் தலையாட்டிப் பொம்மையாக வைத்தது. பிள்ளையானையும் கருணாவையும் எதிரும் புதிருமாக வைத்ததன் மூலம் இதில் எவரும் தலை தூக்க முடியாத நிலைமையைக் கொண்டு வந்தது. திரு. டக்ளஸ் தேவானந்தாவை வெற்றிலைச் சின்னத்தில் தேர்தல் கேட்க வைத்ததும் இந்த நோக்கத்துடன்தான். வடக்கில் அவரை ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாக வளர விடவும் கூடாதென்பதனால் கே.பி, ஸ்ரீரங்கா இன்னும் யார் யாரோ. இனி ஈ.பி.டிபியும் காலாவதியான கட்சிதானோ.

முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையும் இதே கதைதான். அவர்களுடைய தென்கிழக்கு அலகைப் பற்றிப் பேச வேண்டாம். அம்பாறை மாவட்டத்தில் பறி போய்க் கொண்டிருக்கும் நிலங்களைப் பற்றிக்கூட பேச இப்பொழுது ஆளில்லை. எப்படியோ.. ஒவ்வொரு மூலையாக சிதறி நின்ற பலபேர் நாங்கள் (தமிழ்ப்பொதுமக்கள், முஸ்லிம் பொதுமக்கள், ஜே.வி.பி அரசாங்கத்திற்கு ஆதரவான தமிழ்க்கட்சிகள்) இன்று இந்த இழப்பினால் இழந்தவர்கள் என்கின்ற ஓரணி சேர்ந்திருக்கின்றோம். இந்த ஒற்றுமை ஒரு நன்மைதானே. எங்களுக்குள் இரங்கல் நிகழ்த்துவது சரி. அதன்மூலமான வரலாற்றுப்பாடங்களை இப்பொழுதாவது கற்றுக்கொண்டிருக்கின்றோமா ?

**வன்னியில்** யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை புனரமைக்க முன்வந்துள்ள கொரிய அரசாங்கம் ஏராளமான பாடசாலைகளை மீண்டும் கட்டியெழுப்ப பல பில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்காக கொரிய தூதுக்குழு ஒன்று வன்னி சென்று திரும்பியுள்ளது. குய்கா எனும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த பாடசாலைகள் அடிப்படை வசதிகளுடன் மீண்டும் கட்டியெழுப்பபடவுள்ளது.

என்.ராஜா

**கிளிநொச்சி** மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 500 மாணவர்களுக்கு 'நற்பண்புகளை வளர்ப்போம் என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி செயலகத்தின் சமூக சேவை பிரிவின் சிசு செவிய வேலைத்திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி பட்டறை ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது. வெளிமாவட்டத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட வளவாளர்களைக் கொண்டு நடாத்தப்பட்ட இப் பயிற்சிப் பட்டறையில் கல்வி பொதுத்தராதர சாதாரண மற்றும் உயர்தர மாணவர்கள் பங்குபற்றினர்.

என்.ராஜா

**'சுகாதார** சேவையின் பிரதிபலன்கள் நாட்டில் உள்ள சகல பிரஜைகளுக்கும் கிடைக்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். அண்மையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற தாதியர் நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்தோடு நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் அரச சேவையினரின் சேவைகள் உரிய வகையில் கிடைக்கப் பெற வேண்டும் என்றும் தேக நலத்துடன் வாழும் மக்களின் பங்களிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரிதும் சக்தியளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

என். ராஜா

**ஏ - 9 வீதியில்** அமைந்துள்ள முறிகண்டி பிள்ளையார் ஆலய நிர்வாகத்தை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அதன் பரம்பரை வழி தர்மகர்த்தாவான ஜி. மணிவண்ணனால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு அண்மையில் உயர்நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த மனு தொடர்பான விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி நடத்துவதற்கு உயர் நீதி மன்றம் தீர்மானித்துள்ளது. இந்த ஆலய நிர்வாகம் இந்து சமய நிர்வாக திணைக்களத்தின் நிர்வாகத்தில் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், தற்போதைய ஆலய நிர்வாகமும் அதன் சூழலும் வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், எனவே அதனை மீண்டும் பரம்பரை வழி தர்மகர்த்தாவான தம்மிடம் திருப்பி ஒப்படைக்குமாறும் உத்தரவிட கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக ஆலயத்திற்கு அருகாமையில் விருந்தகம் ஒன்று தற்சமயம் நிர்மாணிக்கப்பட்டு வருவதும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

என். ராஜா

# கிளிநொச்சி இரத்தினபுரம் மக்களை வெளியேற உத்தரவு!



**வன்னிப்போர்** முடிவடைந்து அண்மையில்தான் மீள்குடியேறிய கிளிநொச்சி இரத்தினபுரம் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு இலங்கை இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர். அக்கிராமத்தில் நீண்டகாலமாக குடியிருந்த மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளதால் மக்கள் என்ன செய்வதெனத் தெரியாமல் குழப்பத்தில் உள்ளனர். இரத்தினபுரம் சிங்களப் பாடசாலைக்குப் பின்புறமாக, குடும்பம் ஒன்றுக்கு தலா கால் ஏக்கர் நிலத்தை அரசாங்கம் வழங்கியிருந்தது. அந்நிலத்தில் கடந்த 1994 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த குடும்பங்கள் வசித்து வந்தன. கடந்த ஆண்டு போரில் இடம்பெயர்ந்த அவர்கள் தற்போது மீண்டும் தமது இடங்களுக்கு வந்து வாழ்க்கையைத் தொடங்கியிருக்கும் இச்சமயத்தில் அவர்களை இராணுவம் துரத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. கிட்டத்தட்ட 18 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்விடயத்தில் உரியவர்கள் தலையிட்டு தமக்கு நல்ல தீர்வை வழங்க வேண்டும் என்று அம்மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

கிளிநொச்சி பொன்னகர் மக்களின் தற்காலிக கொட்டகைகளில் மழைவெள்ளம்!

தங்கள் சொந்த வீடுகளுக்குள் சென்ற மக்களை இராணுவத்தினர் விரட்டினர்.

கிளிநொச்சியில் உள்ள பொன்னகர் கிராம மக்களின் தற்காலிக கொட்டகைகளில் மழைவெள்ளம் நிரம்பியதனால் கண்ணெதிரே உள்ள தங்கள் சொந்த வீடுகளுக்குள் வாழப் புகுந்த மக்கள் இராணுவத்தினரால் விரட்டப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். வன்னியில் பருவமழை பெய்துவரும் நிலையில் தற்காலிக கொட்டகைகளில் வாழும் மக்களின் வாழ்க்கை அவலநிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. பொன்னகரில் தாங்கள் ஏற்கனவே வாழ்ந்த சொந்த வீடுகளில் மக்கள் வாழ அனுமதிக்கப்படாமல் அந்த வீடுகளைப் பார்த்தபடியே முன்னால் தற்காலிக கொட்டகைகளில் வாழும் அவலநிலை தொடரும் நிலையில், மழை இவர்களின் வாழ்க்கையை மேலும் அவலநிலைக்கு உள்ளாக்கியிருக்கிறுக்கிறது. இவர்களின் வீடுகள் சேறும் சகதியுமாக காணப்படுகின்றது. குழந்தைகளும் வயோதிபர்களும் விறைப்பினால் அவதிப்படுகின்றனர். பற்றைக்காடுகளுக்குள் தற்காலிக கொட்டகைகள் இருப்பதால் விச ஜந்துகளின் ஆபத்து காணப்படுகின்றது. அரச மற்றும் அரசோடு சார்ந்த யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் நடவடிக்கைகளினால் தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக அண்மையில் இந்த மக்களின் அவலங்களை பார்வையிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் மக்கள் தெரிவித்தனர். தாம் தங்கள் சொந்த வீடுகளுக்குள் செல்ல விரைவில் நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் மேலும் கேட்டுக் கொண்டனர்.

இந்த நிலையில் இன்று மழைத்தாக்கத்தினால் தற்காலிக கொட்டகைகளில் வாழ முடியாத சூழ்நிலையில் 51 குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் அரச நிர்வாக விடுதிகளுக்கென பறிக்கப்பட்டுள்ள தாங்கள் சொந்த வீடுகளுக்குள் வாழ்வதற்கு புகுந்தவேளையில் இராணுத்தினரால் மக்கள் விரட்டப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். பொன்னகர் மக்களின் சொந்த வீடுகள் அரசவிடுதியென்ற பேரில் வர்ணம் அடிக்கப்பட்டுள்ளன. மக்களோ ஏதிலிகளாக கண்ணீர் வடிக்கின்றனர்.



# செய்திச் சிதறல்கள்.

## சேவா நிறுவனத்தின் ஆண்டு நிறைவு விழா



**கல்முனை** சேனைக் குடியிருப்பு சேவா நிறுவனத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பத்துப் பேருக்கு கௌரவம் வழங்கப்பட்டது. கல்முனை திரு. இருதய நாதர் மண்டபத்தில் சேவா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கந்தையா சத்திய நாதன் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமல்வீர திஸாநாயக்கா பிரதம அதிதியாகவும், சிரேஷ்ட தொழிற்பயிற்சி நிபுணர் ராம லிங்கம் சிவப்பிரகாசம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண் டனர். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப் பாளர் டாக்டர் கே. முருகானந் தம், நாவிதன்வெளி, திருக் கோவில், ஆலையடி வேம்பு, கல்முனை தமிழ்ப் பிரிவு போன்ற பிரதேச செயலாளர்களான எம்.கோபாலரட்ணம், வ. அழகரத்தினம், வே. ஜெக தீசன், கே. லவநாதன், கல் முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் அதிபர் அருட் சகோதரர் ஸ்ரீபன் மத்தியூ, பொறியியலாளர் - சுகாதார வைத்திய அதிகாரி திருமதி. ராஜேந்திரா, உதவிக் கல்விப் பணிப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாலரு மான வி.கே. சகாதேவராசா, ஊடகவியளாளர் யூ.எம். ஸ்ஹாக் போன்றோர் பொன் னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டனர்.

[illegible]

## பலாலி - காங்கேசன்துறை வீதி அகலிப்பு: பொதுமக்களுக்கு விளக்கம்

**யாழ்ப்பாணம்** - பலாலி வீதி மற்றும் காங்கேசன்துறை வீதி ஆகியவற்றை அகற்றும் பணி தொடர்பாக அந்த வீதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு உரிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டங்கள் நல்லூர் பிரதேச செயலாளர் செந்தில் நந்தனன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது வீதிகளில் இரு மருங்கிலும் இருக்கும் வீட்டு உரிமையாளர்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. வீதியில் மத்தியிலிருந்து 23 அடி வரையில் வீதி புதிதாக அகலப்படுத்தப்படவிருப்பதாக இதன்போது பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வீதியில் மத்தியிலிருந்து 23 அடிக்கு உட்பட்ட பகுதிக்குள் இருக்கும் வீட்டு மதில்கள் மற்றும் பிற கட்டுமானங்களை அகற்றுமாறு வீட்டு உரிமையாளர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அகற்றப் படும் மதில்கள் மீளவும் வீட்டு உரிமையாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த எல்லைக்குள் இருக்கும் வீட்டுக் கட்டுமானங்கள் எதுவும் அகற்றப்பட நேர்ந்தால் அதற்குரிய நட்ட ஈடு எதுவும் வழங்கப்பட மாட்டாது என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை காங்கேசன்துறை வீதி அகலிப்புக் காரணமாக யாழ் நகருக்குச் சமீபமாக அந்த வீதியிலுள்ள பல புராதன கட்டிடங்கள் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வண்ணை சிவன் கோவிலின் ஒரு பகுதி, நாவலர் வித்தியாசாலை முன்புறக் கட்டிடம், யாழ் இந்துக் கல்லூரியின் புராதன பிரார்த்தனை மண்டபத்தின் ஒரு பகுதி என்பன இதன்போது அகற்றப்படவேண்டி ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கொழும்பின் மையப் பகுதி

### சீன நிறுவனத்திடம் ஒப்படைப்பு

**கொழும்பில்** முக்கிய பகுதியைச் சீனாவிடம் இலங்கை கையளிக்க உள்ளதாக ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியிருந்தார். அதேபோலவே கொழும்பின் மையப் பகுதியில் பெருமளவு நிலப்பரப்பை சீன நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைப் பதற்கு முடிவு செய்துள்ள அரசாங்கம் அதற்கான ஒப் பந்தத்தையும் கடந்த வாரம் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கையின் நிதியமைச்சில் வைத்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. குறித்த கொழும்பின் பகுதியில் உலகின் முன்னணி சுற்றுலாக் கைத்தொழில் நிறுவனங்களில் ஒன்றான சீனாவின் சாங்கிரிலா நிறுவனம் 450 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யவுள்ளது. இரு தரப்பினருக்கும் இடையிலான இந்த ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கைப் படைத் தலைமையகம் உள்ள இப்பகுதியில் பிரமாண்டமான உல்லாச விடுதியொன்றையும் இந்நிறுவனம் அமைக்கவுள்ளது. தற்போது சீனாவின் கைகளில் சென்றுள்ள பகுதியில் அமைந்துள்ள படைத்தலைமையகம் உட்பட முப்படைகளின் தலைமையகங்களும் பத்தரமுல்லைப் பிரதேசத்தில் உள்ள அக்குராகொடப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய கட்டிடத் தொகுதிக்கு மாற்றப்படவுள்ளன. இந்த முப்படைகளின் தலைமையகங்களை அகற்றுவதன் மூலம் சுமார் 500 ஏக்கர் காணியை அபிவிருத்தி தேவைகளுக்காக பயன்படுத்தலாம் என்றும் அரசு கூறியுள்ளது.

## புலிகள் பதுங்கிய இடத்தில் யானைகள்

**யுத்த** காலத்தின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் யுத்த தளமாக காணப்பட்ட முல்லைத்தீவு காட்டுப் பகுதியில் வனவிலங்கு தேசிய பூங்கா ஒன்றினை அமைக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்த வனவிலங்கு தேசிய பூங்காவானது மனிதருக்கும் யானைகளுக்கும் இடையில் காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழியாக அமையும் எனவும் சுமார் 100, 000 ஏக்கர் பரப்பில் இந்த வனவிலங்குத் தேசிய பூங்கா அமைக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அண்மைக்காலமாக பல பிரதேசங்களில் யானைகள் விவசாய நிலங்களைச் சேதப்படுத்துவதும் மக்களைத் தாக்கும் நிலை காணப் பட்டு வருவதனாலேயும் இத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கையில் 1900 ஆம் ஆண்டில் 12,000 யானைகள் காணப் பட்டதாகவும் தற்போது 4000 யானைகளே காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தமிழ்ச்செல்வன் பயன்படுத்திய கணனி முள்ளிவாய்க்காலில் மீட்பு: லக்பிம தகவல்

**விமானப்** படையினரின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி பலியான தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பயன் படுத்திய லப்டொப் கணனி மீட்டெடுக்கப் பட்டுள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. குறித்த லப்டொப் கணனியுடன் பெருந்தொகைப் பணமும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட கணனியில் அரசியல் பணிமனையில் காணப்பட்ட இரகசிய தகவல்கள் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. குறித்த லப்டொப் கணனியும் பணமும் முல்லைத்தீவு மாவட்டத்தின் வெள்ளமுள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளன. தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் குறித்த பொருட்கள் மீட்டெடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது..

### SMS

ஆசிரியர் - ஏன் என் வகுப்புக்கு கலர் கலரா நூல் வாங்கிக்கொண்டு வந்து வச்சிருக்க?
மாணவன் - நீங்கதானே சேர் சொன்னீங்க? உங்க வீட்டில் இருக்கிற நல்ல நூல்களை நாளைக்கு பாடசாலைக்கு வரும்போது கொண்டு வாங்க எண்டு...!

■ பாலா சங்குபிள்ளை

# படி தாண்டிய பஞ்சவர்ணம்

"யாரிடம் கேட்கிறாய் வரி... யாரிடம் கேட்கிறாய் வட்டி...? எங்களுடன் வயலுக்கு வந்தாயா? நீர் இறைத்தாயா? அல்லது கொஞ்சி விளையாடும் எங்களூர்ப் பெண்களுக்கு மஞ்சள் அறைத்தாயா? அல்லது மாமனா... மச்சானா...?"

திடீரென வெளியே கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே தொலைக்காட்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் படம் பார்த்துக் கொண்டிருந்த பஞ்சவர்ணம் எரிச்சலுடன் எழுந்து வந்து கதவைத் திறந்தாள். வெளியே அவள் கணவன் வெள்ளைச்சாமி நின்றிருந்தான்.

"ஏய்யா... நிம்மதியா ஒரு வீரனோட படத்தை பார்த்துக்கிட்டிருந்தா நீ பாட்டுக்கு நேரம் கெட்ட நேரத்தில வந்து கதவைத் தட்டுறியே... நாளைக்குக் காலையில எங்கப்பன் வீட்டுக்குப் போகணும்னுறதை மறந்திட்டியா..."

வழமைப் போலவே அச்சத்தால் பொந்தில் ஒளியும் எலி மாதிரி கிலி பிடித்தவனாக தலை கவிழ்ந்தவாறு வெள்ளைச்சாமி முணு முணுக்கத் தொடங்கினான்.

"எனக்கு ஞாபகம் இருக்கு... பஞ்சு... கிளினிக்ல கொஞ்சம் கூட்டம் அதிகம். அதுதான்"

"ஆமாமா இவரு பெரிய வைத்தியரு பாரு. கூட்டம் குமியிது. எங்கப்பன் கிட்ட நீ டொக்டர் சொன்னதைக் கேட்டு நான் டொக்குன்னு தலையை ஆட்டிட்டேன். ஆனா கழுத்தில தாலியேறினப்புறம் தானே தெரியும்.. நீ மருந்து குடுக்கிறவனில்லை... மருந்து கலக்கிறவன்னு... கட்டப்பொம்மன்னு நினைச்சி கட்டவண்டிக் காரன்கிட்டயில்லையா மாட்டிக்கிட்டேன். சரி... போகட்டும்னு உன்னோட குப்பை கொட்டினதுக்குப் பரிசா அடுத்தடுத்து நாலு பொம்பளைப் புள்ளங்களாய்ப் போயிடுச்சி. உன்னை நம்பி நான் எப்படி இதுகளை கரையேத்துவேன்? அதனாலதான் முடிவு செஞ்சிட்டேன். எங்கப்பனுக்கு என்னோட சேர்த்து மூணு பொம்புளைப் புள்ளைங்க. நான் மூத்தவ. அப்பா இருக்கிற வீட்டை வித்தா ரொக்கமா பெரிய தொகை கிடைக்கும். அதை வைச்சி நாலு பேரையும் கரை சேத்திடலாம். சாகப் பொழைக்கக் கிடக்கும் எங்கப்பனுக்கு மூத்த மருமகன்னுற உரிமையில நீயும் நானும் சரியா நடந்துக்கிட்டா சொத்தைக் கைப்பற்றிடலாம். என்னோட நகைகளை அடகு வச்சி கனிசமான பணம் புரட்டியிருக்கேன். மற்றவர்களை அண்டவிடாம அனைத்து வேலைகளையும் அழகாக செஞ்சிட்டா அந்த சொத்து நமக்குத்தான். அதையாவது ஒழுங்கா செய்வியா...?"



"மனைவி சொல்லே மந்திரம்னு உன் காலைச் சுற்றி வாரேன். உன் கட்டளையைக் கரெக்டா வில்லங்கமில்லாம செஞ்சிடுவேன். மாமாவை விட்டு அசையவே மாட்டேன். காரியத்தைக் கச்சிதமா முடிச்சிடுவேன்..."

"ஆமா இடியப்பம் செஞ்சித்தாரேன்னு சொல்லி என் இடுப்பை உடைக்கப் போனவன்தானே நீ...

> **அந்த வீடு நம்ம கைக்கு வரும் வரைக்கும் நான் சொல்றபடி கேட்டு நடக்கணும். எங்கப்பன் பக்கத்துக்கு யாரையும் நெருங்கவிடக் கூடாது. சொத்துக்காக, கொஞ்ச நாளைக்கு சோகத்தையெல்லாம் மூட்டைக் கட்டி வைச்சிட்டு முழு மூச்சாப் பாடுபடணும். அப்பதான் ஆனந்தமா இருக்கலாம். வெளங்குதா...?"**

மண்ணாங்கட்டியாயிருந்தாலும் பராவாயில்லை மறதிக் காரனான உன்னைக் கட்டிக்கிட்டு நான் மாரடிச்சுக்கிட்டிருக்கேன். போன வாரம் பக்கத்து வீட்டு பொடிமல்லிக்கிட்ட மூக்குப் பொடி வாங்கிட்டு வாரேன்னு போய் அடுத்த வீட்டு மல்லிகா கிட்ட பாக்குப் பொட்டலம் இருக்கான்னு கேட்டிருக்க. இளையவன் ஈஸ்வரிய ஸ்கூல்ல விட்டுட்டு போக சொன்னா ஆஸ்பத்திரில எட்மிட் பண்ணீட்டு போற. உன்னோட பெரிய கஷ்டமா போயிருச்சி சரி... சரி... நான் சொல்லுறதைக் நல்லா கேட்டுக்கோ. அந்த வீடு நம்ம கைக்கு வரும் வரைக்கும் நான் சொல்றபடி கேட்டு நடக்கணும். எங்கப்பன் பக்கத்துக்கு யாரையும் நெருங்கவிடக் கூடாது. சொத்துக்காக, கொஞ்ச நாளைக்கு சொகத்தையெல்லாம் மூட்டைக் கட்டி வைச்சிட்டு முழு மூச்சாப் பாடுபடணும். அப்பதான் ஆனந்தமா இருக்கலாம். வெளங்குதா...?"

ஆயிற்று - அடுத்தநாள் மூட்டை முடிச்சுகளுடன் பஞ்சவர்ணம் தன் தகப்பன் வேலுவின் வீட்டை நோக்கிப் படையெடுத்தபோது ஏற்கனவே அங்கே அவளின் மற்ற சகோதரிகளான புஸ்பாவும் புனிதாவும் தங்களின் கணவன்மார்களான சுப்பு மற்றும் சுந்தரம் ஆகியோருடன் முற்றுகையிட்டிருந்தனர். அந்த வீடு, தோட்டப் பாதை முடியும் இடத்தில் அமைந்திருந்தது. வேலு தோட்டத்தில் கணக்குப்பிள்ளையாக வேலை செய்தபோது கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்திருந்த பணத்தில் அந்த வீட்டை வாங்கியிருந்தான். பஞ்சவர்ணத்திற்கு முன்பே மற்ற சகோதரிகள் பிறந்த வீட்டை வந்தடைந்திருந்தமையானது அவளுக்கு எரிச்சலையும் சினத்தையும் தோற்றுவித்தது. மணம் முடித்த நாளிலிருந்து, மறந்தும் பிறந்த வீட்டில் காலடி எடுத்து வைக்காதவள், சொத்து கைமாறிவிடக் கூடாது என்பதற்காக படி தாண்டினாள். ஆனால் இடி மாதிரி



இவர்களல்லவா இங்கே முந்திக்கொண்டு வந்திருக்கிறார்கள்...

அவள் தன் கணவனை கண் சாடையினால் அழைத்தாள்.

"என்ன மனுஷனய்யா... நீ... மச மசன்னு நிற்காம மூத்த மருமகன்னுற உரிமையில தாட் பூட்- ன்னு சுத்திக்கிட்டு மாமனாரைக் கவனிக்க வேணாமா. செக்கு மாடு மாதிரி என்னையே சுத்தி சுத்தி வந்தா சொத்து கை மாறிடும்... ஓடு... ஓடு..."

வெள்ளைச்சாமி கொண்டு வந்த மூட்டை முடிச்சுக்களையெல்லாம் 'தொப்'பென்று கீழே போட்டுவிட்டு உள்ளே ஓடினான். வேலு மரக்கட்டை போல கட்டிலில் கிடக்க அவன் மனைவி வள்ளி மூத்த மாப்பிள்ளையைக் கண்டதும் மரியாதையுடன் ஒதுங்கினாள்.

"வாங்க மாப்பிள்ளை... டாக்டர் சொல்லிட்டாரு... இன்னும் ரெண்டு நாள்தான் தாங்குமாம். இந்த வீட்டைப் பற்றிக் கடைசியா ஏதோ சொன்னாரு. ஒன்னுமே விளங்கல்லை"

"ஐயோ மாமி... கடைசியா எங்களுக்குத்தான் வீடுன்னு சொல்லியிருப்பாரு... நீங்க எல்லாருக் கிட்டேயும் அப்படியே சொல்லிடுங்க. நீங்க சாகிற வரைக்கும் வாய் நிறைய வெற்றிலையும் வயிறு நிறைய சாப்பாடும் போடுறேன். இது மட்டும் சரியா நடக்கலைன்னா என் மனிசி வாழ் நாள் முழுவதும் என்னை மாட்டுப்பட்டியில போட்டு புல்லும் புண்ணாக்கும் குடுத்தே சாவடிச்சிடுவா"

"இல்ல மாப்பிள்ளை இந்த வீடு மேலே..."

"ஐயோ மாமி வீட்டு மேலே பூனையிருந்தாலென்ன யானையேயிருந்தாதான் என்ன... ஆணையிட்டுச் சொல்லுறேன். என் மீசையில மண் பட்டாலும் பரவாயில்லை. இந்த வீடு எனக்குத் தான் சொந்தமாகனும்..."

"சரி மாப்பிள்ளை. உங்க ஆசை இதுவாகயிருக்கும் போது நான் எதச் சொல்லி என்னதான் நடக்கப் போகுது..."

ஆயிற்று - பஞ்சவர்ணம் வந்த மூன்றாவது நாள். வேலுவின் உயிர் பிரிந்தது. சாவதற்கு முன் தன் மூத்த மருமகன் வெள்ளைசாமியை அருகே வரச் சொல்லி என்னவோ கூற முயன்றான். காற்று தான் வந்தது. ஓசை வரவேயில்லை. யாரையும் அருகே வரவிடாமல் வேலுவுக்கு அனைத்தையும் அவனே செய்தான். சில

> **ஒரு மனுஷனுக்குக் கஷ்டம் வந்தா பெற்ற பிள்ளைகளே ஒடிப்போற காலத்தில அப்பா சாகப் போற நேரத்தில யாரையும் எதிர்பார்க்காம எல்லாத்தையும் தலையில போட்டுக்கிட்டு எல்லா செலவும் செஞ்சிருக் கீங்க.**

வேளைகளில் கட்டிலிலேயே வேலு எல்லாவற்றையும் முடித்துவிடும் போது வெள்ளைச் சாமி மூக்கைப் பொத்திக்கொண்டு சுத்தம் செய்தான்.

வேலுவின் காரியங்களை பஞ்சவர்ணம், தனியாளாக நின்று யாருக்கும் விட்டுக் கொடுக்காமல் எல்லா செலவுகளையும் செய்தாள். இறாலைப் போட்டுச் சுறாவைப் பிடிப்பதற்காக இரவு பகலாகக் கண் விழித்துக் கஷ்டப்பட்டாள். அவளின் மற்ற சகோதரிகள் இனி எதைப் பேசியோ போராடியோ எதுவும் நடக்கப்போவதில்லையென்பதை நன்கு தெரிந்துகொண்டமையால் சத்தமில்லாமல் இருந்து விட்டார்கள். காரியம் முடிந்து நான்காவது நாள், வீடு இனி அவர்களுக்குத்தானென்று உறுதியான நிலையில், குதூகலத்துடனிருந்த பஞ்சவர்ணத்தைத் தேடி அந்த மூன்று பேரும் வந்தார்கள்.

"நீங்கதானே இறந்துபோன வேலுவோட மூத்த மகள் பஞ்சவர்ணம்?"

"ஆமா... நீங்கல்லாம் யாரு...?"

"நான் வங்கி முகாமையாளர். இவங்க ரெண்டுபேரும் உங்க அப்பாவுக்கு வேண்டியவங்க..."

"சரி... என்ன விஷயம்? எதுக்காக என்னப் பாக்க வந்திருக்கீங்க...?"

"ஒரு மனுஷனுக்குக் கஷ்டம் வந்தா பெற்ற பிள்ளைகளே ஓடிப்போற காலத்தில அப்பா சாகப் போற நேரத்தில யாரையும் எதிர்பார்க்காம எல்லாத்தையும் தலையில போட்டுக்கிட்டு எல்லா செலவும் செஞ்சிருக்கீங்க. இந்த வீடு அவரோட இறப்புக்குப் அப்புறம் மூத்தவங்களான உங்களுக்குத்தான் சொந்தம்ன்னு உயில் எழுதி எங்களோட வங்கி வாடிக்கையாளர்ன்னுற முறையில எங்கக்கிட்ட குடுத்து வச்சதுமில்லாம உங்களோட மற்ற சகோதரிகள் கல்யாணத்துக்காக அதே வீட்டுப் பேர்ல கடன் வாங்கினாரு. இவங்க ரெண்டு பேரும்தான் பிணைக்காக கையெழுத்துப் போட்டாங்க. இப்ப அசல் வட்டியெல்லாம் சேர்த்து வீட்டோட மதிப்புக்கு அதிகமா போயிடுச்சி. வீட்டை இவங்க ரெண்டுபேரும் வாங்க ரெடியா இருந்தாலும் மிச்சப் பணம் நாலு லட்சத்தையும் உயில்படி நீங்க சொந்தக்காரரா இருக்கிறபடியால நீங்கதான் கட்ட வேண்டியிருக்குது... எப்ப எங்களோட வங்கிக்கு வாரீங்கன்னு சொன்னா டொக்குமென்ஸை ரெடி பண்ணிடுவோம்..."

அவர் சொல்லிக்கொண்டே போக சும்மாயிருக்க முடியாமல் சொத்துக்காக சும்மாயிருந்த கோடரியை காலில் போட்டுக் கொண்டு வலியினால் சத்தம் போடவும் முடியாமல் பஞ்சவர்ணம் 'தொப்' பெனக் கீழே விழவும், அவள் கணவன் வெள்ளைச்சாமி என்ன சத்தம் என்று பார்ப்பதற்காக ஓடி வந்தவன் மனைவி விழுந்துகிடந்ததைக் கண்டதும் இதுவும் சொத்துக்கான நாடகமோவென எண்ணி அவர்களிடம் என்னவெல்லாமோ உளறிக்கொண்டிருந்தான்.

-யாவும் கற்பனை-

# முட்டாள் மாற மாட்டான்

-குட்டிக் கதை -





ஒரு முதியவருக்கு உடல் நிலை சரியில்லை. அவரை பரிசோதித்த மருத்துவர் மருந்துகள் எழுதித் தந்தார். முதியவரின் வேலையாள் மருந்து வாங்கி வர புறப்பட்டான். இரவு நேரம். வேலையாள் ஒரு மருந்து கடை திறந்திருப்பதைக் கண்டான். மருந்து வாங்கினான். மருந்துகளின் மொத்த விலை 800 ரூபாய். வேலையாள் 1000 ரூபாய் தாளைத் தந்தான்.

"என்னிடம் சில்லறை இல்லியேப்பா.. மிச்சம் 200 ரூபா நாளைகாலையில வந்து

வாங்கிக்கொள்வாயா?" என்றார் வைத்தியர்.

"சரிங்க..." என்று புறப்பட்ட வேலையாள் அந்த மருந்து கடை எதிரில் ஓர் எருமைமாடு நிற்பதைப் பார்த்தான். அதையே இந்தக் கடையிருக்கும் இடமாக அடையாளமாக மனதில் பதிய வைத்துக் கொண்டான்.

மறுநாள் காலை அந்த தெருவுக்கு வந்தான். அப்போது எருமை மாடு நின்று கொண்டிருந்த இடத்துக்கு எதிரில் இருந்த கடையில் நுழைந்தான்.

"ஏங்க நான் இரவு மருந்து வாங்கினேன். நீங்கள் 200 ரூபா மிச்சம் தரணும்"

கடைக்காரர், "நீங்க கடை மாறி வந்திட்டீங்க. இது மளிகைக் கடை. மருந்து கடையில்லை" என்றார்.

"அட 200 ரூபாயை ஏமாற்றி வாங்க மருந்து கடையை இரவோடிரவா மளிகைக்கடையா மாத்திட்டீங்களா"

"அட யார்யா இது.. இது ரொம்ப வருஷமா மளிகைக் கடை தான். நேற்று இரவு நீ என்னையா பார்த்தாய்?

"இத பார்யா. நீ தாடி ஒட்டி வச்சிக்கிட்டு வேஷம் போட்டாலும் என்னை ஏமாற்ற முடியாது. எடு 200 ரூபாயை.."

"இது என்னடா வம்பு. நான் பல வருஷமா தாடி வச்சிருக்கேன். இது நிஜ தாடி. நம்பு. இரவு நீ இங்கு வரவில்லை. அது வேறு கடையாக இருக்கும். நல்லா யோசித்துப் பார்"

வேலையாள் திடீரென பாய்ந்து கடைக்காரரின் தாடியைப் பிடித்து இழுத்தான். தாடி கையோடு வரவேண்டும் என்பது அவனது நம்பிக்கை. வரவில்லை. இருந்தும் அந்த வேலையாள் "இங்க பாருங்க நீங்க 200 ரூபாய் தர வேண்டாம். இரவோடிரவா மருந்துக்

கடையை மளிகைக் கடையா மாற்றியது எப்படி எண்டும் சொல்ல வேண்டாம். ஆனால் ஒரே

இரவில் எப்படி இப்படி தாடி வளர்த்தீங்க...? அத மட்டும் தயவு செய்து சொல்லிடுங்க" என்றான்.

# பெய்யெனப் பெய்யா மழை....

நேத்தி மட்டும் கோடிகள் கேட்டு
சாமியின்
காணிக்கை மட்டும்
வெட்ட வெட்ட வளரும்
முடிதானா...?

போரை எதிர்க்கும் யாப்பு
அணுதடுப்பு ஒப்பந்தம்
பிறகெதற்கு பீரங்கித் தொழிற்சாலை...?

அம்மனுக்கு உடை
பன்னையுக்குத் திரைச்சீலை
இரசிக்கிறேன்
கோவணம் இல்லாமல் நான்...!


பொன்னி அரிசி
மொட்டைக்கறுப்பன் நெல்
ஒரு மாத விளைச்சல் தான்
ஆனால்
நிலம் நிறைந்த கட்டிடம்
எங்கே போய் பயிர் செய்ய...?

குளிர் நிலா
சில்லிடும் மழைத்தூறல்
கண்களைச் சுரண்டுகிறது தூக்கம்
விடில்லை
எங்கே போய் தூங்குவது...

சூரிய அடுப்பு
சோறாக்க மின் சட்டி
விஞ்ஞானமே நன்றி உனக்கு
ஆனால்
சோத்துக்கு அரிசி இல்லையே...

மட்டுவில் ஞானகுமாரன்

நூலகம்
... தமிழ்ச் சங்க...



# ஒன்ன நெனைக்காம

## ஒருபொழுதும் போனதில்ல

எங்கோ மலர்ந்திருந்து
எனக்குள்ளே மணம்பவளே...
நெலவே ஒன்னால
நெலமறந்து நிக்கேன்டி...

கலபேசும் கண்ணால
வலைவீசிப் போனவளே...
நாளும்போன நெனச்சி
வாழுதடி ஏ... உசுரு...

பாகக்கா இனிக்குதடி...
பால்புக்க கசக்குதடி...
ஒன்ன நெனச்சாக்கா
ஒலகமெலாம் வெறுக்குதடி

முதுங்கப்பு பல்லழகே
முட்டநிற தோலழகே
கஸ்தூரி பாக்குற
கரும்புதட்டுக் காரிகையே...

சோலகள் பிச்சிற
சோக்கான ஒழுங்கில
ஏமனச முடிஞ்சதும்
ஏமாத்தி போய்விடவா...

ஆசவழிஞ்சிடுச்சா
அன்புத்தீ நூர்ந்திடுச்சா
காசக் கண்ட மனம்
காதலை மாத்திடுச்சா...

அன்டுநீ சொன்னதெல்லாம்
அடிநெஞ்சில் கேக்குதடி...
இன்டு அதநெனச்சி
இதயஅற கொளருதடி...

பகலிரவாய் கதச்சதெல்லாம்
பழயகத ஆகிடுமா..?
நாம்கதச்சி கொண்டதெல்லாம்
நீ மறந்து போகிடுமா...?

பிரியத்த வெதச்சிட்டு
பிஞ்சிலேயே பிச்சபுள்ள
நெஞ்சமுத்த வெச்சி
நெனப்பெல்லாம் தீயானாய்...

'சினேகா' சிரிப்பினிலே
சிறகடிச்சு நான்பறந்து
'சல்மான்' கனவுகளில்
சாஞ்சகத நெனப்பிருக்கு

காசித் திமிரோடுக
கட்டழகி நீபோக
எட்டா பழமென்டு
என்னியது நெனப்பிருக்கு...

ஏங்கவித நீபடிச்சி
ஏக்கமுடன் தூதனுப்ப
'ஆம்ஸ்ரோங்காய்' நானன்று
ஆனதெல்லாம் நெனப்பிருக்கு....

பாடம் புத்தகத்த
படிக்கிறத்த நான்விடுத்து
பலதடவ மடலில்
படிச்சதெல்லாம் நெனப்பிருக்கு...

'டயசனுக்கே' நாமொருநாள்
'டிமிக்கி' குடுத்துபுட்டு
காதலில புதுப்பாடம்
கற்றதெல்லாம் நெனப்பிருக்கு...

நான்தின்ன நீதின்ன
நம்மிதழ தேன்தின்ன
சின்னவிழி சொக்கி
சிணுங்கியது நெனப்பிருக்கு...

விழிகளில மீன்புடிச்சி
விரல்களில சுளுக்கெடுத்து
ராத்திரியில் நாம்செய்த
ரகசியங்கள் நெனப்பிருக்கு...

வீட்டார் இதஅறிஞ்சி
வீணாக ஒனக்கடிக்க
புழுவா நாந்துடிச்சி
புழுங்கியது நெனப்பிருக்கு...

அவலிவெத அரச்சி
ஆத்திரமாய் நீதின்ன
அலறி நாந்துடிச்சி
ஒஞ்சியது நெனப்பிருக்கு....

ஒன்னப்பாத்துவர
ஒறவில் மனசுவர..
நாம்பொரசி நானுழுந்து
நடுங்கியது நெனப்பிருக்கு...

கொழந்த மனசழிஞ்சும்
கொரல்வய முறிச்சவளே..
எல்லாம் நெனப்பிருக்கு
என்னெப்பு ஒனக்கிருக்கா...

ஒன்ன நெனைக்காம
ஒருபொழுதும் போனதில
ஏய்புள்ள... நீசொல்லு...
என்னொனக்கு நெனப்பிருக்கா...?

-கவிஞர் பொத்துவில் அஸ்மின் -



சிவ. பாக்கியராஜா

# ஒரு காலம் குருதி... இப்போது கண்ணீர்!

ஒரு காலம் குருதி சிந்தப்பட்ட நிலத்தில் இப்போது கண்ணீர் சிந்தப்படுகிறது. சிந்தப்படுவதைப் பொறுத்து கண்ணீரும் குருதியும் ஒன்றுதான். இரண்டுக்கும் நிறம்தான் வேறுபடுகிறதே தவிர அர்த்தத்தில் இரண்டும் ஒன்றுதான். இரண்டுமே துக்கத்தையும் வேதனையையுமே தருகிறது.

குருதி சிந்திய மக்கள் இப்போது கண்ணீரோடு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற பெயரில் நடத்தப்பட்டு வரும் விசாரணைகளின் முன்னே நிற்கிறார்கள். இப்படி நிற்பதென்பது அவமானகரமான ஒரு நிலைமையா? அல்லது நிர்க்கதியான நிலைமையால் ஏற்பட்டிருக்கும் தவிர்க்க முடியாத ஒரு கட்டமா? அல்லது இப்படி நின்றுதான் நீதியைப் பெற வேண்டும் என்றதொரு விதியா? அல்லது இந்த விசாரணைகள் நம்பிக்கையாகவே ஒரு நல்ல தீர்வையும் நல்ல நிவாரணத்தையும் தருமா?

இவை எதைப் பற்றியும் தீர்க்கமாகத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் ஒருவரைப் பார்த்து ஒருவராக இந்த விசாரணைக்குழுவின் முன்னே போய் தங்கள் பிரச்சினைகளையும் முறைப்பாடுகளையும் தெரிவிக்கிறார்கள். இதைத் தவிர இந்த மக்களுக்கு வேறு வழியேயில்லை. வேறு யாரிடந்தான் தங்கள் பிரச்சினைகளையும் மனக்குறைகளையும் சொல்லமுடியும்? இந்த உலகத்தில் வேறு யாரதான் இந்த மக்களின் குரல்களைக் கேட்கிறார்கள்?

ஐம்பது ஆண்டுகளாக உரிமைக்காகப் போராடிய ஒரு சமூகம் இப்போது தண்டனையை அனுபவித்துக்கொண்டு நிர்க்கதியாக நிற்கிறது. வீரமும் தியாகமும் நிறமிழந்து போக அவற்றின் சாரமிழந்து போக பிரகடனங்களும் முழக்கங்களும் அர்த்தமற்றுப் போக வழியேதுமற்றவர்களாக மக்கள் வெட்ட வெளியில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். இது தவறுகளுக்கான அறுவடையா? அல்லது தண்டனைகளுக்கான பரிசா என்று தெரியாத நிலையில்தான் பலரும் தடுமாறுகிறார்கள். குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பே விசாரணையையும் செய்கிறது. கொலைகாரனே நீதிவானாக நிற்கிறான் என்கிறது சமகால நிலவரம்.

இன ஒதுக்கலின் பொழுது நிலவிய மௌனத்தை விட, போரின்போது காக்கப்பட்ட மௌனத்தை விட இப்போதும் காக்கப்படும் மௌனம் இருக்கிறதே இதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் பெரிய அவமானம். இதுதான் சர்வதேச சமூகத்தின் மிகப் பெரிய கொடுமை. குற்றங்களில் பங்காளிகளாக இருக்கும் தரப்பு குற்றமிழைக்கக் காரணமாக இருந்த தரப்பு விசாரணை செய்கிறது. அந்தத் தரப்பின் முன்னே பாதிக்கப்பட்ட மக்கள் கண்ணீருடன் நின்று முறையிடுகிறார்கள். தங்களின் ஆற்றாமைகளை வெளிப்படுத்துகிறார்கள். உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில் நடப்பது நாடகமல்லவா!

இது இரத்தமும் தசையுமான ஒரு பிரச்சினை. மக்களின் வாழ்க்கையோடு சம்மந்தப்பட்ட ஒரு விவகாரம் என்ற புரிதல் உலகத்துக்கில்லை. உலகத்தின் இலாப நட்டக் கணக்குகளில் இந்த மக்கள் பெறுமதியற்றவர்கள். எனவே இவர்களின் கண்ணீரும் குருதியும் பெறுமதியற்றது. குற்றங்களின் பங்காளிகள் அந்தப் பங்குகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரு உபாய வலையை விரித்திருக்கிறார்கள்.

இது மனிதாபிமானம், நீதிக்கான விசாரணை, நியாயத்தை நிலைநிறுத்துவதற்கான ஏற்பாடு என்று சொல்லிக் கொண்டு அவர்கள் தங்கள் குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வகுத்துக் கொண்ட ஒரு முயற்சியே. ஒரு புத்திசாதுரியமான நடவடிக்கையே! இல்லையென்றால் மிகமோசமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது?

குற்றவாளியே நீதிமன்றை நடத்தும் காரியம் நடக்கிறது. இதை உலகம் ஏற்றிருக்கிறது. குற்றவாளியே விசாரணை செய்கிறார்... இதை உலகம் அங்கீகரிக்கிறது. ஆனால் வேறு வழியின்றி இந்த மக்கள் அந்த வலைகளில் வீழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இதைத் தவிர தங்களின் துயரங்களைத் தீர்ப்பதற்கு என்ன வழியென்று தெரியவில்லை அவர்களுக்கு. தங்களின் பிரச்சினைகளுக்கு என்ன தீர்வென்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை அவர்களால். ஆனால் தாங்கள் மிக நெருக்கடியான நிலையில் தள்ளப்பட்டிருக்கிறோம் என்று மட்டும் உணர்ந்திருக்கிறார்கள். உலகத்தில் எவரும் தங்களுக்காகக் கைகொடுக்க மாட்டார்கள் என்று அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். என்றபடியால்தான் அவர்கள் இந்தக் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணைக் குழுவிடம் போய் தங்கள் கதைகளைச் சொல்கிறார்கள். தங்கள் நிர்க்கதி நிலையைப்பற்றி விவரிக்கிறார்கள். தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றியும் அநீதிகளைப் பற்றியும் முறையிடுகிறார்கள்.

இப்படி முறையிட்டாலும் அதற்கு எந்தப் பரிகாரமும் கிடைக்கப் போவதில்லை என்று அறிந்து கொண்டே இதைச் செய்கிறார்கள். ஆனால் வேறு மார்க்கமில்லாத நிலையில் - தங்களின் துயரங்களுக்கும் விடை தெரியாத பல நிலைமைகளுக்கும் வேறு தீர்வுகள் இல்லாத பட்சத்தில் - அவர்கள் இந்த விசாரணைக் குழுவிடம் செல்கிறார்கள். ஏனெனில் மக்கள் நம்பிக்கை கொள்ளும்படியாக இலங்கை அரசாங்கம் நியமித்த எந்தக் குழுக்களும் இதுவரை செயற்படவில்லை. இப்பொழுது இந்தக் குழுவும் கூட அப்படி நேர்மையாகச் செயற்படும் என்பதற்கான எந்த உத்தரவாதங்களும் இல்லை. எந்தச் சமிக்ஞையும் இல்லை. மட்டுமல்ல இந்த விசாரணைக்குழுவில் சனங்கள் நம்பிக்கை கொள்ளத்தக்கதாக எந்தத் தமிழரும் சேர்த்துக் கொள்ளப்படவுமில்லை. எந்த முஸ்லிமும் இணைத்துக் கொள்ளப்படவில்லை. அத்துடன் இலங்கைத் தீவில் இன ஐக்கியத்துக்காக உழைத்தவராகவோ நடந்த அநீதிகளுக்கு எதிராக நின்றவராகவோ எல்லாச் சமூகங்களின் மதிப்பையும் பெற்றவராகவோ செயற்பட்ட - நீதிவானாக நியாயவானாக



அடையாளங் காணப்பட்ட எவரும் கூட இந்தக் குழுவில் இல்லை.

ஆனாலும் மக்கள் சென்று இந்த விசாரணைக்குழுவிடம் முறையிடுகிறார்கள். கேள்வி கேட்கிறார்கள். கண்ணீர் விட்டுக் கதறுகிறார்கள். யார் குற்றவாளிகள், என்னவெல்லாம் நடந்தன என்று சொல்கிறார்கள்..... அதாவது உண்மையை உரைக்கிறார்கள். உண்மைகளைச் சொல்லும்போது அடக்கப்பட்டிருந்த துயரம் பீறிட்டுக் கிளம்புகிறது. உண்மையை உரைக்கும்போது எப்போதும் மனம் நெகிழ்ந்து விடுகிறது. குறிப்பாக உண்மையைச் சொல்வோரின் மனம் கரைகிறது. ஆனால் உண்மைகளைக் கேட்பவர்களின் மனம் எல்லாம் அப்படி இருந்து விடுவதில்லை. அது ஏளனம் செய்யும், அல்லது கல்லாகவே சமைந்து விடும் அல்லது சொல்லப்படும் உண்மையைத் தந்திரமாகப் புறக்கணித்து விடும். இங்கே இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் மனம் எப்படி இருக்கிறது?

ஆயிரக்கணக்கான மக்கள் ஆணைக்குழு செல்லுமிடமெல்லாம் கூடி நின்று தங்கள் கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள். தங்களின் குமுறல்களைக் கொட்டுகிறார்கள். நெஞ்சிலே தீ மூண்டெரிய நீண்ட நேரம் காத்திருக்கிறார்கள். அதிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்களின் மனைவிமாரும் முக்கிய தலைவர்களின் துணைவியரும் கண்ணீர் மல்க நின்று தங்கள் முறைப்பாட்டைப் பதிவு செய்கிறார்கள். போரின்போது படையினரிடம் சரணடைந்த தங்களின் கணவர் எங்கே என்று இவர்கள் கேட்கின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் - பகிரங்கமாகவே சரணடைந்தவர்கள் இந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள்.

விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளராக இருந்த இராசையா இளந்திரையன், புலிகளின் முன்னாள் சர்வதேசப் பொறுப்பாளராக இருந்த லோறன்ஸ் திலகர், தளபதி லோறன்ஸ் கவிஞர் புதுவை இரத்தினதுரை, முக்கிய உறுப்பினர் தங்கன், பாலகுமாரன், அரசியற்துறையின் துணைப் பொறுப்பாளர் தங்கன், தொலைக்காட்சிப் பொறுப்பாளர் திலகன், பிரேஸ் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த ரவி, அரசியற் துறையைச் சேர்ந்த எழிலன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, புலிகளின் முக்கியஸ்தர் யோ. யோகி, யாழ் மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பில் இருந்த இளம்பரிதி, நிதித்துறையைச் சேர்ந்த குட்டி, தமிழீழ வைப்பகத்தின் மேலாளர் வீரத்தேவன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், தளபதி பிரபா ... இப்படி ஒரு நீண்ட பட்டியலில் உள்ள பெயர்கள் - ஆட்கள் சரணடைந்த பின்னர் எங்கேயென்று தெரியாமல் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

சரணடைந்த நாள் முதல் இன்றுவரையில் அவர்களைப் பற்றிய எந்தத் தகவல்களும் இந்தக் குடும்பங்களுக்கு இல்லை. இவர்களைப் பற்றி அறிவதற்காக எங்கெல்லாமோ அலைந்து தலைந்து திரிந்தபோதும் எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் அவர்கள் அங்கே இருக்கிறார்கள். இங்கே தடுக்கப்பட்டிருக்கிறார்கள். இரகசியமாக இடம் மாற்றப்படுகிறார்கள். படையினருடன் சேர்ந்திருக்கிறாகள் என்று பலவகையான ஊகங்கள் சொல்லப்படுகிறதே தவிர உருப்படியான எந்தத் தகவல்களும் இல்லை. கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகவே சிறையில் இருப்போர் சிறையில் வழக்குத் தொடுக்காத காரணத்தினால் விடுவிக்கப்படாதோர்... வெள்ளைவானில் வந்தோரால் கடத்தப்பட்டவர்கள்... இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டவர்கள் முள்ளிவாய்க்காலில் சாவின் விளிம்பு வரை சென்று வந்தவர்கள்.... இப்படி பலதரப்பினரின் முறைப்பாடுகள்.... கொத்துக் குண்டு வீச்சைப் பற்றி கடலில் வைத்துச் சுடப்பட்டதைப் பற்றி பாதுகாப்புத்தேடிச் செல்லும்போது தடுத்ததைப் பற்றி விமானக்குண்டு வீச்சைப்பற்றி மீளக்குடியேற அனுமதிக்காததைப் பற்றி....இப்படிப் பல முறைப்பாடுகள்....

இதேவேளை இறுதிப் போரின்போது சரணடைந்த மேலும் பல ஆயிரக்கணக்கான இளவயதினரும் இன்றுவரை இருக்கும் இடம் தெரியாமலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் 16 தொடக்கம் 22 வயதுக்குட்பட்டவர்கள். பலர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தவர்கள். இதிலும் பலர் தொடர்ந்து படிக்க வேண்டியவர்கள். இவர்களைப் பற்றிய விவரம் தெரியாமலே இவர்களின் பெற்றோர்கள் கண்ணீர் விடுகிறார்கள். அந்தக் கண்ணீரோடுதான் தங்கள் முறைப்பாடுகளைச் சொல்கிறார்கள். இது தனியே காணாமற் போனவர்களைக் கண்டறியும் குழுவல்ல தான். அல்லது காணாமற்போனவர்களின் விவரங்களைக் கண்டறிவதற்கான தரப்பும் அல்ல. சரணடைந்தவர்களை மீட்கும் குழுவாகவும் இது இல்லைதான். ஆனாலும் தங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? தங்கள் கணவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே? என்று எந்தத் தகவலும் தெரியாமல் இருப்பவர்கள் வேறு வழியின்றி இந்தக்குழுவிடம் முறைப்பாடுகளைப் பதிவு செய்கிறார்கள்.

இந்த விசாரணைக்குழு எல்லாவற்றையும் பதிவு செய்கிறது. அழிவுகளை, இழப்புகளை, மீட்கவேண்டிய ஊர்களை, சொத்துகளைப் பற்றிய விவரங்களை என போரின் விளைவுகள் சம்மந்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் உண்மைகளையும் பதிவு செய்யும் பணியைத் தன்னுள் கொண்டிருப்பதால் எல்லாவற்றையும் பதிவாக்குகிறது. ஆனால் இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். மக்கள் எல்லோரும் கண்ணீருடன் நின்றே தங்கள் முறைப்பாடுகளைச் செய்கிறார்கள். ஆகவே இதைக் கண்ணீரால் முறையிடப்படும் முறைப்பாடுகள் என்றே சொல்லவேண்டும். இந்தக் கண்ணீருக்கு என்ன பதில்?

கறுப்போ, சிவப்போ, நல்லதோ, கெட்டதோ இந்த மக்களின் உளவியலுக்கு இப்போது இந்த முறைப்பாடுகள் அவசியமானவையாகவே இருக்கின்றன. எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான விசாரணைக்குழுவின் முன்னே வந்து மக்கள் சாட்சியமளிக்கிறார்கள்.

சனங்களைப் பொறுத்தவரை ஒரு சிறு துளி ஒளியாவது தங்களைச் சூழ்ந்துள்ள இருளின் முன்னே தோன்றாதா என்றுதான் சிந்திக்கிறார்கள். போர் ஓய்ந்து விட்டது. குருதியோடவில்லை. தினக் கொலைகள் நடக்கவில்லை. போரினால் வரும் மரணத்தைப் பற்றிய அச்சம் இல்லை. இரவிலும் பகலிலும் வீட்டுக்குள் பயத்தோடு முடங்கவேண்டியதில்லை. போக்குவரத்துக்குத் தடையில்லை. பொருட்களை வாங்குவதற்குக் கட்டுப்பாடுகள் இல்லை.

ஆனால் சனங்களுடைய கண்ணீர் வற்றவில்லை. துக்கம் தீரவில்லை. அலைச்சல் ஓயவில்லை. மனதில் அமைதி தோன்றவில்லை. நம்பிக்கைகள் வளரவில்லை. போரின் விளைவுகள் துயரமாக மாறியிருக்கின்றன. தோல்வியின் பரிசுகள் கண்ணீராகவே ஆகியிருக்கின்றன. இந்தக் கண்ணீருக்குள்தான் எல்லாவற்றையும் தேடவேண்டியிருக்கிறது.

உறவுளை, அன்பை, மனிதாபி மானத்தை, கருணையை, நீதியை, நியாயத்தை, இழப்பீடுகளை நிவாரணத்தை எதிர் காலத்தை நம்பிக்கையை.....மகிழ்ச்சியை..... எல்லாம் கிடைக்குமா?

நன்றி: பொங்குதமிழ்

கிடைச்சிருக்கு
கிடைச்சிருக்கு
கிடைச்சிருக்கு
கிடைச்சிருக்கு
நான் அனுப்புற SMS ஐ படிக்க
ஒரு LOOSU கிடைச்சிருக்கு

ஹா.. ஹா.. ஹா.



**பிரபா**

# யாழ்ப்பாணத்துத் திராட்சையும் ஏழை விவசாயிகளின் எதிர்பார்ப்பும்...



ஜெயக்காந்தன்

பழங்களைக் கண்டாலே எங்கள் நாவில் நீர் ஊறும். அதுவும் திராட்சைப் பழமென்றால் சொல்லவே தேவையில்லை. கொத்துக் கொத்தாகத் தொங்கும் திராட்சைப் பழங்கள் பார்வைக்கு அழகாகவும் சுவைக்க இனிமையானதாகவும் இருக்கும். வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பழவகைகளைவிட நம்நாட்டுப் பழங்களுக்கென்று தனி மவுசு இருக்கத்தான் செய்கிறது. அதுவும் யாழ்ப்பாணத்துத் திராட்சையென்றால் அதன் புளிப்புக்கலந்த சுவையே தனிரகம்.

இன்று அதிகளவான சுற்றுலாப் பயணிகளை யாழ்நோக்கி வரும் விடயங்களில் திராட்சைப்பழமும் ஒன்றாகிவிட்டது. நம் நாட்டில் வேறெந்தப் பகுதியையும் விட யாழ் மண்ணில் விளைகின்ற திராட்சையின் சுவை வித்தியாசமானது. அம் மண்ணுக்கே உரிய தனித்துவத்தோடு விளைகின்ற இப்பழ வகையை நாடி சுற்றுலாப் பயணிகள் செல்வதால் வியாபாரம் நன்கு சூடுபிடித்திருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

தை மற்றும் புரட்டாதி என இரு பருவங்களில் திராட்சை விளையும். திராட்சை உற்பத்தி என்பது மிகவும் சிரமமான காரியம். பிறந்த குழந்தையைப் பராமரிப்பதைப் போல கண்ணும் கருத்துமாக பராமரிக்க வேண்டும். அத்தோடு அறுவடை செய்யும்வரை செவழித்துக்கொண்டே இருந்தால்தான் விளைச்சலைப் பெறலாம் என்பது உற்பத்தியாளர்களின் கருத்து.

அண்மையில் நாங்கள் யாழ்ப்பாணம் சென்றபோது வழியில் திராட்சைத் தோட்டங்களைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. திராட்சைக் கொடிகளின் வளர்ச்சி வேலிகளுக்கு மேலாக அடர்த்தியாகப் பரவியிருந்தது. வேறு பறவையினங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக வலை போடப்பட்டு, பாதுகாப்புடன் அழகாக காட்சியளித்தன. இதில் கொத்துக்கொத்தாக திராட்சைப்பழங்கள் பச்சை மற்றும் மரூண் நிறங்களில் காய்த்துக் குலுங்கின. திராட்சை பழத்துக்கு எவ்வளவு மவுசோ அதேபோலத்தான் அதன் உரிமையாளர்களுக்கும் மவுசு அதிகமாக காணப்பட்டது. தோட்டம் தோட்டமாக தேடியதில் எமது கண்ணுக்கு சிக்கியவர் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த 34 வயதுடைய ஜெயக்காந்தன் என்பவர்தான்.

இவர் பத்து வருட காலமாக பத்து ஏக்கர் நிலப்பரப்பில் திராட்சை உற்பத்தியை மேற்கொண்டு வருகிறார். எம் கையில் கமராவைக் கண்டதுமே சற்று பின்வாங்கினார். காரணத்தைக் கேட்டபோது திராட்சைத் தோட்டத்தை படம் பிடித்தால் விளைச்சல் குறைந்து விடுமாம். இது தோட்ட உரிமையாளர்களது ஐதீகம். (அவரது கண்டிப்பான உத்தரவையும் மீறி அவரது கண்களுக்கு அகப்படாமல் ஓரிரண்டு படங்களையும் எங்கள் கமராக்களில் சுட்டுக் கொண்டது வேறுகதை) திராட்சைத் தோட்டத்துக்குள் காலணிகளுடன் வரக்கூடாது என்ற அவருடைய கடுமையான உத்தரவுக்குப் பணிந்து திராட்சைத் தோட்டத்துக்குள் நுழைந்தோம்.

"போன முறை மழை எண்டதால போட்ட முதலை எடுக்க முடியாமல் போய்ட்டு. இந்த முறைதான் எடுத்தன். இந்தப் பயிர்ச் செய்கையில பெரிசா எதுவும் லாபம் காண முடியாது. நாங்க இதப் பராமரிக்கிறதுக்காக செலவிடும் தொகைய விடக் குறைவான தொகையையே எடுக்கிறம். இத நாங்க பராமரிக்கிறதென்டா முதல்ல கிடங்கு வெட்டிக், குழை போட்டுப் பிறகு எரு போட்டுத் தான் கன்று வைக்க வேணும். வைச்ச உடனே உரம் போடணும். பிறகு சைட் கிட்டுகள் வளரவிடாமல் பார்க்கணும். வளர்த்த பிறகு பந்தல்ல விட வேணும். பந்தல்ல விடும்போதும் உரம் போட வேணும். மருந்தடிக்க வேணும். கிழமையில ஒரு மூன்று நாலு தடவ நீர் இறைக்க வேண்டும். ஒவ்வொரு இறைப்புக்கும் மருந்து அடிக்க வேண்டும். நோய்கள் ஏதும் அதுக்கிருந்தா அதுக்கு வேறு மருந்து மாத்தியடிக்க வேணும். மழைக் காலத்தில கராவலைகள், வெள்ளைப் பங்கஸ் எண்டு பல நோய்கள் வரும். அவ்வேளையில் முதல் அதுக்கு யூரியா போடணும். பின்னர் வெட்டும் நேரம் 4,000 ரூபா பெறுமதியான 'ஸ்பெசல் கலவை' என்ற ஒரு கலவை கடைகளில் இருக்கிறது. அதை போடவேண்டும்" என்று அவர் திராட்சைப்பழ செய்கையைப் பற்றி சர்வசாதாரணமாக விபரித்துக் கொண்டே போனார். இந்தச் சின்னப் பழத்துக்கு இவ்வளவு கஷ்டப்படவேண்டுமா என்று வியந்தேன்.


திராட்சை பயிரிட்டு விளைச்சலைப் பெற எட்டு மாதங்கள் காத்திருக்க வேண்டுமாகையால் அவர்கள் இதை மட்டும் நம்பி வாழமுடியாது. வேறு ஏதாவது தொழிலையும் செய்யவேண்டும். இதற்கு ஜெயக்காந்தன் ஒன்றும் விதிவிலக்கல்ல. வேறு பல தோட்ட வேலைகளையும் பார்த்தவாறு இதனையும் கவனித்து வருகிறார்.


"இப்ப கொடி படரும்போது அத வெட்டணும். கொடி வெட்ட மற்றும் அறுவடைக்கு 3 அல்லது 4 பேர் தேவை. அவர்களுக்கு 600 ரூபா சம்பளம் கொடுக்கவேணும். ஒரு கொடியில நிலைமைய பொறுத்து 1500, 2000, 3000 கிலோ என எடுக்கலாம். இதப் பராமரிக்கிறதுக்கு நாங்க லோன் எடுத்துத்தான் செய்யவேணும். இருந்தும் விளைச்சல் எடுக்க முந்தி மழை வந்தால் போட்ட முதல் எடுக்க முடியாமப் போயிடும்" என கவலையோடு கூறினார்.

குறிப்பாக கராவல், வெள்ளைப் பங்கஸ் போன்ற நோய்கள் தோன்றுமிடத்து திராட்சைகள் வெடித்துவிடும். அதாவது கராவல் என்ற ஒரு வைரஸ் இனம் அப் பழங்களை எச்சில்படுத்தி விட்டுச் சென்றால் அப் பழங்கள் மழை சிறிது தூறினாலும் வெடித்து விடும். பின்னர் அப் பழங்களை வேறு வழியில்லாமல் ஒதுக்கிவிடுவார்கள். அவ்வாறான நேரத்தில் அவர்கள் போட்ட முதலை எடுக்க முடியாமல் நஷ்டப்படவேண்டி ஏற்படும். இவ்வாறு அவர்கள் எத்தனையோ இன்னல்களுக்கு முகம் கொடுத்து இறுதி நேரத்தில் மழை வந்துவிடுமோ என்ற அச்சத்தில் குறைவான பழங்களுடனேயே அவற்றை வெட்டி எடுத்து விடுவார்கள். அவ்வாறு பழுதடைந்து விழுந்துகிடந்த பழக்கொப்புகளை எம்மிடம் காட்டும்போது எமக்கே மனவருத்தமாக இருந்தது.

விற்பனை பற்றி கேட்டபோது...

"முந்தி இந்தப் பழங்களையெல்லாம் கொழும்பில கொண்டு போய் விற்று லாபம் எடுத்தம். ஆனால் இப்ப அங்கத்தைய சனம்





எல்லாம் இங்க வாறதால நாங்கள் இங்கயே விக்கிறம்." யுத்தம் முடிவடைந்த பின் இங்க எல்லோரும் வாறாங்க. அதனால் நாங்க கொழும்புக்கு ஏற்றுமதி செய்றது குறைவா இருக்கு. கொழும்பை விட இங்க விலை கூட. அங்க லொறி கூலி எல்லாம் கொடுத்துவர எங்களுக்கு நட்டம். இங்க ஒரு கிலோ 250, 280 க்கு விக்கிது. அங்க 200, 220 க்குதான் விற்பனையாகுது. இப்போ பிரச்சினை இல்லாதபடியால் எல்லாமே நல்லா விலை போகுது. பிரச்சினை இருக்கேக்க தோட்டம் செய்ய ஏலாது. இப்ப இங்கயே குடுக்கிற னாங்க. இப்ப நல்ல யாவாரம் நடக்குது. அதிகமாக இங்கு சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும்தான் வாங்குறாங்க'' என்றார் ஒரு திருப்தியுடன்.

இப்பயிர்செய்கையில் உள்ள பிரச்சினைகள் மற்றும் உதவி கள் பற்றிக் கேட்டபோது...

''யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட 'கொமாண்டோ கம்பி களை' எடுத்து அதன் முள்ளை உரிச்சிட்டு அதுல கொடிகள படர விடுவம். மற்ற கம்பிகள் விரைவில் உக்கிப் போகும். எமக்கு அரசி னால் பெரிதாக உதவிகள் எதுவும் கிடைப்பதில்லை. அண்மையில் விவசாய திணைக்களத்தால கம்பிகள், தூண்கள் எல்லாம் கொடுத்தாங்க. அதுக்கெல்லாம் அவங்களுக்கு தேவையான ஆக்களத்தான் தெரிவுசெய்யிறாங்க. பழங்கள் வெட்ட கூடைகள் கொடுத்தாங்க. அதுவும் எங்களுக்கு கிடைக்கல. பிறகு அவங்கட்ட போய் கதைத்துதான் நான் எடுத்தேன்'' என்றார் ஆதங்கத்துடன்.



இன்று ஏழை விவசாயிகளின் வாழ்வானது இவ்வாறான கெடுபிடிகளைக் கொண்டதாகத்தான் நகர்ந்துகொண்டு இருக்கின் றது. அரசினால் வழங்கப்படும் சில உதவிகள் ஆங்காங்கே முடக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. சிலவேளைகளில் இவ் உதவிகளைப் பெறவேண்டுமானால் விவசாயிகள் மேலதிகாரிக ளுடன் கலந்து பேசிய பிறகே அப் பொருட்களைப் பெற முடியும்.



யுத்தத்தால் பலவாறாக பாதிக்கப்பட்ட அம்மக்கள் இன்று தங்கள் சொந்தக் கால்களில் நிற்பதற்கு முயற்சிக்கின்றனர். அவர் களுக்கு வழங்கப்படும் சிறு உதவிகளில்கூட பாரபட்சம் காட்டப் படுகின்றது. இப்படி இருக்கும்போது குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தினர் பொருளாதாரத்தில் பின்னடைவை நோக்கியே செல்வர். நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்வதாயின் வருவாயைப் பெற்றுத் தரும் ஏழை விவசாயிகளை இனங்கண்டு அவர்களுக் குரிய உதவிகளை பாரபட்சமில்லாமல் முறையாக செய்து கொடுக்க வேண்டியது அரசின் கடமை.

வடமாகாண கமநல சேவைகள் அமைச்சரே.. இது உங்களின் கவனத்திற்கு...


சுதர்ஷினி

# எங்கள் தமிழும்!! எங்கள் வாழ்வும்!!

இன்று தென்னிந்திய சினிமா மோகம் எங்களை முழுவது மாக ஆட்கொண்டிருக்கின்றது. நாங்கள் செய்யும் செயல்களில், பேசும் பேச்சுக்களிலெல்லாம் முழுவதுமாக தென்னிந்திய சினிமா ஒட்டிக்கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. தமிழ்நாட்டுத் தமிழர்களின் மொழிவளம் இன்று எம்மவர் மத்தி யில் பரவிக்கொண்டு வருகின்றது. இந்திய தொலைக்காட்சி அலைவரிசைகள், வானொலி அலைவரிசைகளுடாக பரவி வரும் இந்தியத் தமிழால் எங்கள் தமிழின் வளம் குறைந்து கொண்டே போவதை நீங்கள் புரிந்தும் புரியாமலும் இருந்திருப் பீர்கள்.

இந்திய தமிழர்களின் பேச்சுவழக்கிற்கும் ஈழத்தமிழர் களின் பேச்சுவழக்கிற்கும் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கின் றன. இந்தியாவில் பேசப்படுகின்ற தமிழ் மொழியும் பல பிரதேசங்களில் வேறுபட்டு காணப்படுகின்றது. இதேபோலத் தான் இலங்கையில் பேசப்படும் தமிழ் மொழியும் பிரதேசத் திற்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இந்தியாவில் பேசுகின்ற தமிழுக்கும் ஈழத்தில் நாங்கள் பேசுகின்ற தமிழுக்கு மிடையிலான வித்தியாசங்களை இலகுவாக அடையாளம் காண முடியும். நாங்கள் கதைக்கும்போது நீங்க. வாங்க என இறுதியில் முடிப்பதில்லை. எப்படி இருக்கிறீங்கள்? என்ன சாப்பிட் டீங்கள்? யார் நீங்கள் ? என முழுமையாக நீங்கள் என சொல்லு வோம்.

அது ஒரு வேறுபாடு. உச்சரிப்பில் சிறப்பு என்பது பேசு பவரை வைத்துத்தான் சொல்ல முடியும். 'கொன்னையா' பேசி னாலோ 'கரகரப்பா' பேசினாலோ சிறப்பும் தெரியாது. மொழியின் அழகும் புரியாது. ஆனால் பொதுவாக எங்களுடைய தமிழை தமிழக உடன்பிறப்புகள் மிகவும் சிலாகித்து ரசிப்பார்கள். சொந்த அனுபவத்தில் சொல்கிறேன். தமிழ்நாட்டில் வடபழனி முருகன் கோவிலுக்கு அருகில் ஒரு உணவகம். பெயர் சரியாக ஞாபக மில்லை. சந்தையோடு ஒட்டி இருக்கும். அங்குதான் முதல் முதல் 'லசி' குடித்தேன்.



லசி, ஐஸ்கிறீமுக்கென்று தனிக்கவுண்டர் இருக்கும். அந்தக் கடையில் சர்வராக இருந்த 2 பேர் எங்களுக்குத் தரவேண்டிய சாப்பாட்டை தந்த பிறகும் எங்களுக்கருகில் நிற்பார்கள். என்ன என்று கேட்டால் 'உங்க தமிழில் பேசுங்க.. கேட்க நல்லாருக்கு' என்பார்கள். எங்கட பேச்சுத் தமிழின் சிறப்பு நமது நாட்டை விட்டு வெளியில் வந்த பிறகுதான் விளங்கியது. 'மணித் தமிழம்மா நீங்க பேசுறது' என்பார்கள் அந்த இருவரும். (எங்களுடைய தமிழின் சிறப்புக்காக நானும் இந்தக் கட்டுரையில் இனி எங்கட தமிழிலேயே பேசுறன் என்ன)

அதேபோல் தமிழகத்துக்கு போன புதிசில் கடை கண்ணிக்கு போய் சாமான்கள் வாங்குவதில் சிக்கலடைந்தது முண்டு. புக்கை (பொங்கல்) காய்ச்ச சர்க்கரை கேட்டுப் போனால் சீனியை நிறுத்துக் குடுத்திச்சினம். தேங்காய் கேட்டால் 'எத்தினை பத்தை வேணும்' எண்டிச்சினம். ஒரு முழுத்தேங்காயை துருவி பாலெடுத்து குழம்பு வைக்கிற எங்களுக்கு, ஒரு சின்ன தேங்காய் சொட்டை காட்டி 'இதுதான் தேங்காய் பத்தை' எண்டிச்சினம். பிட்டு அவிக்க அமெரிக்கன் மா அல்லது கோதுமை மா என்று கேட்டால் சப்பாத்தி செய்யிற கோதுமை மாவை தந்திச்சினம். மைதா மா தான் எங்கட அமெரிக்கன் ம ா

அல்லது கோதுமை மாவென்று தெரியிற வரை எங்களுக்கு இராச் சாப்பாடு சோறுதான்.

இதை விட சிரிப்பு என்னெண்டால் பாண் என்று கேட்டால் கண்ணுக்கு முன்னால் வைச்சுக் கொண்டே 'அதெல்லாம் இல்லீங்கம்மா' என்றார்கள். 'அப்ப இதென்ன?' என்று கேட்டால் 'என்ன பொண்ணுமா நீ? இது ரொட்டி' என்றார்கள். நிறையப் பேர் எங்கட முகங்களை பார்த்ததுமே 'சிலோனா?' என்று கேட்பார்கள். என்னதான் பாவாடை, தாவணி, சேலை, மல்லிகைப் பூ என்று அலங்கரித்துக் கொண்டாலும் எங்கட தமிழிலிருந்தே எங்களை துப்பறிந்து விடுவார்கள்.

வேறு சிலர் எங்களை கேரளப்பக்கமிருந்து வந்தவர்களா என்று கேட்டிருக்கிறார்கள். ஏனெண்டால் எங்கட தமிழில் புழங்கிய சில வார்த்தைகள் மலையாளத்திலும் புழக்கத்தில் இருப்பவையாம். அதேபோல திருநெல்வேலி தமிழோ! என்று நினைப்பவர்களுமுண்டு .


எங்கட பேச்சு வழக்கிலும் சரி. நடப்பு முறையிலும் சரி எனக்குப் பிடிச்ச விசயம் நாங்கள் எங்களை விட வயது குறைந்த வர்களைக்கூட ஒருமையில் அழைப்பதில்லை. கணவன் மனைவியையோ அல்லது. தம் பிள்ளைகளைப் பெற்றோரோ 'நீ' என்று ஒருமையில் அழைப்பதில்லை. தமிழகத்தில் எங்கள் அம்மா எங்களை 'நீங்கள்' என்று பேசுவதைப் பார்த்து அதிசயித்தவர்கள் அதிகம். இன்றைக்கும் ''என்னாங்க.. நான் உங்கள விட வயசில் ரொம்ப சின்னவன். என்னைப் போய் நீங்க, வாங்க, போங்கன்னுக்கிட்டு'' என்று கூச்சப்படும், சங்கடப் படும் தமிழக உறவுகள் இருக்கிறார்கள். என்ன செய்யிறது? பழகிப்போன ஒரு விசயத்தை லேசில் விட முடியேலை.

ஆனால் இப்ப புலம் பெயர்வு அதிகரித்த சூழலில் எங்கள் யாழ்ப்பாணத் தமிழின் பேச்சழகும் இயல்பும் மாறியோ அல்லது மருகியோ வருகிறது என்பது மனதுக்கு நெருடலான விசயம் தான். ஒருமையில் அழைப்பதும்கூட ஆங்காங்கே இப்போது புழக்கத்தில் வந்துவிட்டது. இண்டைக்கு கொழும்பில உள்ள தமிழர்கள் கதைப்பதெல்லாம் சுத்தமான தமிழ் இல்லை. எல்லாம் நாசமாய்ப் போட்டுது. தமிங்கிலீசும் தமிங்களமுமாக போய்க் கொண்டிருக்குது எங்கட தமிழ். இப்படியே போனால் எதிர்காலத்தில எங்கள் தமிழின் தொன்மையையும் சிறப்பையும் இழந்து விடுவமோ என பயப்பட வேண்டியுள்ளது.




# Youtube இலிருந்து தேவையான formet க்குப் பதிவிறக்கம் செய்ய

இணையம் பயன்படுத்தினாலே அதில் Youtube தவிர்க்க முடியாது. ஏதாவது ஒரு சமயத்தில் நாம் Youtube இலிருந்து வீடியோவை தரவிறக்கம் செய்வோம். Youtube இலிருந்து டவுன்லோட் செய்ய எவ்வளவோ சொப்ட்வெயார்கள் இருந்தாலும் சற்று வித்தியசமாக இந்த சொப்ட்வெயார் உள்ளது. 4 எம்.பி .கொள்ளளவு கொண்ட இதனை http://www.4shared.com/file/p_XOuc7E/yg_online.htmlஎன்ற link க்குச் சென்று பதிவிறக்கம் செய்யவும். இதை இன்ஸ்டோல் செய்ததும் கீழ்கண்ட விண்டோ ஓப்பின் ஆகும்.





இதில் உள்ள Add பட்டனை கிளிக் செய்து Youtube URL ஐ கொப்பி செய்து இதில் பேஸ்ட் செய்யவும்.




தரவிறக்கம் செய்யப்படும் பைல் எந்த போர்மெட்டில் வேண்டுமோ அந்த போர்மெட்டுக்கு இதில் எளிதில் மாற்றிக்கொள்ளலாம். இது ஆதரிக்கும் போர்மெட்டாக

(1) None (No converting FLV file type)
(2) AVI (Microsoft Windows Media File Type)
(3) WMV (zune/PocketPc File Type)
(4) MOV (Qyuc)Tune Fuke Tme)
(5) MP4(iPod/PSP/MP4 Player File Type)
(6) 3GP(Mobile Phone Video File Type) உள்ளன. 3 ஜ இது ஆதரிப்பதால் செல்போன் மற்றும் ஐ-போட்டுக்கு இதிலிருந்து நேரடியாக பதிவேற்றிக்கொள்ளலாம். அதுபோல சில ஒடியோ பைல்கள் பாடல்களை நாம் கேட்கமட்டுமே முடியும். அதை பதிவிறக்கம் செய்ய முடியாது. அந்த மாதிரியான பாடல்களை இதன் மூலம் எளிதில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அடோப் பிரிமியர் உபயோகிப்பவர்கள் யூ டியூபிலிருந்து பதிவிறக்கம் செய்யும் பாடல்களை பிரிமியரில் நேரடியாக பயன்படுத்தமுடியாது. அந்த சமயங்களில் இந்த சொப்ட்வெயார் மூலம் பைலாக பதிவிறக்கம் செய்து எளிதில்பயன்படுத்திக்கொள்ளலாம்.





ஜோன் மக்ஸ் தயாரிப்பில் உதயநிதி ஸ்டாலின் மற்றும் ஏ.ஜி.எஸ். எண்டர் டைமண்ட் விநியோகிப்பில் வெளிவந்திருக்கும் 'மைனா' தீபாவளிக்கு வெளிவந்த சிறந்த படமாகும். எதிர்பார்ப்புகளிடையே வெளிவந்த இப்படம் ஒட்டு மொத்த எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்திருக்கிறது. பழக்கப்பட்ட கதை என்ற போதும்கூட 'மைனா' தனி முத்திரை பதித்திருக்கிறது. நீண்ட நாட்களுக்குப் பின் உணர்ச்சிப் பூர்வமான, துக்கமான படைப்பொன்றை ரசிகர்களுக்கு தீபாவளி பரிசாக அளித்திருக்கிறார் இயக்குனர் பிரபு சொலமன். கொக்கி, லீ, லாடம் என சொலமனின் முந்தைய படங்கள் வெற்றி பெறாமல் போய்விழனும் அவர் தனது பாணியை மாற்றிக் கொண்டதே இல்லை. சுய திறமையும் படங்களை உருவாக்குவது பற்றிய கண்ணோட்டமும் பிரபு சொலமனுக்கு அதிகமாக இருப்பதை 'மைனா' படம் மூலம் நம்மால் உணர முடிகிறது.

குடித்து குடித்து இறந்து போன அப்பாவால் சின்ன வயதிலேயே குடியிருக்கும் வீடு உள்ளிட்ட சொத்துப்பத்துகளையும், சொந்தபந்தங்களையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும் நாயகிக்கும் அவரது அம்மாவிற்கும் அடைக்கலம் கொடுக்கிறான் சிறுவயது ஹீரோ. பனியாரம் சுட்டு விற்று வயிற்றை கழுவும் நாயகியின் அம்மா நன்றாக படித்தும், நாயகியை படிக்க வைக்க முடியாத சூழல்.

அதனால் நாயகியைத் தானே கூலி வேலையெல்லாம் செய்து படிக்க வைக்கும் நாயகனுக்கு இனம் புரியாத வயதில் இருந்தே நாயகி மீது காதல். நாயகிக்கும் நாயகன் மீது அதே ரக காதல். இது நாயகியின் அம்மாவிற்கு தெரியவருகிறது. அதுவரை வாய்திறந்து ஹீரோவை மருமகனே.. மருமகனே... என அழைத்து வந்த அவர், அதன் பின் காட்டும் எக்ஷனும், ஆக்ரோஷமும், அதற்கு ஹீரோ பண்ணும் ரீ-எக்ஷனும், அதனால் எழும் பிரச்சினைகளும்தான் 'மைனா' படத்தின் மீதிக்கதை.

கிளைமாக்ஸில் சந்தர்ப்பத்தாலும், சூழ்நிலையாலும் அந்த ஜோடிக்கு ஏற்படும் கொடூரம், படம் முடிந்து நீண்ட நேரமாகியும் நம் நெஞ்சை விட்டு நீங்க மறுப்பது படத்தின் வெற்றிக்கு கட்டியம் கூறும் ப்ளஸ் "பொயிண்ட். 'மைனா'வின் நாயகனாக சுருளி எனும் பாத்திரத்தில் 'தொட்டுப்பார்' விதார்த் நம் மனதைத் தொடுகிறார். காட்டான் மாதிரி தலைமுடியும், தாடி மீசையுமாக இருந்தாலும் ரசிகர்கள் நெஞ்சை உலுக்கும் நடிப்பில் ஜுனியர் ராஜ்கிரண் என்று பட்டமே தரலாம் இவருக்கு. அதுவும் தன் காதலுக்காகவும் காதலிக்காகவும் பெற்ற தாய் - தந்தையையே அடிக்க பாயும் இடத்தில் விதார்த் சிறப்பான நடிப்பை விதைத்திருக்கிறார். அதேமாதிரி விபத்துக்குள்ளான பேருந்தில், தன்னையும் தன் காதலையும் குழி தோண்டி புதைக்க நினைக்கும் சிறைக்காவலர்களை காப்பாற்றும் இடத்திலும் சபாஷ் வாங்கி விடுகிறார் விதார்த்.

'மைனா'வாகவே வாழ்ந்திருக்கும் அமலா பால், சிந்து சமவெளியில் விட்டதை இங்கே பிடித்து விட்டார். இவர் அழகான பெண்பால் மட்டுமல்ல, அருமையான நடிப்பாலும் நம்மை தன்வசப்படுத்தி விடுகிறார். கிளைமாக்ஸில் அவருக்கு நிகழும் கொடூரம் கல் நெஞ்சக்காரர்களையும் கரைய வைக்கும்.

விதார்த் - அமலா பால் மாதிரியே ஜெயிலர் பாஸ்கராக வரும் சேது, தம்பி ராமையா, செவ்வாளை, கார்த்திக், பூவிதா, மீனாட்சி உள்ளிட்ட சகலரும் தங்கள் பங்கை சரியாய் செய்திருக்கிறார்கள். அதிலும் 'மைனா'வின் சாவிற்கு காரணமான தன் மனைவி உள்ளிட்ட சொந்தபந்தங்களை போட்டுத் தள்ளும் ஜெயிலர் பாஸ்கராக வரும் சேதுவும், சுருளியின் அன்பில் உருகிப் போகும் தம்பி ராமையாவும் பிரமாதம்.

சுகுமாரின் ஒளிப்பதிவும், டி. இமானின் இசையும் இதுவரை காணாத தமிழ்சினிமாவை கண் முன் நிறுத்துகிறது. இதுதான் கிளைமாக்ஸோ, அதுதான் கிளைமாக்ஸா இருக்குமோ... என எக்கச்சக்கமாக யோசிக்க விட்டு யாருமே யோசிக்காத கோணத்தில் மைனாவுக்கும் சுருளிக்கும் முடிவு கட்டும் கிளைமாக்ஸில் டைரக்டர் பிரபு சொலமன் வித்தியாசமாகத் தெரிகிறார்.

# 'மைனா' பதைபதைக்க வைக்கும் ஒரு காதல் கதை




வழக்கமான தளத்தில் இருந்து இசை அமைப்பாளர் டி. இமான் வேறு களத்திற்கு வந்திருக்கிறார். நிச்சயம் இமானுக்கு இந்தப் படம் திருப்புமுனை தான். "மைனா மைனா..." மற்றும் "நீயும் நானும்..." பாடல்கள் நம்மையும் மீறி முணுமுணுக்க வைக்கின்றன. யுகபாரதி மற்றும் ஏக்நாத்தின் வரிகள் இயற்கைக் கவிதைகளாக அமைந்துள்ளன.

சுகமாரின் ஒளிப்பதிவு கண்களை விட்டு நீங்காமல் நிற்கிறது. பட்டாம்பூச்சி போல நினைத்த இடத்திற்கெல்லாம் பறந்து புகுந்து வெளிவருகிறது சுகுமாரின் கமரா கண்கள். மறுடியும் ஒரு உணர்ச்சி பூர்வமான மதுரை வட்டாரக் கதையை தெளிவாக சொல்லி இருப்பதில் ஜெயித்திருக்கிறார் இயக்குனர் பிரபு சொலமன். தான் உணர்ந்து அனுபவித்த உணர்வுகளை இம்மி பிசகாமல் படமாக்கியிருக்கிறார். படம் பார்த்த ஒவ்வொருவரையும் தன்னைப் போல் உணர வைத்ததே பிரபு சொலமனுக்குக் கிடைத்த வெற்றியாகும். தன்னுடைய படைப்பினை உயிரோட்டமாக்குவதற்கு தேவைப்படும் உணர்வுகளை சொலமன் நன்கு உணர்ந்திருக்கிறார். கதை, அதனை சொல்ல சரியான கதாபாத்திரங்கள், அவைகளுக்கு உயிரளிக்க சரியான உணர்வுகள் என சொலமன் பார்த்துப் பார்த்து படைத்திருக்கிறார்.

இயல்பான கதை, செயற்கையில்லாத கதைக்களம், கதைமாந்தர்கள், கதைக்குள் நகைச்சுவை, ஆழமான, அழகான காதல் என மிக யதார்த்தமாக ஒரு கதையை சொல்வதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் 'மைனா' குழுவினர். இந்த தலைமுறைக்கு உகந்ததாக படம் தோன்றாத போதும், படம் நிச்சயம் வெற்றிபெறும்.

ஆக மொத்தத்தில் 'மைனா' – இனிமை








போய்ஸ் ஹீரோ தெலுங்கு படத்தில நடிக்கிறார். இந்த படத்தில ஹீரோயினோட கிஸ் சீன் இருக்காம். படத்தில இந்த சீன் வைக்க ஐடியா கொடுத்தது இயக்குனர் இல்லையாம். ஹீரோ தானாம்.



ஹீரோயினாத்தான் நடிப்பனென்டு அடம்பிடிச்சிட்டு இருந்தாராம் வாளமீன் நடிகை. இப்ப திடீரெண்டு மனம் மாறி கரக்டர் ரோல்ல நடிக்கிறார். அதுக்கு காரணம் கணவரைப் பிரிஞ்ச சோனிய நடிகைதானாம். 'நமக்கெல்லாம் இனிமே ஹீரோயின் வாய்ப்பு கிடைக்காது. கிடைக்கிற வாய்ப்பை சரியா பயன்படுத்தோணும்' எண்டு வாளமீன் நடிகைக்கு அட்வைஸ் பண்ணினாராம்.



சினிமா வாய்ப்பைப் பிடிக்கிற மாதிரி சில நடிகைகள் விளம்பர வாய்ப்பையும் வலைவீசி பிடிக்கிறாங்களாம். நிறுவன அம்பாசிடர் வேலை கிடைத்தால் கோடியில சம்பாதிக்கலாம் என்று கணக்கு போடுறாங்களாம். இந்த வாய்ப்பு பிடிக்கிற போட்டியில மூனுஷாவும் கொலேஜ்நடிகையும் மும்முரமா இறங்கியிருக்காங்களாம்.



விவாகரத்துக்கு பிறகு மறுபடியும் ஹொலிவூட்டுக்கு வந்தார் சோனி நடிகை. வாய்ப்புகள் கொட்டுமெண்டு நம்பியிருந்தார். ஆனா பெரிசா எதுவும் வாய்ப்பு வராததால மனசு உடைஞ்சிட்டாராம். திரும்ப தெலுங்கு தேசம் பக்கமா சான்ஸ் வேட்டைக்கு போயிருக்கிறாராம்.



சமீப காலமா அதிகமா வெளியில தலை காட்டாம இருந்தார் நமி நடிகை. டயட்டை கடைப்பிடிச்சவரு உடம்பை குறைச்சிட்டாராம். உடம்பை குறைச்சாலும் முகத்தில காணாம போன இளமையை எப்படி கொண்டு வரப்போறார் எண்டு போட்டி நடிகைகள் கிண்டல் பண்றாங்களாம்.

அறிவியல் ரவுண்டப்

## மலட்டுத்தன்மை மற்றும் புற்று நோய்க்கு காரணமாகும் செல்போன்...



இது செல்போன் உலகமாகிவிட்டது. உலகம் முழுவதும் 460 கோடிப்பேர் செல்போன் பயன்படுத்துகின்றனர். செல்போன் பயன்பாடு புற்றுநோயை ஏற்படுத்தும் என ஏற்கெனவே விஞ்ஞானிகள் கூறியிருந்தனர். இந்நிலையில் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் செல்போன் பாவனை மனித குலத்துக்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார். “செல்போன் பயன்பாடு உலக சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. செல்போனில் ஒரு வகை கதிரியக்கம் தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இதனால் மூளையில் உள்ள செல்கள் பாதிப்படைந்து புற்றுநோய் ஏற்படும். இதைத் தவிர உடலில் உள்ள பல்வேறு உறுப்புகளின் இயக்கங்களும் பாதிக்கும். உடலில் உள்ள நுண்ணிய உறுப்புகள் அனைத்தும் பாதிக்கும். ஆண்களுக்கு மலட்டுத் தன்மை ஏற்படும். சுவிட்ச் ஓப் செய்யப்படாத செல்போனைக் காற்சட்டைப் பைகளில் வைத்திருப்பவர்களுக்கு விரைவில் உயிரணு எண்ணிக்கை குறைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் ஆரோக்கியமான எதிர்கால சந்ததிகளை நாம் உருவாக்க முடியாது. இந்த உண்மைகளை மறைக்க செல்போன் நிறுவனங்கள் ஏராளமான பணங்களைச் செலவிட்டு வருகின்றன” என தான் எழுதிய நூலில் வெளியிட்டுள்ளார்.

## குழந்தைகளைப் பாதிக்கும் மூளைக்காய்ச்சல்



மூளையும், நரம்பு மண்டலமும் வைரஸ் கிருமிகளால் பாதிக்கப்பட்டு செயலிழந்து போய்விடும் நிலையே மூளைக் காய்ச்சல் எனப்படுகிறது. இதனால் உயிருக்கே ஆபத்து நேரலாம். நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து சரியான சிகிச்சை அளித்தால் பாதிப்பில் இருந்து மீளலாம். இந்த நோய் பெரும்பாலும் குழந்தைகளுக்குத்தான் ஏற்படுகிறது. மூளைக் காய்ச்சல் நோயால் கை, கால்கள் செயல் இழந்துபோதல், வலிப்பு, கண் பாதிப்பு, காது கேளாமை போன்ற நிரந்தரப் பாதிப்புகளும் ஏற்படலாம். மூளைக் காய்ச்சல் நோய் ஒருவருக்கு உடனடியாகவும் வரலாம். மெதுவாகவும் வரலாம். இதனை சரியான முறையில் அணுகி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

## டீன்ஏஜ் மன அழுத்தத்தை இன்டர்நெட் குறைக்கும்



டீன் ஏஜ் மன அழுத்த நோயாளிகள், இன்டர்நெட் பார்ப்பதால் குணமாகலாம் என்று ஆய்வுகள் கூறுகின்றன. டொக்டர்களிடம் நேரில் ஆலோசனை பெறச் செல்லும் இளைஞர்கள் பல விஷயங்களை தெரிவிக்க மறந்து விடுகின்றனர். இதனால், சிகிச்சை சரியாக அமையாமல் பிரச்சினை நீடிக்கிறது. டொக்டரிடம் நேரில் மன அழுத்த பாதிப்புகளை விளக்குவதைவிட ஒன்லைன் ஆலோசனைத் தளங்களில் பதிவு செய்வது துல்லியமாக இருப்பதால், நிபுணர்கள் அளிக்கும் ஆலோசனைகளால் மனஅழுத்தம் வேகமாக குறைகிறது என்று மேற்படி ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## கருவை பாதிக்கும் வேலைத்தளங்கள்




அணு உலைக் கூடங்கள், இரசாயனத் தொழிற்சாலைகள், இரைச்சலும் அதிர்வும் கூடிய கனரக இயந்திரங்கள், அறுவைச் சிகிச்சையறை சூழல்கள், கதிர்வீச்சு சார்ந்த தொழில்கள் மற்றும் கதிரியக்கச் சிகிச்சைத் துறைகள் ஆகிய இடங்களில் பணிபுரியும் பெண்கள் கருத்தரிக்கும் சூழலில், அவை கருவைப் பாதிக்கின்றன. இதுபோன்ற வேலைத்தளங்களில் வேலை செய்யும் ஆண்களுக்கு உயிர் அணுக்களின் எண்ணிக்கைக் குறைவு, குறைபாடான அணுக்கள், ஆண்மையிழப்பு போன்ற பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. குறிப்பாக கதிர்வீச்சுக்கள், பாதசரம், பென்சீன், காரீயம் போன்ற சில இரசாயனங்கள் உள்ள இடங்களில் வேலை செய்வோருக்கும், மிகுந்த சிரமமும், களைப்பும் ஏற்படுத்தும் வேலைகளைச் செய்வோருக்கும் இந்தப் பாதிப்புக்கள் அதிகம்.

## குழந்தையின்மை பிரச்சினைக்குத் தீர்வு




தற்போது பெண்களுக்கு அதிக அளவில் கர்ப்பப்பை புற்றுநோய் மற்றும் கோளாறுகள் ஏற்படுவதால் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது. இவர்களுக்கு உதவும் வகையில் அமெரிக்காவில் உள்ள புரோன் பல்கலைக்கழகம் மற்றும் பெண்கள் - குழந்தைகள் வைத்தியசாலை மருத்துவ விஞ்ஞானிகள் கூட்டாக ஆய்வு செய்து, உடல் தசையில் இருந்து செயற்கை கர்ப்பப்பையை உருவாக்கி சாதனை புரிந்துள்ளனர். இதை பெண்கள் உடலில் பொருத்தி கருவை வளர்க்க முடியும். செயற்கைக் கர்ப்பப்பை வெற்றிகரமாக அமைந்தால் குழந்தை இல்லாத பெண்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

## மூளை நினைப்பதை எழுதும் கருவி கண்டுபிடிப்பு.



மூளை என்ன நினைக்கிறதோ அதை அப்படியே எழுத்தாக கொண்டு வரும் கருவியை லண்டனில் உள்ள பேச்சு ஆய்வு மைய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பேசுவதை, மற்றவர்கள் புரிந்து கொள்ள முடியாது. அதே நேரத்தில் அவர்கள் எழுதிக் காட்டுவதற்கு கையும் செயல்படாது. இப்படிப் பட்டவர்கள் பேச்சை எப்படி புரிந்து கொள்வது என்பதுபற்றி விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் மூளையில் எலக்ட்ரோட்ஸ் கொண்ட மைக்ரோ சிப்பை பொருத்தி அதை கம்பியூட்டரில் இணைத்தனர். மூளை வெளியிடும் சிக்னலை அந்த கம்பியூட்டர் எழுத்தாக மாற்ற முயன்றதில், அது 70ல் இருந்து 90 சதவீதம் துல்லியமாக எழுத்தாக மாற்றியது. சூடாக இருக்கிறது. குளிராக இருக்கிறது. பசிக்கிறது. தாகம் எடுக்கிறது. ஹலோ, அதிகம், குறைவு போன்ற வார்த்தைகளை துல்லியமாக மாற்றியது. இதன் மூலம் மூளை நினைப்பதை எழுத்தாக மாற்றி விட முடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்து நவீன கருவியை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

# காலை உணவுடன் பால் குடித்தால் உடம்பு குறையும்



காலைச் சிற்றுண்டியுடன் பழச்சாறு குடிப்பதற்கு பதில் கொழுப்பு நீக்கப் பட்ட பால் குடித்தால் மதிய உண வின்போது சாப்பிடும் அளவில் 9 சதவீதம் குறையும். இத்தகைய முறையால் உணவின் அளவு குறைவதுடன் நாம் எடுத்துக் கொள்ளும் கலோரி அளவும் குறைவதால் உடலின் எடை குறைய வாய்ப்புகள் அதிகமாகும். கொழுப்பு நீக்கப்பட்ட பாலில் குறைந்த அளவே புரதம் மற்றும் லெக்டோஸ் சத்துக்கள் இருப்பதும் அதிகப்படியான கொழுப்பு உடலில் சேர்வதும் தடை செய்யப் படுகிறது. ஆனால் அதன் இதர சத்துக்கள் உடலில் சேர்ந்து மூளைச் செயல்திறனை அதிகரித்து. போதும் என்ற மனநிறைவைக் கொடுப்பதால் பசிக்கும் உணர்வு தள்ளிப் போகிறது. குறைவான உணவும் எடுத்துக்கொள்ள ஏதுவாகிறது. அதனால் உடல் எடை எளிதில் குறைய வகை செய்கிறது. பழச்சாறு பசியைத் தூண்டும் என்பதால் பசி சீக்கிரம் எடுக்கும் என்பது மட்டுமல்ல உணவின் அளவும் அதிகமாகும். இதனால் கலோரிகளின் அளவு அதிகரித்து உடல் எடை குறைய மறுக்கும்.

# சந்திரனில் வெள்ளியும் கண்டுபிடிப்பு




சந்திரனில் தண்ணீர் மட்டுமல்ல. வெள்ளி. கார்பன் டை ஒக்சைட் உள்ளிட்ட தனிமங் களும் அதிகளவில் அங்கு கலவையாக இருப்பது தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. சந்திரனில் காணப்படும் பெரிய பள்ளங்களில் தண்ணீர் அதிகமாக இருப் பதும், அந்த பள்ளங்களின் பரப்பில் 5.6 சதவீதம் தண்ணீர் இருக்கும் என்றும் மதிப்பிடப்படுகிறது. இதுவரை சந்திரனைப்பற்றி தெரியாத நிலையில், உணர்வு செயற்கைக்கோள் சந்திரனின் இருட்டுப் பகுதியில் மோதிய வேகத்தில் 10 கி.மீ. உயரத்திற்கு தூசிகள் கிளம்பின. இதில், உறை நிலையில் நிரந்தரமாய் தண்ணீர் இருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது. சந்திரனின் தென் துருவப் பகுதியில் காணப்படும் 'கேபஸ்' என்ற பெரும் பள்ளத்தில் இருந்து எழும் தூசிகள் குறித்த தகவல்களை அறிய உலகின் பல இடங்களில் உள்ள தொலைநோக்கிகள் செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

# 2012 இல் படுபயங்கர சூரிய சூறாவளி...



2012 டிசம்பர் 12 ஆம் திகதி இயல்புக்கு மாறாக பயங்கர சூரியப்புயல் பூமியைத் தாக்க வுள்ளதால் பூமிக்குப் படு பயங்கர பாதிப்புகள் ஏற்படப் போவது நிச்சயம் என்று இந்திய வான் ஆராய்ச்சிக் கழக வல்லுனர்கள் கூறியுள்ள னர். அதிக உஷ்ணக் கதிர்கள் மற்றும் மின்காந்த அலைகளைத் தாங்கி வரப்போகும் சூரியப் புயல் பூமியை நெருங்கும்போது பயங்கரமான பாதிப்புகள் ஏற்படும். சூரியனில் இருந்து வெளியேறும் உஷ்ணக் காற்று பூமியை தகிக்கும் நிலைமை ஏற்படும். உலகம் முழுவதும் மின்சாரம். விண்கலங்கள். செயற்கைக்கோள். தொலைத் தொடர்பு. செல்போன் ஆகியவை அனைத்தும் ஸ்தம்பிக்கும் என்றும் கூறியுள்ளனர்.

# இன்னொரு பூமி இருக்குமா?



இன்றுவரை 230 அயல்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டிருக்கின் றன. நமது பால்வீதியில் மட்டும் 10 ஆயிரம் கோடி கிரகங்கள் இருக்கலாம் என்று தெரிவிக்கப் படுகிறது. இதில் வியாழன் போன்ற வாயுக் கோளகிரகங்கள் 600 கோடி இருக்கலாம் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. பூமியைப் போன்று 10 லட்சம் கிரகங்கள் இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தற்போது 5 கிரகங்களில் பூமியைப் போன்று தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 50 கிரகங்களில் உயிரினம் இருக்க வாய்ப்பிருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

# புற்று நோய்க்கு மனிதனே காரணம்



புற்று நோய் இயற்கை விளைவுகளால் ஏற்படுவதல்ல மாறாக மனிதன் தனக்காகத் தானே உருவாக்கிக் கொண்ட அதிநவீன வாழ்வுதான் காரணம் என்று பல்கலைக் கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சுற்றுசூழலில் இயற்கையாக உள்ள எந்த ஒரு கூறும் புற்று நோய்க்கு காரணமாக இருந்திருக்கவில்லை. இதனால் மனிதனால் ஏற்பட்டுள்ள சீரழிந்த. மாசாகிப்போன சூழ்நிலைகளால் உருவானதே இந்த நோய் என்று நாம் கூற முடியும்.


அதாவது எய்ட்ஸ், புற்று நோய் என்பதெல்லாம் ஆதிகாலம் தொட்டே இருந்து வருபவை என்பது பொய்யை, மருத்துவ ஆய்வுகள் கூறிவரும் இந்த நிலையில் பல்வேறு காலத்தின் உடல்களை ஆய்வு செய்ததில் நவீன சமூகங்களுக்கு கிடைத்த செய்தி "புற்று நோய் என்பது மனிதனால் உருவாக்கப்பட்டதே" என்பதுதான்.

# கச்சான் எப்படி பிளட்பிரஷரைத் தடுக்கும்?



வேர்க்கடலை, கடலை எண்ணெய் என்றதுமே முதலில் எல்லாருக்கும் ஞாபகத்துக்கு வருவது அதில் உள்ள கொழுப்புச் சத்துதான். வேர்க் கடலை. கடலை எண்ணெயைப் பயன்படுத்தி னால் இரத்த அழுத்த நோய் வரும், இதய நோய்கள் வரும் என்ற பயம் பரவலாக உள்ளது. ஆனால் இந்தப் பயத்திற்கு எந்தவித ஆதாரமுமில்லை. வேர்க்கடலையில் கொழுப்புச் சத்து இருக்கிறது. ஆனால் அது நல்ல கொழுப்பு. உடம்புக்குத் தேவையான கொழுப்பு. வேர்க்கடலையை ஏழைகளின் புரதம் என்று கூடச் சொல்லலாம். அந்த அளவுக்குப் புரதச்சத்து அதிகமாக உள்ளது. அது மட்டுமல்ல. 30 விதமான ஊட்டச்சத்துகள் வேர்க்கடலையில் உள்ளன. சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு வேர்க்கடலை நல்ல உணவு.

# நீரிழிவுக்கு வைத்தியம்



நீரிழிவு நோயாளிகளுக்கு பல்வேறு கை வைத்தியம் உள்ளது. இவற்றை சரி யான அளவில் செய்து வந்தால் நீரிழிவு நிச்சயமாக கட்டுப்படுத்தப்படும்.

முதலில் கடுகு, ஆவாரை விதை, மரமஞ்சள், கருவேலம் பிசின் ஆகிய வற்றை எடுத்து சுத்தப்படுத்தி வைத்துக் கொள்ளவும். வீட்டில் அம்மி இருந்தால் அதில் இவற்றை வைத்து இடித்து பொடியாக்க வேண்டும். இதனை நீர்விட்டு பிசைந்து சூரணமாக்கி வைத்துக் கொள்ளலாம். நீரிழிவு நோய் உள்ளவர்கள் இந்த சூரணத்தை 1-2 கிராம் உள்ளுக்கு சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும்.

# கற்பு காணாமல் போய்விட்டதா?

-மருதூர் ஏ மஜீத் -

பள்ளம் படுகுழிகளற்று சீர்மையாகக் காணப்படும் அப்பாதையின் இரு மருங்கிலும் செழித்து வளர்ந்துள்ள வாகை மரங்களின் அணிவகுப்பு அழகையும் குளிர்ச்சியையும் அளிப்பதால் பகல் பன்னிரெண்டு மணிக்கும் வெயிலின் தாக்கத்தையுணராது களைப்பின்றி அப்பாதையில் பிரயாணம் பண்ணமுடியும்.

அப் பாதையை விட்டு சற்றுத் தூரத்திலேயே அங்குள்ள வீடுகள் அமைந்துள்ளன. கொழும்பின் சிங்கப்பூர் என அழைக்கப்படும் இப்பகுதியில் எது நடந்தாலும் அது பெரிய இடத்து விடயமாகக் கருதப்படுவது கொழும்பிலே சம்பிரதாயமாகிவிட்டது. இங்கு வசிக்கும் பெண்களில் அதிகமானோருக்கு கார் ஓட்டத் தெரிந்திருக்கும்.

'பத்மினி' பரம்பரைப் பணக்காரி மட்டுமல்ல. கணக்காளர் ஒருவரின் மனைவி. பொலிஸ் அதிகாரி ஒருவரின் மகள். ஒரு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரான பத்மினியை அழகி என்று கூற முடியாவிட்டாலும் அவளிடம் ஏதோ ஒரு கவர்ச்சி இருக்கின்றது. அதனால் கூட்டுத்தாபனத்தில் உள்ள எல்லா ஊழியர்களும் பத்மினியின் ஆட்சிக்குள் கட்டுண்டு கிடக்கிறார்கள் என்பது அக்கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் முதியோர் ஒருவரின் கருத்தாகும்.

இந்தக் கவர்ச்சிக்குக் காரணம் கல்வி. பதவி. பணம், பரம்பரை. பெருமையற்ற தன்மை என எல்லாமே ஒன்று சேர்ந்து கூட்டாட்சி நடத்துகின்றது என்பது அக்கூட்டுத்தாபனத்தின் இரண்டாவது பதவிநிலை உத்தியோகத்தரின் கண்டுபிடிப்பாகும்.

இது ஒரு புறமிருக்க வண்ணமாகவும். வகையாகவும், நாளுக்கொரு ஆடை அணிவதும். எல்லோரோடும் அன்பாகப் பழகுவதும் பத்மினியின் இயற்கையான சுபாவம். அதனால் கூட்டுத்தாபனத்தில் மட்டுமல்ல பத்மினியின் உற்றார். உறவினர். சுற்றத்தார் எல்லோர் மத்தியிலும் நல்ல பெயர். கூட்டுத்தாபன வாகனத்தை துஷ்பிரயோகம் செய்யாமை, பொதுச் சொத்துக்களை தனது சொந்த நலனுக்காகப் பாவிக்காமை போன்ற நல்ல பெயர் வேறு பத்மினிக்கு உண்டு.

பத்மினி கூட்டுத்தாபனத்திற்கு வந்து காரை விட்டு இறங்கி அந்தக் கண்ணாடி அறைக்குள் சென்று தனது கதிரையில் அமர்ந்து மேசை மணியைத்தட்டி சேவகனை அழைத்து பைல்களை வரவழைத்து அவைகளை புரட்டிக் கொண்டிருக்கும்போது அவளைப் பார்ப்பதற்குக் கொடுத்துவைக்க வேண்டும். அழகானதொரு ஆளுமை அறை முழுவதும் குடிகொண்டிருக்கும். சரியான நேரத்தில் அலுவலகத்திற்கு வருவது. சரியான நேரத்தில் சரியான முடிவெடுப்பது. அலுவல்களைக் கவனித்துவிட்டு அலுவலகத்தைவிட்டு எல்லோருக்கும் கடைசியாக வெளியேறுவது போன்ற நல்ல தன்மைகள் பத்மினியின் ஆளுமைக்கு காரணம் எனலாம்.

"அம்மாவுக்கென்ன... புள்ளையா... குட்டியா... பொருளாதாரப் பிரச்சினையா...? காரு. ஏசி. பங்களா இவையெல்லாம் இருந்தால் கடமையில் கண்ணாயிருக்கலாம்தானே? நமக்கு அப்படியா? எத்தனையோ பிரச்சினைகள். ஒரு அடி ஏறினால் நாலு அடி சறுக்குது. என்ன செய்ய? எல்லாம் அவருடைய காலபலன்" இப்படி அலுவலகத்தில் ஒரு சிலர் கதைத்துக்கொள்வார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் வழமைக்கு மாறாக பத்மினி அலுவலகத்திற்கு வருவது குறைவு. வந்தாலும் எப்போது ஐந்து மணியாகும் என்று எதிர்பார்த்த வண்ணமிருந்து கார் கிளம்பிவிடும்.

இதற்கான காரணத்தைத் தேடிக்கொண்டிருந்த அலுவலக ஊழியர்கட்கு பத்மினியின் கணவர் நைஜீரியா போனது காரணமாகப்பட்டது. ஆனால் அது ஆரம்பத்தில் யாருக்கும் பெரிதாகப் படவில்லை. நான்கு மாதங்கள் இப்படியே உருண்டோடியபின் அந்த அலுவலகத்திலே ஒரு பிசுபிசுப்பு.

அலுவலகப் பெண்கள் மத்தியில் இது விஸ்வரூபமெடுத்து தற்போது இது பெரிய இடத்து விடயம் என்றபடியால் அடிவயிற்றிலேயே கிடந்தது. புரண்டு புரண்டு ஒரு சிலருக்கு அடிவயிறு பெருத்ததும் உண்டு. இச்செய்தி ஒரு சிலரின் தொண்டையை அடைத்தது. அதனால் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவதிப்பட்டார்கள்.

ஒரு சிலருக்கு தொண்டையிலிருந்து வாய் வரை வந்துவிட்டது. அடக்கி அடக்கி கன்னங்கள் உப்பிவிட்டன. அக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும் ஒருவர் தனக்குக் காது வருத்தம் எனச் சொல்லிக் கொண்டு காதிரண்டையும் பஞ்சினால் அடைத்துக் கொண்டார். அத்தோடு கைக்கு அடக்கமான சிறியதொரு பைபிளையும் தூக்கித்திரிந்தார். பத்மினி பற்றிய கதை வரும்போது பைபிளை விரித்து முணுமுணுத்தவாறு வாசிக்கத் தொடங்கிவிடுவார். பத்மினிப்பிரியர் இவர்.

கடலோடு சேர்த்துக் கட்டப்பட்டது போன்ற அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் மேல் மாடியில் ஒரு மூலையில் இளம் காதல் சோடியொன்று.

இவர்களைப் போன்று பல சோடிகள் அம் மேடையெங்கும் பூத்துக் குலுங்கின. மேடையின் ஒரு அந்தத்தில் பத்மினியும் சங்கத்திணைக்கள அதிகாரி பத்மநாதனும். பத்மநாதனின் உடை அலங்காரம் அவரது வயதிற்கும் பதவிக்கும் ஏற்றதுதான். சுப்பர் ஸ்டார் ரஜனி காந்தை மேக்கப் இல்லாதபோது காண்பது போன்று இருக்கும் பத்மநாதனின் தோற்றம். கண்கள்கூட ரஜனியின் சிறிய அமைப்புடைய கண்களைப்போன்றதே. பார்வைக்கூட அவருடையதுதான். சில்லென்று வீசும் கடற்காற்று பத்மநாதனின் தலை ஓரங்களில் உள்ள மயிர்களைக் கலைத்து அங்குமிங்கும் வீசுகிறது. பத்மநாதனுக்கு இங்கு அதை ஒழுங்குபடுத்துவது ஒரு வேலையாகிவிட்டது. அந்த வேலைகளினூடே பத்மினியைப் பார்த்து "பத்மினி நான் சொல்வதைக் கேள். நீ சாதாரணமான ஒரு பெண் அல்ல. பொறுப்பு வாய்ந்த பதவி வகிப்பவள். நாலு பேருக்குத் தெரிந்தவள். நல்லவள் என்று



பெயர் எடுத்தவள். இந்த விடயம் வெளியே தெரியவந்தால் ஊர் உலகம் இருவர் மீதும் பழிசுமத்தும். உன்னை உனது அலுவலக ஊழியர்களே மதிக்கமாட்டார்கள். இவையெல்லாம் ஒரு புறமிருக்க இந்த விடயம் உன் கணவருக்குத் தெரியவந்தால்.. ப்ளீஸ் பத்மினி. எனக்குத் தெரிந்த ஒரு டாக்டர் இருக்கிறார். அவரிடம் சொல்லி விடயத்தை சமாளித்துவிடுவோம். இது உனக்கும் நல்லது எனக்கும் நல்லது... ப்ளீஸ்''

பத்மநாதன் பத்மினியின் காலில் விழாத குறைதான்...

ஆனால் பத்மினியோ அலையில்லாத கடலைப்போல அமைதியாக அந்தரப்படும் பத்மநாதனைப் பார்த்து, 'கொஞ்சுதல் முடிந்து இப்பொழுது கெஞ்சுதல் ஆரம்பித்துள்ளது. ஆண்களே இப்படித்தான். தைரியமில்லாதவர்கள்.' எனத் தன் மனதுக்குள் எண்ணியவாறு ''ஏன் இவ்வளவு அந்தரப்படுகிறீங்க? என் கணவனுக்குத் தெரிந்தால என்னவாம்... பயப்பட வேண்டிய நானே அமைதியாக இருக்கும்போது நீங்க ஏன் அவதிப்படனும்? எனக்குத் திருமணமாகிப் பத்து வருடங்களுக்கு மேலாகியும் வயிற்றில் ஒரு புளு பூச்சி கூட இல்லாமல் நாற்பது வயதுக்குப் பிறகு இனி பிள்ளைப்பாக்கியமே இருக்காது என்றெண்ணிய எனக்கு நீங்கள் பிள்ளைப் பாக்கியத்தை அளித்துள்ளீர்கள். அது மட்டுமல்லாது 'உனக்கு நான் அளிக்கக் கூடிய ஆக உயர்ந்த பரிசு, குழந்தை என்ற பரிசுதான் அதை என்னால் அளிக்கமுடியுமாயின் மிகச் சந்தோஷப்படுவேன்' என்று கூறிய நீங்கள் இப்பொழுது ஏன் பயப்படவேண்டும்'' எனக் கூறியதும்...

''பத்மினி உனக்குப் பைத்தியமா பிடித்துவிட்டது. உன் கௌரவம், உன் கணவனின் கௌரவம், எனது கௌரவம், உனது தகப்பனின் கௌரவம் இவையெல்லாம் என்னவாகும். எனது மனைவியும் பிள்ளைகளும் இதனைக் கேள்விப்பட்டால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? எல்லாவற்றிக்கும் மேலாக எனது வயதினை யோசித்துப் பாரு. ஊர், உலகம் என்ன சொல்லும்? இளம் பிள்ளைகளுக்கு புத்தி சொல்ல வேண்டிய வயதில் இப்படி நடந்துள்ளார்களே... கிளடுகளை தண்ணீ இல்லாத இடத்தில் வெட்டிப் புதைக்க வேண்டும் என்று சொல்லமாட்டார்களா? ப்ளீஸ் நான் சொல்வதைக் கொஞ்சம் காதுகொடுத்துக்கேட்டு பொறுப்போடு நடந்துகொள்'' என அவளது நாடியைத் தாங்கினான் பத்மநாதன்.

பத்மினி முறுவலித்தவாறு பத்மநாதனின் கன்னத்தில் இலேசாகத் தட்டிக் கொடுத்து ''நீங்க எதற்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்களை நான் காட்டிக்கொடுக்கமாட்டேன். என் வயிற்றில் வளரும் குழந்தைக்கு யார் தகப்பன் என்பது யாருக்கும் தெரியவேண்டிய அவசியமில்லை. எனக்கு ஒரு வாரிசு வேண்டும். அவ்வளவு தான். பத்து வருடங்களுக்குப் பிறகு அது எனக்குக் கிடைத்திருக்கிறது. குழந்தைப் பாக்கியம் இல்லையே என்று அணு அணுவாக ஏங்கிச் செத்துக்கொண்டிருந்த எனக்கு இப்பொழுதுதான் நிவாரணம் கிடைத்துள்ளது. எனக்குள்ளும் இன்னுமோர் உயிர் வளர்கிறது என்பதை நினைக்கையில் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? அதனை அழிக்க நினைப்பது மடத்தனம் மட்டுமல்ல. பாரதூரமான குற்றமுமாகும். தயவுசெய்து அந்த எண்ணத்தையே விட்டுவிடுங்க. இதில் தலையிட உங்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. நான் உங்களைக் கணவனாக்கிக் கொள்ள கனவிலும் நினைக்கவில்லை. ஏதோ சந்தர்ப்பம், சூழ்நிலை எம்மிடையே உறவை ஏற்படுத்தியது. அது என்னை ஒரு குழந்தைக்குத் தாயாக்கியுள்ளது. அவ்வளவுதான். இது நான் விரும்பியதாலேயே நடைபெற்றது. இப்படி நான் நடந்துகொண்டது என் கணவருக்குத் துரோகம் செய்ததாகக் கருதவில்லை. என் கணவர் மீது நான் அனுதாபப் படுகிறேன். பெண்களுக்குப் பிள்ளை பிறக்காது. மலடு. அதாவது பெண் மலடு என்றதும் ஆண்கள் இன்னுமொரு திருமணம் செய்ய நினைக்கிறார்கள். அப்படி இருக்கும்போது பெண்களின் எண்ணம் எப்படிப் பிழையாகும்? எனது கணவர் ''இருள் இல்லாத இரவு'' அவ்வளவு தான். நீங்கள் இவற்றையெல்லாம் சீரியசாக எடுக்க வேண்டிய அவசியமேயில்லை. உங்கள் வேலை முடிந்துவிட்டது'' என்று கூறிவிட்டு பத்மநாதனைப் பார்த்தாள் பத்மினி.

இருதலைக் கொள்ளி எறும்பான பத்மநாதன் பத்மினியைப் பார்த்து ''உன்னைச் சமூகம் ஒளியில்லா நிலவு என்று பழிக்குமே... அதற்கு என்ன சொல்லப்போகிறாய்'' எனக் கேட்டான்.

''இந்த விஞ்ஞான உலகத்தில் படித்த எங்களால் இவ்விடயங்களைச் சமாளித்து வாழமுடியாவிட்டால் எமது படிப்பிற்கு அர்த்தமில்லாமல் போய்விடும். என் வயிற்றில் வளரும் குழந்தைக்கு நான் காரணத்தைச் சாதகமாகவும் பாதுகாப்பாகவும் எப்போதோ தேடிக் கொண்டேன். விஞ்ஞானம் எனக்கு உதவி செய்துள்ளது''


''பத்மினி நீ சொல்வது எதுவும் எனக்குப் புரியவில்லை தயவு செய்து விளையாடாதே''

''புரியும் மனோநிலையில் நீங்கள் இல்லையே அது தான் காரணம். சரி இன்னும் விளக்கமாய் புரியும்படி கூறுகின்றேன். என் வயிற்றில் வளரும் குழந்தைக்கு நீங்கள்தான் தகப்பன் என்று என்னைத் தவிர வேறு யாரும் சொல்லமுடியாது. நானே உங்கள் குழந்தையில்லை என்றுதானே சொல்லப்போகிறேன். நீங்கள் ஏன் பயப்பட வேண்டும். என் வயிற்றில் வளரும் குழந்தை விந்து பேங்கில் இருந்து எடுக்கப்பட்டது. அதை எனது சினைப்பைக்குள் இட்டு வளர்க்கிறேன். அவ்வளவுதான். சரி இன்னும் கொஞ்சம் விளக்கமாகக் கூறவா? எனது கணவருடைய விந்தில் குாந்தைக் கான சாத்தியமில்லை. ஆண் மலடு என செயற்கைக் குழந்தை வர வைக்கும் ஸ்பெஷல் டாக்டர் என் கணவரிடம் கூறியது மட்டுமல்லாமல் நீங்கள் விரும்பினால் விந்து பேங்கின் உதவியோடு ஒரு விந்தினைப் பெற்று உங்கள் மனைவியின் சினைப்பையில் விட்டு குழந்தையாக வளரச்செய்து, பெற்றெடுத்து, உண்மைத் தாய்ப்பாசத்தோடு வளர்த்தெடுக்க முடியும். இது குழந்தையைத் தத்தெடுப்பதைவிட சிறந்தது என்று டாக்டர் கூறியபோது எனது கணவர் என்னைவிட எனது மனைவியின் சம்மதமே இதற்கு முக்கியம் எனக் கூறியதும் நான் அந்த இடத்திலேயே மறுத்துவிட்டேன். காரணம் எனது சினைப்பைக்குள் விடப்படும் அந்த விந்து கறுப்பா? சிவப்பா? புத்திசாலியுடையதா? மடையனுடையதா? பரம்பரை நோய்களான பைத்தியம், வாதம் போன்ற நோயுள்ளவனா? இல்லாதவனா? பைத்தியத்திற்கும் அதிபுத்திசாலித்தனத்திற்குமிடையே ஒரு நூல்தான் வித்தியாசம் என்பார்கள். ஒரு நூல் என்பது பெரிய காரியமல்ல, ஒரு சிறு விடயம். அதிபுத்திசாலித்தனம் பைத்தியமாகவும் மாற வாய்ப்புண்டு. இதே போன்று சாதியென்ன? பேதமென்ன? குலமென்ன? கோத்திரமென்ன? நல்லவனா? கெட்டவனா? எப்படித் தெரியும். பிறகு குளிக்கப் போய் சேற்றைப் பூசிய கதையாகிவிடுமல்லவா? என்பதால்தான் மறுத்துவிட்டேன். உங்கள் கரு எனது கருப்பையில் குழந்தையாக உருப்பெற ஆரம்பித்ததும் எனது கணவரோடு தொடர்புகொண்டு விந்து பேங்கில் இருந்து விந்து பெற்று குழந்தை வளர்க்கச் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டேன். போதுமா?

இன்னும் பயம் நீங்கவில்லையா? சந்தோஷமாக வீடு போய்ச் சேருங்கள். உலகில் விலைமதிக்க முடியாத ஒரு பரிசுதான் பிள்ளையை அன்பளிப்புச் செய்வது என்று நீங்கள் கூறியது வெறும் பசப்பு வார்த்தைகள் என்பதை உங்களின் பயம் எனக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது. காரியம் முடியும் மட்டும் ஆண்கள் கையாளும் பசப்பு வார்த்தைகள் இவைகள். இவைகளைப் பற்றியெல்லாம் நான் அக்கறைப்படவில்லை. நன்றி. போய் வாருங்கள் என்றுகூட நான் சொல்ல மாட்டேன். போங்கள் என்றுதான் சொல்கிறேன். நன்றி.. இத்தோடு உங்கள் வேலை முடிந்துவிட்டதாக நினைத்துக்கொண்டு என்னைக் கனவிலும் நினையாமல் திரும்பிப் பார்க்காமல் போங்கள்'' எனக் கூறியவாறு பத்மினி அந்தக் ஹோட்டலை விட்டு வெளியேறி தனது காரை நோக்கி நடந்தாள்.

'கூடு கட்டத் தெரியாத குயில்கள்' சிறுகதைத் தொகுப்பிலிருந்து...

டேய் எங்கட கூட்டத்தில
அமைச்சரிண்ட மகனை சேர்த்தது
தப்பா போச்சுடா!
ஏன்டா? என்னடா செஞ்சான்?
ஒழுங்கா தலையை சீவிட்டு
வாடா என்டா, யார் தலையை
எண்டு கேக்கிறான்.



## அதற்குத் தக

# 'ஃபேஸ் புக்' என்றொரு பேய்

அஷ்ரஃப் சிஹாப்தீன்
ashroffshihabdeen@gmail.com

'அற்புத விளக்குடன் அலாவுதீனை ஆகாய மார்க்கமாக எடுத்துச் செல்லும் விரிப்பு உங்கள் வாசலில் கிடக்க நீங்கள் ஏன் நடந்து போகிறீர்கள்?' என்கிற தினுசில் நமது இளவல்கள் சிலர் என்னில் ஆர்வத்தைக் கிளப்பி விட்டார்கள் சில பொழுதுகளில்.

வேறு ஒன்றுமில்லை!

நான் 'ஃபேஸ் புக்'கில் அங்கத்தவனாக இல்லை என்பதுதான் சமாச்சாரம். கண்முன்னே நன்னீராறு பெருக்கெடுத்துப் போகும்போது நான் மழையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு 'வெங்காய'மாக அவர்களுக்குத் தெரிந்தேன். நேரிலே அனுதாபப்பட்டவர்கள் ஒரு புறமிருக்க, அவ்வப்போது மின்னஞ்சலூடாகச் சிலர் எனக்கு வெற்றிலை வைத்தார்கள். சரி! என்னதான் நடக்கிறது என்று பார்ப்போம் என்று அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டேன். அங்கு ஒன்றும் பாலாறு பெருகி ஓடவில்லை. தினமொரு அப்பிள் கிடைக்கவில்லை. அதாகப்பட்டதாவது எனது தேடலுக்கும் படிப்புக்குமான எந்தத் தீனியும் அங்கு கிடையாது என்று தெரிந்தபோது என்னைக் 'கிளப்பி' விட்டவர்களின் தலை மயிர்களைக் குதற வேண்டும் போல் ஆவேசம் வந்தது.

தொலைந்து போகட்டும் என்று சும்மா விட்டுவிட்டு இருந்தால் மின்னஞ்சலில் பலர் எனது நட்புப் பட்டியலில் சேர்வதற்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் தெரிந்த அறிமுகமானவர்களைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டேன். ஆனால் தினமும் அறிமுகமேயில்லாத இரண்டு மூன்று நபர்கள் கோரிக்கை விடுத்தபடியிருந்தார்கள். கண்டுகொள்ளாதிருந்த போதும் எனது, கதி தன்பாட்டில் சென்ற நண்டை சீலைக்குள் போட்டுக் கொண்ட மாதிரி மாறியது. அவர்கள் மீண்டும் மீண்டும் தன் முயற்சியில் மனந்தளராத விக்கிரமாதித்தன்களாக மாறினார்கள்.

இவர்கள் யார்? எதற்காக எனது நட்பை விரும்புகிறார்கள்? என்ற விளக்கங்கள் எதுவும் புரியவில்லை. அநேகமானவர்கள் தங்களைப் பற்றிய விபரங்களை முழுமையாகத் தருவதில்லை. எந்தத் தகவல்களும் தராமல் பிறந்த திகதியையும் மாதத்தையும் குறிப்பிட்டு விட்டு நட்புக்குக் கை நீட்டுகிறார்கள். குழந்தைகளின் புகைப்படங்களிலும் பூக்களிலும் தங்களை மறைத்துக்கொண்டு உலாவுகிற பிரகிருதிகளின் தொகை கணக்கிட முடியாதது. பிறந்த வருஷத்தைத் தொண்ணூறு வீதமானவர்கள் தெரிவித்திருப்பதில்லை. ஆண்களின் பெயர்களில் பெண்களும், பெண்களின் பெயர்களில் ஆண்களும், குழந்தைகளின் பெயர்களின் பின் கிழவர்களும் கிழவிகளும் ஒளிந்திருக்கலாம் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

பல இளம் பெண்கள் தங்களது படங்களுக்குப் பதிலாகச் சினிமா நடிகைகளின் படங்களை அல்லது அழகான மொடல்களின் படங்களையும் இணைத்திருக்கிருக்கிறார்கள். இதன் மூலம் இளம் பெண்கள் சினிமாவுக்குள்தான் கும்மியடிக்கிறார்கள் என்று புரிகிறது. இதன் பின்னணியில் நமது புரிவுக்குச் சில விடயங்கள் உள்ளன. பெண்கள் இயல்பிலேயே அழகை ஆராதிப்பவர்கள். சினிமா நடிகையின் முகம் போல் இருந்தால்தான் கவர்ச்சி என்பதையும் அவர்கள் ஒருவகையில் ஏற்றுக் கொள்கிறார்கள் போல் தெரிகிறது. அத்துடன் தங்களது முகங்கள் சினிமா



நடிகை போன்றது இல்லை என்பதையும் சொல்லாமல் சொல்கிறார்கள். சினிமா நடிகையின் முகமே உண்மையானது அல்ல என்பதைத் தெரிந்து கொள்ளும் நிலைக்கு வராமல், 21ம் நூற்றாண்டிலும் இன்னும் இளம் பெண்களில் ஒரு பிரிவு வாழ்ந்து வருகிறது.

சொந்தப் படம் இட்டுள்ள இளம் பெண்கள் அதிகம் செயற்கைச் சிரிப்புடன் தெரிகிறார்கள். அநேகமானவை பற்பசை அல்லது பற்பொடி விளம்பரச் சிரிப்பு. ரொம்ப சிங்கமாக இருக்கிறது. சிங்கம் என்ற சொல்லுக்கு முன் ஆனாவைப் போட்டுக் கொள்ளவும். இளைஞர்கள் விதவிதமான கோணங்களில் தங்களது முகங்களைக் காட்டுவதன் மூலம் தங்களது கேனத் தனத்தை வெளிப்படுத்துகிறார்கள். பில்கேட்ஸே கூடத் தன்னை இத்தனை கோணங்களில் படம் எடுத்திருக்க மாட்டார். ஏதோ ஒபாமாவின் லெவலில் புகைப்படத்தைப் போட்டு ஜல்லியடித்துத் திரிகிறார்கள். பலர் இன்னும் மன்னார் அன்ட் கம்பனியில்தான் வேலையில் இருக்கிறார்கள்.

தெரிந்தவர்கள், இலக்கிய ஆர்வலர்கள் என்று ஒருவாறு நூறு பேர்வரை எனது நட்புப் பட்டியலில் இப்போதைக்கு இடம்பெற்றிருக்கிறார்கள். இன்னும் எழுபத்தைந்து பேரளவில் 'வெயிட்டிங்' லிஸ்ட்டில் காத்திருக்கிறார்கள். இவர்களை என்ன செய்வது என்று இதுவரைக்கும் எனக்குப் புரியவில்லை. எனது பெயரால் ஆளுக்கு ஒரு டொபி அனுப்பலாம் என்றால் போஸ்டல் செலவு ஆகக் குறைந்தது 25.00 வரும். கிறடிற் கார்ட்டில் ஒரு ரூபாயைக் கணனி மூலமே கொடுப்பதற்கும் பயம். கிறடிற் கார்ட் இலக்கத்தைப் பதிவு செய்யும்வரை கண்ணில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு ஒரு கூட்டம் காத்திருக்கிறது. இலக்கத்தை லபுக்கிக் கொண்டு போய் முழுப் பணத்தையும் அந்தக் குழு 'அமத்திக்' கொள்ளும்.

பட்டியலில் இருப்பவர்கள் பலரோடு எனக்கு எந்த உறவும் கிடையாது. பலரை யார் என்றே தெரியாது. ஏதோ என்னைப் பற்றிக் கொஞ்சம் அறிந்து வைத்திருப்பதால் எனது பட்டியலில் பட்டினி கிடக்கிறார்கள். ஆகக் குறைந்தது எனது புத்தகங்களில் ஒன்றிரண்டைப் படித்து விட்டாவது கருத்துச் சொல்வார்கள் என்று பார்த்தால் அதுவும் கிடையாது. ஒரு நல்ல பாடலைப் பற்றிய தகவலையாவது பகிர்ந்து கொள்வதும் கிடையாது.

தூக்கம் வராத நாட்களில் அதிகாலை இரண்டு மணிக்கு ஃபேஸ் புக்கைத் திறந்தால் எனது நட்புப் பட்டியலில் இருக்கும் நபர்களில் ஆறு பேராவது அரட்டையடித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறேன். திறந்தவுடனே 'குபுக்' கென்றொருவர் 'ஹலோ' சொல்கிறார். 'என்ன?' என்று கேட்டால் 'எப்படியிருக்கிறீர்கள்?' என்று கேட்கிறார். எனக்கு இரத்தம் சூடாக ஆரம்பிக்கிறது. இரத்த அழுத்தம் அதிகரித்து விட வாய்ப்பு இருப்பதால் சாமத்தில் ஃபேஸ் புக் திறப்பதைத் தவிர்த்து விட்டேன்.


ஃபேஸ் புக்கில் பகிர்ந்துகொள்ளும் எல்லா விடயங்களையும் மின்னஞ்சலிலும் பகிர்ந்து கொள்ளலாம். மின்னஞ்சலை உரியவர் மட்டுமே பார்க்க முடியும். ஃபேஸ் புக் என்பது திறந்த டயறி. ஒரு நபரின் பக்கத்துக்குச் சென்றால் அவரது நண்பர்கள் எத்தனைபேர்? யார் யார் அவரது பட்டியலில் இருக்கிறார்கள்? என்று தெரிந்து கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அந்தப் பட்டியலில் உள்ள ஒருவரது நட்பு நமக்குத் தேவையாயின் ஒரு வேண்டுகோளை விடுத்து அவருடன் நட்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இதுவே அலைந்து திரியும் பலருக்கு மிகவும் வசதியாக இருக்கிறது. இதனால் இளசுகள் ஃபேஸ் புக்கை நாடுகின்றனர்.

ஃபேஸ் புக் தொடர்பு ஒரு மேனியாவாக மாறியிருக்கிறது. வாழ்வின் அன்றாடக் கடமைகளுக்கு அடுத்து இளவட்டங்கள் கணனிக்கு முன்னால் காற்றுக் குடித்துக்கொண்டு, தவம் கிடக்கின்றன. இனக் கவர்ச்சியும் பாலியல் உந்துதலும் இவர்களை மேய்க்கின்றன. தெருவில் ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து கதைப்பது, கலாய்ப்பது பகிரங்கமானது என்பதால் வீட்டின் ஓர் அறையில் அமர்ந்திருந்து 'காதல்' பற்றிய உலகப் புகழ் பெற்ற அமர தத்துவங்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். தந்தை, தாய், உடன் பிறப்புக்கள் மற்றும் இன்னோரன்ன விடயங்களை ஆர்வத்துடன் பேசுகிறார்கள். மழை பெய்கிறது என்று ஒருவர் சொன்னால் பதில் சொல்பவர் வாழ்வில் மழைக் காணாதவர் மாதிரி அல்லது அதில் வேண்டுமென்றே நனைவது போல சிலிர்த்துக் கொள்கிறார். இளவட்டங்கள் சிலவற்றின் பக்கங்களைப் பார்த்தால் உலகத்தில் எவ்வளவு முட்டாள்கள் இருக்கிறார்கள் என்பது தெரியவரும். பொன்னான நேரத்தையும் வரமாகக் கிடைத்த இளமையையும் அற்பமாக எண்ணிக் கழிக்கும் இளவல்களைப் பற்றிய கவலையும் எழும்.

இளங்குமரிகள் அழகான படங்களை தங்களது தளத்தில் இடுகையிடுவது போன்று நண்பர்களுக்கும் அனுப்புகிறார்கள். அறிஞர்களின் மனங்கவரத்தக்க நன் மொழிகளைத் தங்களது வசனங்கள் போல எடுத்து விட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். இளங்குமரர்கள் இவற்றை வானளாவப் புகழ்ந்து தள்ளுகிறார்கள். பிறகு சேர்ந்துகொள்கிறார்கள். இளங் குமரிகள் என்று தாங்கள் கருதும் எல்லோரிடமும் நட்புக்கான தூண்டிலை வீசுகிறார்கள். அகப்பட்டுக்கொள்ளும் குமரிகளுக்குக் காதல் பைத்தியம் பிடித்து விடுகிறது.

ஃபேஸ் புக்கினால் ஏற்படும் அபாயங்களைப் பற்றித் தினம் தினம் சஞ்சலத்துக்குரிய செய்திகள் வருகின்றன. ஃபேஸ் புக் என்பது கஞ்சாக் குடிப்பது, சாராயம் குடிப்பதுபோல் ஒரு போதையாக மாறிவிட்டது. ஆபத்துக்கள் குறித்து அவரவர் கவனம் எடுத்துக் கொள்ளவில்லையாயின் தம்மைத் தாமே பல்வேறு ரீதியிலும் இழந்துவிட நேரும் ஆபத்து இருக்கிறது.

இவ்வளவு சொல்லும் நீங்கள் ஏன் இன்னும் அங்கத்தவராகத் தொடர்கிறீர்கள் என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். நான் அதனை உப்பைப் போலப் பயன்படுத்துகிறேன். என்னைத் தேடும் ஒருவருக்கான ஏன்னலாக மாத்திரம் அதனை வைத்துக் கொண்டிருக்கிறேன். இங்கே நான் சொல்ல வருவது உப்பே உணவாகாது என்பதைத்தான்.




# காற்றாய் வருவேன் 13

**மொழிவாணன்**

## வா... வா... அருகில் வா...!

அந்த வெளவாலைப் பார்த்ததும்,
ராஜாவின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.
தன்னைக் கொலை செய்ய வந்த ஒருவனைப்
பார்ப்பதைப் போல,
அந்த வெளவாலைப் பார்த்தான் ராஜா.
அவன் முகத்தில்,
இப்போது,
அச்சத்தின் ஆட்சி அரங்கேறிக் கொண்டிருந்தது.
பரபரப்படைந்த அவன் கட்டிலில் இருந்து
எழுந்திருப்பதற்கு முயற்சி செய்தான்.
"வேண்டாம்... வேண்டாம்... எழும்பாதீர்கள்"
பக்கத்தில் இருந்த ஆஸ்பத்திரி சேவகன் அவனை
மீண்டும் படுக்க வைத்தான்.
ஜன்னலில் இருந்த அந்தப் பெரிய வெளவால்,
மீண்டும் மீண்டும் பறந்து வந்து அந்த
ஜன்னலில் மோதிக்கொண்டே இருந்தது.
அச்சத்துடன் விழிகளை உருட்டி அதைப்
பார்த்தபடியே,
"அந்தா அங்கே பாருங்கள். அவள் வந்திருக்கிறாள்.
என்னைப் பிடிப்பதற்குத்தான் வந்திருக்கிறாள்.
என்னைத் தடுக்காதே. நான் இங்கிருந்து ஓடி
அவளிடமிருந்து
தப்பித்துக் கொள்ளவேண்டும்... என் கையை
விடுங்கள்"
என்று கத்தினான்.
"உங்களுக்கென்ன பைத்தியமா? அங்கே எவளும்
இல்லை.
ஒரு கிழட்டு வெளவால்தான் அங்கே போகிறது..."
அவனை சமாதானப்படுத்தினான் சேவகன்.

"நீ யார்டா என்னைத் தடுப்பதற்கு...?
நீ அவளிடம் என்னைப் பிடித்துக் கொடுக்கவா
பார்க்கிறாய்?
விடுடா என்னை..."
என்று சொல்லியபடியே, கட்டிலில் இருந்து
குதித்தான் ராஜா.
அதே நேரம்,
முன்னால் பாய்ந்த ஆஸ்பத்திரி சேவகன்,
அவனைப் பிடித்துக் கொண்டான்.
ஆனால்,
அவன் சிறிதும் எதிர்பார்க்காத விதத்தில்,
அவனது அடி வயிற்றில் ஒரு குத்து விழுந்ததும்,
"அம்மா" என்று அலறியபடியே அடிவயிற்றைப்
பிடித்துக்கொண்டு அவன் கீழே குனிந்தான்.
அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட ராஜா,
விரைந்து முன்னால் ஓடினான்.
அடிபட்ட நிலையில் அவனும் விடவில்லை.
ஓடிச் சென்று அறை வாசலில் நின்றுக் கொண்டான்.
அதைப் பார்த்ததும்,
ஆத்திரம் கொண்ட ராஜா அவன் சட்டையை பிடித்து
இழுத்து,
ஒரு தள்ளு.
அவன் கொஞ்சம் முன்னால் வீசப்பட்டு போய்
விழுந்தான்.
கீழே விழுந்த அவன்,
அப்படியே இருந்து மீண்டும் ஓட முயன்று
ராஜாவின் கால்களை கட்டிப் பிடித்துக் கொண்டான்.
அவனுடைய கைகளில் சிக்கிக்கொண்ட
கால்களை விடுவித்துக்கொள்வதற்கு
ராஜா போராடினான்.
ஆனால்,
சேவகன் விட்டால்தானே?
இதனால் வெறி பிடித்தவனைப் போல் கீழே குனிந்த
ராஜா,
இரு கைகளாலும் அவனை அடித்தான்.
ம்ஹூம் அவன் பிடியைத் தளர்த்துவதாக இல்லை.
அடுத்து என்ன செய்வது என்று தெரியாது,
சுற்றிலும் பார்த்த ராஜாவின் விழிகளில்,
அருகில் இருந்த நாற்காலி ஒன்று
தட்டுப்பட்டது.
விரைந்து அதைக் கையில் எடுத்த ராஜா,
இரண்டு கைகளினாலும் பிடித்து,
சேவகனின் தலையில் ஓங்கி ஒரு அடி போட்டான்.
"படார்"
பலமான அடி.
"ஐயோ அம்மா...!"
பயங்கரமாக அலறியபடியே,
தலையைப் பிடித்துக்கொண்டான் சேவகன்.
அவன் மண்டை ஒடு வெடித்து, இரத்தம்
பீறிட்டது.
இதனால்,
அவன் பிடி தளர்ந்தது.
ஆனால்,
ராஜா அவனை அத்தோடு
விடவில்லை.
தொடர்ந்தும் அவனைத் தாக்கினான்.
நிலை தடுமாறிப் போன அவன்,




சிறிது நேரத்தில் சலனமற்று அப்படியே தரையில்
சாய்ந்தான்.
நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்ட ராஜா,
வெளியே ஓடுவதற்குத் திரும்பினான்.
ஆனால்,
வாசலில் நின்ற அந்த உருவத்தைப் பார்த்ததும்,
அப்படியே அசையாமல் நின்றான்.
வாசலில் நின்றது,
அவள் தான்.
ஆமாம்
பேயாகிவிட்ட அந்தப் பெண் மல்லிகா தான்,
வாசலில் நின்றுக் கொண்டிருந்தாள்.
அவளைப் பார்த்ததும்,
ராஜாவின் மேனியில் ஒரு நடுக்கம்.
அவன் மெல்ல மெல்ல பின்னால்
நகர்ந்தான்.
ஆனால்,
வாசலில் நின்று கொண்டிருந்த அவள்,
அசையாமல் நின்றாள்.
அவளையே பார்த்துக் கொண்டு,
பின்னால் சென்ற ராஜா,
சுவற்றில் மோதியதும் அப்படியே
நின்றான்.
நின்ற அவன்,
பரிதாபமாக
அவளைப்
பார்த்தான்.
அவள் பற்களைக்
காட்டிக்
கேலியாகச்
சிரித்தாள்.

அசிங்கமான ஒரு சிரிப்பு அது.
அவள் அப்படிச் சிரித்ததும்,
அந்த அறைக்குள் ஒருவித துர்நாற்றம் பரவியது.
“ஏன் இப்படி என்னைக் கண்டு பயப்படுகிறாய்?
அன்று நான் நாலு பேர்களைக் கண்டல்லவா
பயப்பட்டேன்.
ஆனால் தனியாக இருக்கும் என்னைப் பார்த்து
நீ பயப்படுகிறாயே...”
சொல்லியபடியே,
இரண்டு கைகளையும் முன்னால் விரித்துக் கொண்டு,
மெல்ல மெல்ல ஊர்ந்து வந்தாள்.
ராஜாவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.
சுவற்றின் மேல் ஏறித் தப்பிச் சென்றுவிடலாமா
என்று பார்த்தான்.
ஆனாலும்,
அவனுடைய முயற்சிகள் எதுவும்
பலனளிக்கவில்லை.
ராஜாவின் அருகில் வந்த அந்தப் பேயாகிவிட்ட
பெண்,
சிறு குழந்தை ஒன்று,
பொம்மை ஒன்றை தன்னருகே இழுத்தெடுப்பதைப்
போல்,
ராஜாவைத் தன்னருகே இழுத்தெடுத்தாள்.
ராஜா,
பயங்கரமாக அலறினான்.

**மர்மம் தொடரும்.........**

## இதயம் ஏன் ஓய்வில்லாமல் இயங்குகிறது?



நமது உடல் உறுப்புகளில் பெரும்பாலானவற்றுக்கு அவ்வப் போது ஓய்வு கிடைக்கும். அதாவது, உணவு சாப்பிடவில்லை என்றால், ஜீரண உறுப்புகளுக்கு வேலை இல்லை. தூங்கினால், மூளைக்கு வேலை இல்லை. இப்படி, கை, கால், கண் போன்ற உறுப்புகள்கூட ஓய்வு எடுக்க முடியும். ஆனால், ஓய்வே இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு சில உறுப்புகளில் மிக முக்கியமானது இதயம்தான். ஏன், இதயம் மட்டும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கிறது? இதயம் துடிக்கவில்லை என்றால், அசுத்த ரத்தம் தூய்மையாகாது. உடல் திசுக்களுக்கு, சக்தி தரும் குளுக்கோஸ் போன்ற சத்துகள், தாது உப்புகள் போன்றவை ஒழுங்காகப் போய்ச் சேராது. போதுமான சத்து கிடைக்காமல் திசுக்கள் பாதிக்கப்படும். செயல் இழந்துபோகும். மீண்டும் புதுப்பித்துக் கொள்ள முடியாமல் போகும். கடைசியில், ஒட்டுமொத்த மனித உடலே இறந்துபோகும். இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், இதயம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. இதயத்துக்குத் துணையாக நுரையீரலும் தொடர்ந்து இயங்குகிறது.



செவே.விவேகானந்தன்
சட்டத்தரணி

சட்டம் பேசுகிறது

# பொலிஸ் முறைப்பாட்டிற்கு சட்டம் என்ன பேசுகிறது




ஜே.ஆரின் அரசியலமைப்பு 1977 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1978 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டது. இது இரண்டாவது குடியரசின் அரசியலமைப்பு என்று அழைக்கப்படுகின்றது. தற்பொழுது மக்களை ஆட்டிப்படைப்பதும் இந்த அரசியலமைப்புதான்.

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள் பற்றி விபரிக்கப்படுகின்றது. மொழிகளின் உபயோகம் பற்றி நான்காம் அத்தியாயம் விபரிக்கின்றது. ஒரு தனி மனிதனின் அடிப்படை உரிமை, அவனது மொழி உரிமை பற்றி இவ்விரு அத்தியாயங்களும் விபரிக்கின்றன. அத்தோடு இந் நாட்டு பிரஜைக்கிருக்கும் அடிப்படை உரிமை, மொழி உரிமை பற்றியும் இவ்விரு அத்தியாயங்களும் விபரிக்கின்றன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தான் ஒரு ஜனநாயகவாதி என்றும் தர்மப்படி ஆளுபவர் என்றும் பறைசாற்றிக் கொண்டவர். அதனால் அவ்வாறான ஜனநாயக நடைமுறைக்கு சட்டத்தில் எழுத்து மூலம் உருவகம் கொடுத்தார். நடைமுறையில் அவ்வாறு செய்யாது விட்டதும், எதிராக செயல்பட்டதும் வேறு.

முதலாவது குடியரசின் அரசியலமைப்பை கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா உருவாக்கினார். 1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசின் அரசியலமைப்பு சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசின் அரசியலமைப்பின் கீழ் பழைய சட்டங்கள் பல மாற்றப்பட்டன. முன்பிருந்த குற்றவியல் கோவையிலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஜே.ஆரின் அரசியலமைப்பின் கீழ் குற்றவியல் கோவையிலும் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அடிப்படை உரிமை, மொழியுரிமைக்கமைய பொலிஸ் முறைப்பாடு, ஒருவரின் வாக்கு மூலம் பதியப்படும் பகுதியை மாற்றியமைத்தார்கள்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் அரசியலமைப்புதான் முதன்மையானது. இதுவே எல்லாவகை சட்டங்கள், பிரமாணங்கள் யாவற்றிற்கும் அடிப்படையானது. அரசியலமைப்பிற்கு விரோதமாகவோ பாதகமாகவோ சட்டங்கள் பாராளுமன்றத்தால் இயற்ற முடியாது. குற்றவியல் கோவை 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கச்சட்டம், 78 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கேற்ப சில பிரிவுகள் மாற்றியமைக்கப்பட்டன.

அச்சட்டத்தின் பிரிவு 109 இற்கும் பிரிவு 110(1) பிரிவிற்கும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமை, மொழி உரிமைக்கு ஏற்ப திருத்தங்கள்

கொண்டுவரப்பட்டன. குற்றம் விளைவித்த லின் நிமித்தம் முறைப்பாடு கொடுப்பவர் ஒருவர் வாய் மூலமோ எழுத்து மூலமோ தனது முறைப்பாட்டை பொலிஸ் அலுவலகரிடம் கொடுக்க முடியும். வாய் மூலம் கொடுக்கப்படும் முறைப்பாட்டை எழுத்து மூலம் பொலிஸ் அலுவலகர் முறைப்பாட்டுப் புத்தகத்தில் பதிய வேண்டும். முறைப்பாட்டாளர் எந்த மொழியில் கூறுகின்றாரோ அந்த மொழியில்தான் பொலிஸார் பதிய வேண்டும். அவ்வாறு செய்யப்பட வேண்டுமென்பதை 109(2) ஆம் பிரிவு கட்டாயப்படுத்துகின்றது.

தமிழில் தகவல் கொடுக்கின்ற பொழுது தமிழில்தான் பொலிஸ் அலுவலகர் அம் முறைப்பாட்டை பதிய வேண்டும். பொலிஸ் அலுவலகர் சிங்களவராக இருந்தாலும் சிங்கள மொழியில் பதிய முடியாது. தமிழில் கொடுக்கும் முறைப்பாட்டை சிங்களப் பொலிஸ் அலுவலகர் எடுத்த எடுப்பில் தனது தாய் மொழியான சிங்களத்தில் பதிய முடியாது. அரசியலமைப்பிற்கேற்ப இதை 109(2) ஆம் பிரிவு திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றது. முறைப்பாட்டை தமிழில் பதிவு செய்து அதனை முறைப்பாட்டாளருக்கு வாசித்து விளங்கப் படுத்த வேண்டும்.

இவ்வுரிமை தமிழ் பேசும் மக்களுக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. சிங்கள மொழி பேசுவோருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. சிங்களத்தில் கொடுக்கப்படும் முறைப்பாட்டை சிங்கள மொழியில் தான் பதிய வேண்டும். இலங்கை முழுவதும் எவருக்கும் இவ்வுரிமை உண்டு. யாழ்ப்பாணத்தில் சிங்களவர் அல்லது எவரும் சிங்கள மொழியில் முறைப்பாட்டை பொலிஸ் அலுவலகரிடம் கொடுக்கலாம். அவ்வாறு சிங்களத்தில் கொடுக்கப்பட்டால் சிங்களமொழியில் தான் பதியவேண்டும். அதேபோல், காலியில் தமிழ் மொழியில் முறைப்பாடு கொடுக்கப்பட்டால் தமிழ் மொழியில்தான் பதிய வேண்டும். சிங்கள ஊர் என்றாலும் பொலிஸ் அலுவலர் சிங்களவர் என்றாலும் தமிழில் கொடுக்கப்படும் முறைப்பாடு சிங்களத்தில் பதிய முடியாது. தமிழில் பதியப்பட வேண்டும். தமிழில் பதியப்பட்டதை தமிழில் வாசித்துக் காட்ட வேண்டும். அரசியலமைப்பின் மொழியுரிமை, அடிப்படை உரிமைக்கேற்ப முறைப்பாடு, பொலிஸாரால் பதியும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளது. முறைப்பாட்டை தமிழில் பதிவு செய்வதற்கு பொலிஸ் அலுவலர் இல்லாவிடில் என்ன செய்யவேண்டுமென்பதை அரசியலமைப்பு சட்டம் திட்டவட்டமாகக் கூறுகின்றது.

சிங்கள பொலிஸார் மட்டும்தான் இருக்கின்றார்கள். அவர்களால் தமிழில் பதிவு செய்ய முடியாதல்லவா? அவ்வாறே தமிழ் பொலிஸாருக்கும் சிங்களத்தில் பதிவு செய்ய முடியாதல்லவா? அச்



ஜே.ஆர்.ஜெயவர்த்தனா



சிறிமாவோ பண்டாரநாயக்கா

சூழ்நிலையில் என்ன செய்யவேண்டும் என்பதனை சட்டம் இருவகையாகப் பிரித்துக் காட்டுகின்றது. முதலாவதாக விபரிக்கப்படும் நடைமுறையை பின்பற்ற வேண்டும் என சட்டம் திட்டவட்டமாகக் கூறுகின்றது.

முதலாவது வகையானது, பொலிஸார் முறைப்பாட்டாளரை, தனது முறைப்பாட்டை தமிழில் எழுதிக் கொண்டுவரும் படி பணிக்க வேண்டும். அவ்வாறு தமிழில் எழுதிக் கொண்டுவரும் முறைப்பாட்டை முறைப்பாட்டுப் புத்தகத்தில் ஒட்ட வேண்டும். இவ்வுரிமை சிங்கள மொழியில் முறைப்பாடு செய்பவருக்குமுண்டு. ஒருவர் முறைப்பாட்டை ஆங்கில மொழியில் கொடுத்தாலும் இதே நடைமுறையைத் தான் பொலிஸ் அலுவலகர் பின்பற்ற வேண்டும்.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் இந்நாட்டின் தேசிய மொழிகள் இரண்டாகும். அவை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகள் மட்டும் தான். முறைப்பாட்டாளர் தான் பேசும் மொழியில் எழுத முடியாவிட்டால் என்ன செய்வது?

முறைப்பாட்டைத் தமிழில் கூறினாலும், அதனை தமிழில் எழுதிக் கொடுக்க முடியாவிட்டால் என்ன நடைமுறையைப் பின்பற்றுவது? இதுதான் இரண்டாவது வகை என்பது. இந்த இரண்டாவது முறையைப் பின்பற்றுவது எப்பொழுது? என்ற கேள்வி எழுகின்றது. முறைப்பாட்டை தமிழில் எழுதிக் கொடுக்க முடியாமல் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் தேசிய மொழியொன்றில் பொலிஸாரால் அம் முறைப்பாட்டைப் பதிய முடியும். அவ்வாறு பதியப் படும் முன் அதற்கான காரணத்தை விளக்கி பதிவுப் புத்தகத்தில் பதிய வேண்டும். அவ்வாறு தேசிய மொழியொன்றில் பதிவு செய்ததை முறைப்பாட்டாளருக்கு அவரது மொழியில் மொழிபெயர்த்து வாசித்துக்காட்டவேண்டும்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில்தான் முறைப்பாட்டாளர் தனது உரிமைகளை நிலைநாட்டுகின்றார். நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்படுகின்றன. தேவைப்படும் இடங்களுக்கெல்லாம், அத்தாட்சிப்படுத்தப்பட்ட இம் முறைப்பாடு கொடுக்கப்படுகின்றது. முறைப்பாட்டில் தவறுகள் ஏற்படின் முறைப்பாட்டாளர் தனது உரிமைகளை இழக்கின்றார். 'சொல்' ஒன்று போனால் பொருள் போகும். உயிரும்கூட சிலவேளைகளில் போகக்கூடும். அதனால் தான் முறைப்பாட்டிற்கு இவ்வளவு காப்புக் கவசம் அணியப்பட்டுள்ளன.

பொலிஸார் பெற்றுக் கொண்ட தகவல் அல்லது முறைப்பாட்டின் பின் தான் விசாரணையைத் தொடங்குகின்றார்கள். சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்கின்றார்கள். குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரியின்



கொல்வின் ஆர்.டி.சில்வா

வாக்குமூலத்தையும் பதிவு செய்கின்றார்கள். எவ்வாறு பதிவு செய்யப்பட வேண்டு மென்பதை பிரிவு 10(11) விபரிக்கின்றது. மேலே விபரிக்கப்பட்டுள்ள சகல உரிமை களும் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. செயல்படுத்தும் நடைமுறையும் அவ்வாறே.

எதிரி தமிழில் வாக்கு மூலம் கொடுத்தால் தமிழில்தான் பதிவு செய்யவேண்டும். தமிழில் பதிவு செய்ய பொலிஸாரால் முடியா விட்டால் மேற்கூறிய இருவகை நடைமுறை களை பின்பற்ற வேண்டும்.

தமிழ் ஊர்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரியாதவர்கள் பொலிஸாராகக் கடமை செய்கின்றார்கள். பொலிஸார் எவ்வாறு சட்டத்தின் முன் செயற்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. தங் களது முறைப்பாடுகள், வாக்குமூலங்கள் பொலிஸா ரால் பதிவு செய்யப்படும் பொழுது தங்களது அழிக்கமுடியாத அடிப்படைஉரிமைகள் நசுக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன என்பதனை தமிழர்கள் உணர்வ தில்லை. உணர்ந்தாலும் 'எவர் கெட்டாலும் எனக் கென்ன' என்ற தவறான நிலைப்பாட்டை எடுக் கின்றார்கள். அரசைக் கோபப்படுத்தக் கூடாது, அரச அதிகாரிகளுக்கிசைய நடக்க வேண்டும், என ஒரு குழுவினர் வாழ்கின்றனர். அவர்கள் தமிழ் சமுதாயத் தின் உரிமைகளை விற்கின்றனர். அதன் மூலம் தமது சுயநலனை பாதுகாக்கின்றனர். கண்கள் இரண்டையும் விற்று சித்திரம் வாங்குவது போல.

தமிழில் உங்களது வாக்கு மூலத்தை, முறைப் பாட்டைக் கொடுக்கும் பொழுது உங்க ளது உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. எதற்காக முறைப்பாட்டை, வாக்கு மூலத்தை கொடுத்தீர்களோ அவற்றிற் கான நன்மைகளை நீங்கள் பெறுகின்றீர் கள். அத்தோடு இலங்கை முழுவதும் அரசகரும மொழியாக செயலாக்கம் பெறுகின்றது. எந்த மொழிக்காக இவ் வளவு காலமாகப் போராடினோமோ அந்த மொழி அரசகரும மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. அதன் நடைமுறை அரசியலமைப்பிலும் சட்டங்களிலும் விபரமாக விளக்கப்பட்டுள்ளது. தமிழில் செய்கின்ற பொழுது பலருக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்கின்றது. தமிழ் சமுதாயம் வளர்ச்சிபெறுகின்றது.

அரசியலமைப்பின் மூலமும் சட்டத்தின் மூலமும் எமக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளை நாம் செயல் படுத்தாமல் விட்டால் மாற்றான் எங்களுக்காக எங்கள் உரிமையை செயல்படுத்த மாட்டான்.

எமது போக்கை மாற்றிக் கொள்ளவேண்டும். கடந்த காலம் எவ்வாறு இருந்தது என்பது முக்கிய மல்ல. இன்று எமது உரிமை எவ்வாறு இருக்கின்றது என்பதுதான் முக்கியம். பொலிஸ் பதிவில் அரசியல மைப்பு மூலமும் சட்டத்தின் மூலமும் எமக்களித்த உரிமைகளை உதாசீனப்படுத்தக்கூடாது. இருளில் இருந்து ஒளிக்கு வாருங்கள். உறக்கத்தில் இருந்து விழித்தெழுந்து செயற்படுங்கள். பொலிஸ் பதிவில் மட்டுமல்ல. எல்லாத்துறைகளிலும் தமிழ் அரசகரும மொழி என்பதை எல்லோருக்கும் உணர்த்துங்கள்.

## அடிக்கடி தும்மலுக்கு அடிப்படை காரணம்?!



சுகாதாரமற்ற சூழலுக்கு சுகாதாரத்துடன் விளங்கும் ஒரு பொருள் வெளிப்படுத்தும் எதிர் விளைவே ஒவ்வாமை. ஆற்றல் மிகுந்த ஒவ்வாத பொருள் உடலுக்குள் நுழையும் நிலையில், அது குறித்து உடலின் நோய் எதிர்ப்பு சக்தி உடனடியாக உஷார் அடைகிறது. இதன் விளைவாக தொடர் தும்மல், மூக்கு மற்றும் கண்ணில் நீர் வடிதல், தோலில் தடிப்பு என ஒவ்வொருவரின் உடல் தன்மைக்கு தகுந்தாற்போல் அறிகுறிகள் வெளிப்படுகின்றன. பரம்பரைத் தன்மை காரணமாக ஒருவருக்கு ஒவ்வாமை பிரச்சினை ஏற்படலாம். எனினும் பொதுவாக சுகாதாரமற்ற சுற்றுச்சூழல் தூண்டுதல் காரணமாகவே பெரும்பாலும் ஒவ்வாமை ஏற்படுகிறது. உதாரணமாக சிகரெட் புகை, வேதிப் பொருள்கள், குளிர் காற்று உள்பட தட்பவெப்ப நிலையில் திடீர் மாற்றம், கடுமையான துர்நாற்றம், மன அழுத்தம் என பல்வேறு காரணங்களால் 'ரைனிட்டிஸ் எனப்படும் மூக்குப் பாதை திரவ படலத்தில் வீக்கம் ஏற்பட்டு ஒவ்வாமை ஏற்படும்.

## சனிக் கிரகத்தில் ஒக்சிஜன் உள்ளது

$O_2$

கடந்த 2004-ம் ஆண்டு காசினி விண்வெளி ஓடத்தை நாசா சனிக் கிரகத்துக்கு அனுப்பியது. அந்த ஓடம் சனிக் கிரகத்தை சுற்றி பறந்து ஆய்வு மேற்கொண்டதில் சனி கிரகத்தின் அருகேயுள்ள ரியா விண்வெளி பாதையில் ஒக்சிஜன் இருப்பது தெரிய வந்துள்ளது. இப்பாதையில் உள்ள காந்த சக்தியே ஒக்சிஜனை தாங்கிப் பிடித்துள்ளது. இவை ஐஸ் கட்டிகளில் மூலக்கூறுகளாக உள்ளன என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இதனால் சனிக் கிரகத்தை சுற்றியுள்ள பகுதிகள் ஐஸ் கட்டிகளால் நிறைந்துள்ளது. மேலும் அங்கு காபனீரொட்சைட் உள்ளது என்றும் அறிவித்துள்ளது.

# ஹைக்கூ

★என்னோடு
சண்டை பிடிக்கிறது
என் பேனா..
உனக்காக
கவிதை எழுதவில்லை என்று.

★நீ-புன்னகை
செய்தால்!
என் கவிதைகளும்
பேசுகின்றது

★நான் பேனா பிடித்தால்
உன் பெயரை மட்டுமே
என் பேனா கக்குகிறது!

★நான் உன்னை
நினைக்கையில்!
கவிக்குழந்தைகளைப்
பிரசவம் செய்கிறது!
என் மனசு
மௌனமாய்
இருக்காதே!
மடிந்துபோகும்
என் உயிர்



★உன்னைக்கண்டு
பல யுகங்கள்
கடந்தோடி விட்டதைப்போல்
என் டயரியின் பக்கங்கள்
வெறுமையாய்க்
கிடக்கிறது
உன்னைப்பிரிந்து எப்படி
கவிதைக்கு உருக்கொடுப்பேன்...

★ஏ.... அப்படிப் பார்க்காதே!
என் இதயம்
சல்லடையாய்
போய்விடும்

★உன்னால் ஆன
அனுபவங்கள் தான்
நான் இன்னும்
காற்றலையில் உயிர் வாழ்கின்றேன்

★நீ - இல்லை
என்ற பின்பும்
நீ தந்த
சோகம் இருக்கிறது
என்னோடு

**மருதூர். ஏ.எல். அன்ஸார்**

# “ஸ்கைப்”பில் தெரிகிற அப்பா

உன் பயணங்களின் ரகசியங்களெதுவும்
புரியவில்லையப்பா எனக்கு.

நேற்றென்கூட இருந்து
என் விரல்பிடித்து நடத்திப் போனாய்
உன் மார்புச்சூட்டில் முகம் புதைத்து
நானுறங்கிக் கிடந்தேன்.
இன்று
நீயில்லாத வெறுமைகளோடு
நானும் அம்மாவும்
முகம் பார்த்தபடி மௌனமாக இருக்கிறோம்.

இத்தனை நாள்
பிரார்த்தனைகளிலும்...
விரதங்களிலும்...
இளைத்துப் போய்க்கிடந்த அம்மா
கப்பலிலோ அல்லது களவாயோ
நீ பத்திரமாய் போய்ச்சேர்ந்து விட்டாய்
என்கிற மகிழ்ச்சியில்
சற்று புரித்திருக்கிறாள் இப்போ.

அப்பா!
புரியவில்லையப்பா எனக்கொன்றும்...
புரியும் வயதும் இல்லையப்பா...
நான் எதிர்பார்த்திராத கணமொன்றில்
நேற்று நீ
திடீரென கணணியில் தெரிந்தாய்.
கை காட்டினாய். சிரித்தாய்.
கதை கேட்டாய். கண் கலங்கினாய்.
பின்னர்
ஒரு கடவுளைப்போல
“பை” சொல்லிக்கொண்டு திடீரென்று
மறைந்து போனாய். என்னால்
கதைக்கவே முடியவில்லையப்பா.
மிக்கி மவுஸையும் டோரா பூச்சியையும்
பார்த்துச் சிரிக்கிற அதே திரைக்குள்
உன்னைப் பார்க்கிறபோது அழுகை வருகிறதப்பா.

“எப்ப வருவீங்களப்பா?”
என்ற என் மௌனமுடைத்த
ஒற்றைக் கேள்விக்கு
நீங்க தான் செல்லம் இங்கை வரவேணுமென்றீர்கள்...
எப்போது? எப்படி?
என்று சொல்லவே இல்லையப்பா.
இப்போதெல்லாம்...
அம்மாவும் நானுமாய்...
அடிக்கடி உங்களோடு கதைக்கிறோம்
கண் கலங்குகின்றோம்.
பறக்கும் முத்தங்கள் பரிமாறுகிறோம்.
பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்கிறீர்கள்.
பாடிக் காட்டுகிறேன்.
புதுச்சட்டை போட்டுவந்து காட்டுகிறேன்.
நான் வாய்க்குள் வைத்து
எச்சிற்படுத்திய ஈர இனிப்பை
உங்களுக்கு ஊட்டுவதற்காய்
கணணித் திரையில் மூட்டுகிறேன்.
நீங்களோ
விழுங்கிக் கொள்ளமுடியாமல்
விரக்தி கலந்து சிரிக்கிறீர்கள்...

என்ன வேணும் பிள்ளைக்கு?
என்று நீங்கள் கேட்கிறபோது
மௌனம் போர்த்து விம்முகிறேன் நான்.
உங்களுக்கு புரியுமப்பா
என் மௌனத்தின் சத்தம்.
எந்தன் குட்டி மனசுக்குள்ளும்...
எந்த குறைகளுமில்லாமல்
எனை வளர்க்கிற அம்மாவின் மனசுக்குள்ளும்...
எப்போதும்
ஒன்றாகவே துடித்துக்கொண்டிருக்கிறது
ஒரு கண்ணீர்க் கேள்வி.
எப்போது
உங்களோடு எமை சேர்க்கப்போகிறது?
எமது விதியும் - காலமும்.

**-தீபிகா-**

மணிப்புலவர் மருதூர் ஏ மஜீத்

# தமிழ்த்தொண்டு செய்த முஸ்லிம் புலவர்கள்

**சென்ற இதழின் தொடர்ச்சி**

இவருடைய புலவர் செய்கு அலாவுதீனின் பாக்களெல்லாம் அதிகமாக "பதம்" என்ற இனத்தைச் சேர்ந்ததாகும். வழிநடைச்சிந்து, நாவண்ணக்கீர்த்தனை, சர நூல் என்பன இவரால் பாடப்பட்டவை. இன்னும் பாலர் பாடல், சுகாதாரப்பாடல் என்னும் தலைப்புக்களிலும் பாக்கள் பாடியுள்ளார். சுகாதார விதி என்னும் தலைப்பின் கீழ் பாடும்போது,

"கைவிரல் வாயில் வையாதீர்-எச்சில்
கண்டவிட மெல்லாம் துப்பாதீர்.."

போன்ற விதிகளை அழகு தமிழிலே சுட்டிக் காட்டியிருக்கிறார். இவர் வசைக் கவிபாடுவதில் மட்டுமல்ல சாபக்கவிபாடுவதிலும் வல்லவர். இவர் சாபமிட்டால் அதிலிருந்து தப்பமுடியாது என்று அவ்வூர் மக்கள் கதைத்துக் கொள்வார்கள்.

இவர் ஒருநாள் கமலன் என்ற மரவள்ளித் தோட்டக்காரனிடம் கிழங்கு கேட்டார். அவன் கிழங்கு கொடுக்கவில்லை. உடனே புலவருக்குக் கோபம் வந்துவிட்டது. பாடினார் சாபக்கவி யொன்றை

"வழங்கும் பணம் வாங்கிக் கொண்டென் பசிக்குக்
கிழங்கீந்திடென்றுனை நான் கேட்டேன்.
வழங்கினையில் கமலனே நாளைக்காலையிலே சத்தியமாய்
எமனுனைக் காண்பானிரு"

என்று புலவர் பாடியபடி, கமலன் அடுத்தநாள் இறந்தே விட்டானாம்.

அடுத்தபடியாக மட்டக்களப்புப் பகுதியிலேயே வாழ்ந்த ஒரு சில படிக்காத அதாவது பாடசாலைப்படிகளில்கூட மிதித்தறியாத இயற்கைப் புலவர்கள் பலர் அரும் பெரும் கவிகளைத் தமிழ் மொழியிலே பாடித் தமிழ்த் தொண்டு செய்துள்ளார்கள். அவற்றுள் பல ஏட்டில் எழுதாத காரணத்தினால் அழிந்து ஒழிந்து மறைந்துவிட்டன. ஆனால் ஒருசில, சிலரின் பெருமுயற்சியால் பாதுகாக்கப்பட்டுவந்தபடியால் அவைகள் இன்றும் எம் முன்னே தரத்தோடு தலைநிமிர்ந்து நின்று, தமிழுக்குத் தன்னிகரில்லாப் பெருமையை அளித்துக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட பாடல்களைப் பாடிய புலவர்களுள் அக்கரைப்பற்றைச் சேர்ந்த "சேகுமதார்ப்புலவர்" என்பவர் பிரதான இடத்தைப் பெறக்கூடியவர். இவருடைய பாடல் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேன் விருந்து. அக்கரைப்பற்றை முன்னொரு காலத்தில் கரும்கொடித்தீவு என்றழைத்தார்கள். அவ்வூரைப் பற்றிப் புலவர் கூறும்போது,

"புண்டரீக மலர்த்தடத்தின் வாவிசூழ,
புதுவரிகள் அதிலுறைந்து ராகுபாட,
வண்டுமிழ்ந்த அமிழ்தமொருவாவியாகி,
வதுவையர்கள் நீராட அமுதுள் ஏகி,
தண்டமிழால் உவவையுரை குய்யம்விம்ம,
சகிக்கவொணா மதக்குதலை சிசுக்கள் தாவி,
அண்டியிரு இதழ் அதனால், உறுஞ்சிவாழும்,
அருமழலை குடிகொள் கருங்கொடி யெங்களுரே.."

செல்வங்களெல்லாவற்றிலும் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம். இப்படிப்பட்ட செல்வங்கள் வாழ்கின்ற கருங்கொடித்தீவுதான் எங்களூர் என்று வர்ணித்திருக்கிறார். இன்னும்

"புண்டரீக மலர்த்தடத்தின் வாவி சூழ,

புதுவரிகள் அதிலுறைந்து ராகு பாட

வண்டுமிழ்ந்த அமிழ்தமொரு வாவியாகி" என்று அங்குள்ள வாவியை அமிழ்தென்று, அழகு தமிழிலே வர்ணித்திருப்பது புலவரின் கவித்திறனையும் தமிழாற்றலையும் எங்களுக்கு எடுத்துக்காட்டுகின்றது.

புலவர் ஒருநாள் வயலுக்குத் தண்ணீர் இறைத்து விட்டுக் களைப்பு மிகுதியால் வரப்பிலே உட்கார்ந்திருந்தார். அப்போது அவர் மனைவி கையிலே கலசம் ஏந்தித், துள்ளு நடை போட்டுப், புதுப் பொலிவோடு



புன்முறவல் தவழ, கண்ணுக்கெட்டிய தூரத்தில் வந்து கொண்டிருந்தாள். இதைக்கண்டதும் புலவருக்குக் களைப்பு நீங்கி கவிபாடும் திறமை வந்துவிட்டது.

"ஏத்திட்டுத் தண்ணீர் இறைத்திட்டு நானங்கிருக்கையிலே


மாத்திட்டுக் கூந்தலை வாந்திட்டுப் பாக்கிட்டுப் பச்சைப்பற்காவியிட்டு

மேற்கிட்ட திங்களைப் போல் அங்கொருத்திவரக் கண்டேனே"

அவருடைய மனைவி வரும்போது அழகோடு கூடிய மாற்றங்கள் எவ்வளவோ தென்பட்டிருக்கிறது. அதனால்தான் போலும் புலவர் "மாத்திட்டுக் கூந்தலை வாந்திட்டுப் பாக்கிட்டுப் பச்சைப் பற்காவியிட்டு மேற்கிட்ட திங்களைப் போல் அங்கொருத்தி வரக்கண்டேனே" என்று பாடினார்.

இவ்வாறு நினைத்த உடனேயே கவிபாடும் திறமையுள்ள படிக்காத புலவர்கள் பலர் தமிழ்த் தொண்டு செய்துள்ளார்கள். மேலும், அக்கரைப்பற்றைச் சேர்ந்த முகம்மது ராபி, ஹாசிம் பாவலர் என்பவர்களும், சாய்ந்தமருதூரைச் சேர்ந்த சீனி முகம்மது புலவரும், மன்னாரைச் சேர்ந்த பக்கீர்ப் புலவரும் தமிழ்த்தொண்டு செய்தவர்களே.

# விண்வெளியை சுத்தம் செய்ய 9,000 கோடி



ஆராய்ச்சிகளுக்காக விண்ணுக்கு அவ்வப்போது அனுப்பப்படும் செயற்கைக்கோள்கள் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு செயலிழந்து விடுகின்றன. இன்னும் சில செயற்கைக் கோள்கள் தோல்வியடைகின்றன. இதனால் ஏற்படும் கழிவுப் பொருட்கள் வானத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன. சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை தடுப்பதற்காக, உடைந்த செயற்கைக் கோள்களின் பாகங்களை அகற்றுவதற்காக ரஷ்ய விண்வெளி கழகம் (எனர்ஜியா) 9 ஆயிரம் கோடி செலவில் ஒரு அணுசக்தியில் இயங்கும் ஒரு செயற்கைக் கோளை விண்வெளிக்கு அனுப்பவுள்ளது. இது மிதக்கும் கழிவுகளை பூமியை நோக்கி தள்ளிவிடும். அடுத்த 10 ஆண்டுகளுக்குள் சுமார் 600 செயற்கைக் கோள்களின் உடைந்த பாகங்கள் விண்வெளியிலிருந்து அகற்றப்படும் என எனர்ஜியா தெரிவித்துள்ளது. எனினும் இந்த செயற்கைக்கோள் 2020ல் தான் தயாராகும்.

## சிந்தனைகள்

**"ஒழுங்காக தியானம் செய்வதைப் பழக்கமாக்குங்கள். இது அமைதி தருவதோடு தொந்தரவு தரும் எண்ணங்களிலிருந்து விடுவிக்கவும் செய்கிறது"**


# பைல் ரீ-ஸ்டோர் செய்ய

பொதுவாக நாம் நமக்குத் தேவையற்ற பைல்களை கணனியிலிருந்து அழித்துவிடுவதுண்டு. பைல்களின் எண்ணிக்கை அதிகமானதும் ரீ - சைக்கிள் பின்னிலும் அது இருக்காது. ஆனால் அந்த பைல் பிறகு நமக்குத் தேவைப்படும். இனி அக்கவலையையே வேண்டாம். இந்த சொப்ட்வெயார் அந்தக் குறையை நிவர்த்தி செய்கின்றது. 4 எம்.பி. கொள்ளளவு கொண்ட இதனை பதிவிறக்கம் செய்ய இங்கு செல்லவும் http://www.4shared.com/file/mljXSxX0/filerestoreplus_setup.html.





உங்கள் கணனியில் நிறுவியதும் உங்களுக்கு கீழ்கண்ட விண்டோ ஓப்பின் ஆகும்.

இடது பக்கம் உங்கள் கம்பியூட்டரில் உள்ள டிரைவ்கள் ஓப்பின் ஆகும். தேவையான டிரைவை தேர்வு செய்து ஸ்டார் ஸ்கேன் அழுத்தவும். அப்போழுது உங்களுக்கு வலது பக்கம் அந்த டிரைவில் உள்ள பைல்களின் வகைகளும் அது உள்ள நிலைமையும் உங்களுக்கு தெரியவரும்.





இந்த சொப்ட்வெயாரில் என்ன விசேடம் என்றால் இடதுபக்கம் உள்ள விண்டோவில் எந்த பைல் எவ்வளவு உள்ளது என்கின்ற விபரம்தெரியும். புகைப்படமா - டெக்ஸ்டா - பிடிஎப் பைலா - எம்பி3 பைலா - வீடியோ பைலா என வகைப்படுத்திஉள்ளதால் நாம் நமது தேடலை சுலபமாகத் தேடிக்கொள்ளலாம். மேலும் பைலின் திகதி மற்றும் அளவை வைத்தும் தேடலாம். அதற்கும் இதில் வழி உள்ளது.



■ -கண்ணன்-



# யாழ்ப்பாணத்தில் எப்போது துளிர்விடும் ஜனநாயகம்?



**கா**ணாமற் போனவர்களைக் கண்டு பிடித்துத் தர வலியுறுத்தியும், சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கவும், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்களை வெளியிடக் கோரியும் யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்றை நடத்தச் சென்ற ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெற்றி தாக்குதலுக்கு உள்ளாகியிருந்த செய்தி நீங்கள் அறிந்ததே.

ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்தைப் பின்தொடர்ந்து சென்ற இனந்தெரியாத நபர்கள், அவரை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனின் இல்லத்தில் வைத்து தாக்கிவிட்டு மறைந்துள்ளனர். அதுமட்டுமல்ல, மறுநாள் யாழ்.பஸ் நிலையம் முன்பாக ஜே.வி.பியின் முக்கிய தலைவர்களும், காணாமற்போனோர் மற்றும் தடுப்புக்காவலில் உள்ளோரின் உறவினர்களும் இணைந்து போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த போது முட்டை, கற்கள், தக்காளிப்பழங்கள் போன்றவற்றால் தாக்கப்பட்டிருந்தனர்.

இவையனைத்தும் படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தில்தான் நடந்தேறியுள்ளன.

இந்த இரண்டு சம்பவங்களுடனும் தொடர்புபட்ட எந்தவொரு சந்தேக நபருமே இதுவரையில் பிடிபடவில்லை என்பது பெரிய ஆச்சரியம். இந்த இரண்டு தாக்குதல் சம்பவங்களும் பல உண்மைகளை உணர வைக்கின்றன. காணாமற்போனோர், கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் சார்பில் எந்தவொரு போராட்டமும் வடக்கில் நடைபெறுவதை அரசாங்கம் விரும்பவில்லை. அதைவிட வடக்கில் எந்தவொரு ஜனநாயக ரீதியான போராட்டமும் நடைபெறுவதையும் அரசாங்கம் கொஞ்சம் கூட விரும்பவில்லை. ஏற்கனவே சில பொது நலன் சார்ந்த பேரணிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பின்னர், அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு நிறுத்தப்பட்டன. அது போன்றே இந்தப் போராட்டத்தையும் நிறுத்திவைக்க கடுமையான பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனாலும் ஜே.வி.பியினர் என்பதால் இந்தப் போராட்டம் திட்டமிட்டபடியே நடத்தப்பட்டது. வேறெந்த அரசியல் கட்சியும் இதை ஒழுங்கு செய்திருந்தால் நிச்சயமாக பாதுகாப்பு இல்லையென்று கூறி அது கைவிடப்பட்டிருக்கும் என்பது உறுதி. யாழ்ப்பாணத்தை ஒரு சொர்க்க பூமியாக வெளியில் காட்டும் முயற்சியில் இறங்கியுள்ள அரசாங்கம் இப்படியான போராட்டங்கள் அங்கு நடைபெறுவதை விரும்பவில்லை. இது தான் உண்மை.

இதனால்தான் அதைத் தடுப்பதற்கு அத்தனை முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதிலிருந்து ஒன்றை மட்டும் புரிந்து கொள்வது இலகுவாகிறது. யாழ்ப்பாணத்தில் சுதந்திரமான அரசியல் சூழல் இல்லை என்பதே அது. யாழ்ப்பாணத்தில் சுதந்திரமான அரசியல் சூழலையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக அரசாங்கம் கூறிவந்தது அனைத்தும் பொய் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கருத்துக்கு முரணான எதையும் செய்ய முடியாது என்ற நிலை இன்னமும் அங்கு தொடர்கிறது. இது வடக்கு மாகாணசபைக்கான தேர்தலும் உள்ளூராட்சித் தேர்தலும் வரப்போகின்ற நிலையில் ஆரோக்கியமானதொன்றாக இருக்க முடியாது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் சட்டம், ஒழுங்கு பற்றிய இன்னொரு கேள்வியும் எழுந்துள்ளது. சுனில் ஹிந்துநெற்றி மீது தாக்குதல் நடத்தியவர்களைப் பொலிஸார் இன்னமும் கைது செய்யவில்லை. விசாரித்தோம், விசாரிக்கிறோம், விசாரித்துக் கொண்டே இருப்போம் என்ற பாணியில்தான் அவர்களின் செயற்பாடுகள் இருக்கின்றன. எப்போது வரை இந்த விசாரணைகள் நடக்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் சுனில் ஹந்துநெற்றி குற்றம் சாட்டியுள்ளது



தாக்குதலில் ஈடுபட்டவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள்

போன்று, அரசதரப்புக்கு ஆதரவான குண்டர்களாக அல்லது இராணுவப் புலனாய்வுத்துறையினராக இருக்கலாம். சுனில் ஹந்துநெற்றி தன் மீது தாக்குதல் நடத்தியவர்கள் அரசின் ஆதரவு பெற்ற இராணுவப் புலனாய்வுத்துறையினரே என்று கூறியுள்ளார். இந்த நிலையில் எந்தவொரு கட்டத்திலும் அவர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் கண்டுபிடிக்கப்படப் போவதில்லை என்பது உண்மை.

இதை யாழ்ப்பாணத்தில் நடந்த பல சந்தர்ப்பங்களில் கண்டுள்ளோம். ஊடகவியலாளர் நிமலராஜன் சுட்டுக்கொல்லப்பட்டு பத்து ஆண்டுகளாகின்றன. ஆனால் குற்றவாளியைக் கைது செய்து இன்னும் தண்டனை பெற்றுக் கொடுக்காத நிலை தொடர்கிறது. அதுபோல கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையாளிகள் கண்டுபிடிக்கப்படவேயில்லை. அரசுக்கு எதிராக குரல் கொடுத்த எத்தனையோ நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுதந்திரமாகச் செயற்பட்ட எத்தனையோ ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்களின் பின்னால் உள்ள குற்றவாளிகள் இதுவரை கூண்டில் ஏற்றப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் நிறையவே இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் எந்தச் சம்பவத்திலும் தொடர்புடைய குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படவில்லை.


அரசாங்கமோ நாடெங்கும் ஒரே சட்டம், ஒரு நீதி உள்ளதாக கூறிக் கொண்டாலும் நடைமுறையில் அது சாத்தியமற்றதொன்றாகவே இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் ஒருவிதமான சட்டமும் தெற்கில் இன்னொரு விதமான சட்டமும்தான் உள்ளது. இதை ஜே.வி.பியினர் மீதான தாக்குதலில் இருந்தும் புரிந்து கொள்ள முடிகிறது. சுனில் ஹந்துநெற்றி மீதான தாக்குதலின் விளைவு என்பது இனரீதியான மோதல்களை உருவாக்கக் கூடியது. ஆனாலும் அரசாங்கம், அது ஆத்திரம் கொண்ட யாழ்ப்பாண மக்களால் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொறுப் புணர்வின்றி குற்றம் சாட்டியுள்ளது. யாழ்ப்பாண மக்கள் இப்படித் தாக்குதல் நடத்தத் தொடங்கியிருந்தால் எந்தவொரு தென்னிலங்கை அரசியல்வாதியும் அங்கு காலடி எடுத்து வைத்திருக்க முடியாது என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

வன்முறைகளில் இருந்து விடுபட்டு வாழ நினைக்கும் தமிழர்களைத் தொடர்ந்தும் வன்முறையாளர் களாகக் காட்ட அரசாங்கம் முனைவதில் இருந்தே அதன் அடிப்படை நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். அதேவேளை இன்னொரு பக்கத்தில் இப்போது ஜே.வி.பியினர் நடத்த முற்படும் அரசிய லும், தமிழ்மக்களின் விருப்பத்துக்குரியதல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. ஜே.வி.பியினர் கடந்த காலங்களில் அமைதி முயற்சிகளுக்கு எல்லாம் எந்தளவுக்குத் தடை யாக இருந்தார்கள் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

2002 இற்கும் 2006 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜே.வி.பி ஆடிய ருத்ரதாண்டவத்தின் விளைவுகள் போரில் கொண்டு போய்த் தமிழரை நிறுத்தியது என்றால் மிகையில்லை. அப்போது தமிழருக்கு நியாயமான உரிமைகள் கிடைக்கக் கூடாது என்பதற்காக அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு ஜே.வி.பியினர் நடத்திய போராட்டங்கள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தின என்பது தமிழரின் மனங்களில் இருந்து இன்னமும் மறந்து போகவில்லை. அதே ஜே.வி.பி இப்போது தமிழரை வைத்து அரசுக்கு எதிரான அரசியலை நடத்த முனைகிறது.

தெற்கில் அவர்களின் திட்டங்கள் பலிக்காமல் போகவே, அவர்கள் வடக்கில் காணாமற் போயுள்ள தமிழர்களை வைத்து அரசியல் நடத்த ஆரம்பித்துள்ளனர். காணாமற்போன, தடுப்பிலுள்ள உறவுகளுக்காக ஜே.வி.பியினர் குரல் கொடுக்க வந்தபோது அவர்களுடன் தமிழ் மக்கள் இணைந்து கொண்டனர். ஆனால் அதற்காக அவர்களின் அரசியல் கொள்கையுடன் தமிழ்மக்கள் ஒருபோதும் ஒத்து நிற்கப் போவதில்லை என்பது வெளிப்படை. உண்மையில் சொல்லப் போனால் தமிழர்களுக்கு நிறையவே மன்னிக்கும் மனப்பாங்கு வளர்ந்து விட்டது. அதனால் தான் அவர்கள் கடந்த காலங்களில் தமக்குத் தீமை செய்தவர்களைக்கூட அதை மறந்து விட்டு அவர்களை இப்போது கைகூப்பி வரவேற்கிறார்கள்.

இந்த மன்னிக்கும் மனப்பாங்கை வைத்துக் கொண்டு தமது அரசியல் நலன்களுக்குப் பயன்படுத்த ஜே.வி.பியினர் முயற்சிக்கக் கூடாது. ஜே.வி.பியினர் மட்டுமன்றி எந்தவொரு சக்தியாவது இதை வைத்து அரசியல் இலாபம் ஈட்ட முனைந்தால் அதற்கு தமிழ் மக்கள் நிச்சயம் இடம் கொடுக்க மாட்டார்கள் என்றே நம்பலாம்.



■ சாகித்யா



# 15 வருடகால வர்த்தக உலகில் தனக்கென தடம் பதித்திருக்கும் UKAAYE நிறுவனம்.

ஒரு திருமணத்தை நடத்தி முடிப்பதென்பது அவ்வளவு இலேசான காரியம் அல்ல. 5, 6 மாதங்களுக்கு முன்பே தயார்படுத்தல்கள் எல்லாம் ஆரம்பமாகிவிடும். அதிலும் முக்கிய மான இடத்தைப் பிடிப்பது திருமண அழைப்பிதழ்கள்தான். அவர் களின் எண்ணங்களுக்கு ஏற்ற வகையில் அவற்றைத் தேர்ந் தெடுப்பதென்பது இலேசான காரியம் அல்ல. அதற்காக இலங்கை முழுவதும் அலைந்து திரிந்து சிலநேரம் வெளிநாடுகளிலிருந்து கூட இறக்குமதி செய்வர்.

இன்று பெரும்பாலும் இதற்கான கெடுபிடிகள் குறைவாகவே காணப்படுகிறது எனலாம். காரணம் திருமண அழைப்பிதழ்கள் என்றால் இன்று உடனே ஞாபகத்துக்கு வருவது 'திருமண அழைப்பிதழ்களின் தாயகம்'என்றழைக்கப்படும் UKAAYE. தலைநகரில் 14 வருடங்களாக தடம்பதித்த இந்நிறுவனம் அண்மையில் 15 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்தது. இந்நிகழ்வுக்கு என்னை அழைத்தபோது நானும் சாதாரணமான ஒரு நிகழ்வு என்ற எண்ணத்துடன்தான் சென்றேன். நிகழ்வு மண்டபம் நிறைந்த விருந்தினர்களால் களைகட்டியிருந்தது. கொழும்பில் உள்ள அனேகமான விற்பனை பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் என அனைவரை யும் ஒருமிக்க அங்கே காணக் கிடைத்தது.

UKAAYE இன் முகாமையாளர் S. சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஓய்வுபெற்ற நீதியரசர் C.V. விக்னேஷ்வரன் அவர்களும், கௌரவ அதிதிகளாக கம்பவாரிதி இ. ஜெயராஜ் மற்றும் தினக்குரல் அதிபர் சாமி அவர்களும் கலந்துகொண்டார்கள்.

நிகழ்வில் UKAAYE நிறுவனத்தில் அழைப்பிதழ்களைக் கொள்வனவு செய்த மட்டக் களப்பைச் சேர்ந்த நிரோஷன் - மகாசுமேதை ஜோடிக்கும் வவுனியாவைச் சேர்ந்த சிவபால முகுந்தன் - துஷ்யந்தினி ஜோடிக்கும் நினைவுச் சின்னங்களும் இந்தியா சென்றுவர இலவச விமானப் பயணச் சீட்டுக்களும் வழங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து வரும் காலத்திலும் இவ்வாறு பல அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட விருப்பதாக UKAAYE முகாமையாளரால் தெரிவிக்கட்டது.

1996 ஆம் ஆண்டு மிகச் சிறிய அளவில் ஆரம்பிக்கப் பட்ட இந்நிறுவனம் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று ஒரு விருட்சமாக வளர்ந்து சேவை செய்கின்றது. பொதுவாக ஒருவர் தான் வளரும்போது பல்வேறு தடைகள், சோகங்கள், கஷ்டங்கள், இழப்புகளைச் சந்திக்க நேரிடும். இவரும் இதற்கு விதிவிலக்கல்ல. பலர் தாங்கள் கடந்துவந்த பாதையை எளிதில் வெளியில் சொல்வது கிடையாது. ஆனால் தான் ஆரம்ப கட்டத்தில் பட்ட கஷ்டங்கள், துன்பங்களை அவர் கூறும்போது, நாம் படும் கஷ்டங்கள் எல்லாம் ஒரு கஷ்டமே இல்லை என எனக்குத் தோன்றியது. 2001 ஆம் ஆண்டு இவரது கடை உடைக்கப்பட்டபோது மிகவும் வேதனை அடைந்துள்ளார். அப்போது அவரது மனைவிதான் அவருக்கு ஆறுதல் கூறியுள்ளார். இவரைச் சுற்றியுள்ளோர் கொடுத்த ஆறுதல்தான் இன்று அவரை இந்தளவு உயர்த்தியிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. தன் ஆரம்ப கால சம்பவங்களை இவர் நினைவுகூறும்போது கண்கலங்கினார். அத்தோடு தொழில் தொடங்குனர்களுக்கு தன் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களை அறிவுரையாகக் கூறினார்.

தினக்குரல் அதிபர் சாமி அவர்கள் உரையாற்றும்போது கூட 'என் திருமணத்திற்கு அழைப்பிதழ் தேடி கொழும்பு முழுவதும் அலைந்தேன். அன்று நான் பட்ட கஷ்டம்தான் என்னை ஒரு அச்சகம் வாங்க வைத்தது' என்று குறிப் பிட்டார்.







தன் வாழ்நாளில் தன்னோடு பாடுபட்ட அனைவரையும் UKAAYE பாராட்டவும் கௌரவிக்கவும் தவறவில்லை. இன்று சகல இன மக்களும் UKAAYE க்கு வாடிக்கை யாளர்களாக இருப்பது அதன் தனித்துவத் திற்கு நல்ல சான்று. வாடிக்கையாளர் களுக்கு இவ்வாறான சேவையை வழங்கு வதில் இந்நிறுவனம் முன்னின்று செயற்படு வது பாராட்டப்படவேண்டிய ஒன்று. ஆனால் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஜோடிகளுக்கு வெளிநாடு சென்றுவர விமான டிக்கட் வழங்குவதைக் காட்டிலும் இப்படி ஒரு திட்டத்தை UKAAYE அறிமுகப்படுத்துமாயின் அதன் புகழ்



வானளாவப் பரவும். அதாவது இன்று எத்தனையோ பேர் திருமண அழைப்பிதழ்கள் அச்சிடுவதற்கு வசதியில்லாமல் இருக்கின்றனர். ஆசைகள் இருந்தும் நிறைவேற்ற முடியாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறான மக்களுக்கு சலுகை அடிப்படையில் அல்லது இலவசமாக தன்னாலான உதவிகளை செய்யலாம். கொள்வனவு செய்பவர்களில் இருந்து அதிஷ்டசாலிகளை தெரிவுசெய்வதிலும் பார்க்க நாடளாவிய ரீதியில் திருமணம் நிச்சயிக்கப்பட்ட ஜோடிகளிடம் விண்ணப்பத்தைக் கோரி அதிலிருந்து தெரிவுசெய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு இவ்வாறான உதவிகளை வழங்கினால் அது பயனுள்ளதாக அமையும்.

ஒரு தொழிற்துறையில் 15 வருடங்கள் நிலைத்து நிற்பது என்பது அவ்வளவு சாதாரணமானதல்ல. தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமே ஒருவனை உயர்நிலைக்குக் கொண்டுபோகின்றது. இதை சிவகுமார் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார். அதுமட்டுமல்ல ஒரு நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்கும், தன்னிகரில்லாததாக தன்னை உயர்த்துவதற்கும் அந்நிறுவனத்தில் பணிபுரிபவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. ஒவ்வொருவரும் ஆத்மார்த்தமாக தம்மை அர்ப்பணித்து தான் சார்ந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபடவேண்டும். இவ்வாறான ஒரு குழுவினர் இருந்தால் மட்டுமே அந்நிறுவனம் நீண்டகாலத்திற்கு நிலைத்திருப்பதுடன் போட்டி நிறைந்த உலகில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். சிறந்த முகாமைத்துவம், ஆளணி வளம், கடமையுணர்ச்சி இத்தனையையும் இந்நிறுவனத்தினர் கொண்டிருப்பது அவர்கள் வாடிக்கையாளர்களுடன் பழகுவதிலிருந்தே தெரிந்துகொள்ளக் கூடியதாகவிருக்கிறது. அவ்வாறான அர்ப்பணிப்புள்ளவர்களைக் கொண்டு தனக்கென ஒரு முத்திரையைப் பதித்த ருமுஹஹலுநு நிறுவனம் நீண்டகாலம் வர்த்தக உலகில் நிலைத்திருக்க நாமும் வாழ்த்துவோம்.



உள்ளத்தை வெற்றிடமாக ஒருபோதும் விடாதீர்கள். காரணம் தீய பழக்கங்கள் வெற்றிடமான மனங்களிலிருந்தே உருவாகின்றன. உங்கள் உள்ளத்தைச் சில நேர்மறை எண்ணங்களாலும் பயனுள்ள விஷயங்களாலும் நிறைத்து வையுங்கள்.

# கொஞ்ச நேரம்



## 'பெட்டிசக் கலாச்சாரம்!'

வணக்கம் பாருங்கோ. எப்பிடி சுகமா இருக்கிறியளே!

'பெட்டிசம்' போடுறது பாருங்கோ... அந்தக் காலத்திலயிருந்து இண்டைக்கு வரைக்கும் எங்கட தமிழாக்களில இருக்கிற நல்ல பழக்கம். யாழ் நீதிமன்றத்தில சட்டத்தரணிகளாக பணிபுரிகிற முன்னாள் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரும், முன்னாள் யாழ் மாவட்ட நீதிபதி ஒருவரும் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த விசேட பொலிசாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கினமாம். தற்போதைய யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மற்றும் யாழ் மேல் நீதிமன்ற பெண் ஊழியர் ஒருவருக்கு எதிராக மொட்டைப் பெட்டிசம் போட்டு அபகீர்த்தி ஏற்படுத்தி வருகின்றனர் என்ற முறைப்பாட்டின்மேலேயே இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகினமாம் பாருங்கோ.

கொழும்பிலயிருந்து வருகைதந்திருந்த விசேட குற்றத்தடுப்பு பொலிசாரினால் பல மணி நேரம் இவர்கள் இருவரும் விசாரிக்கப்பட்டதாகவும் இவர்களது விசாரணைகளைத் தொடர்ந்து இவர்கள் பெட்டிசம் தயாரிக்கப் பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் கணனி உபகரணங்களை மேலதிக விசாரணைகளுக்காக விசாரணையாளர்கள் எடுத்துச் சென்றிருக்கினமாம் பாருங்கோ. இவர்களது விசாரணைகளுடன் யாழ் உயர் நீதிமன்ற பெண் பதிவாளர் உட்பட ஐந்து நீதிமன்ற ஊழியர்கள் கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரி நீதிமன்றங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கினமாம். இதுக்கு சில கிழமைகளுக்கு முன்னால், யாழ் மேல் நீதிமன்ற நீதிவானுக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்குப் பிறகு நீதிமன்ற ஊழியர்கள் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கினமாம் பாருங்கோ.

யாழ்ப்பாண பெட்டிசக் கலாச்சாரம் பரவலாக எல்லோருக்கும் தெரிஞ்ச விசயம். யாழ்ப்பாண உதவி மேயர் திருவாளர் துரைராசா இளங்கோக்கு எதிராக, அவர் முன்னாள் சாவகச்சேரி நீதவான் திருவாளர் பிரபாகரனுடைய வாசஸ்தலத்திற்கு அண்மையில துப்பாக்கியுடன் நடமாடித் திரிஞ்சார் என கடந்த ஏப்ரல் மாதம் அனுப்பப்பட்டிருந்த 'மொட்டைப் பெட்டிசம்' ஒண்டால அவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில வைச்சு அவர் விசாரணை செஞ்சு வருகினமாம் பாருங்கோ.

நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிரான விசாரணைகள் பற்றி கருத்துத் தெரிவித்த யாழ் சட்டத்தரணி ஒருத்தர், இப்பிடிச் சொன்னார் பாருங்கோ. திருவாளர் துரைராசா இளங்கோ, யாழ் மாநகரின் உதவி மேயராக இருந்தாலும்கூட தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்திற்காகவே அவர் 'மொட்டைப் பெட்டிசம்' ஒன்றின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார் எனவும், தற்போது மொட்டைப் பெட்டிசத்தின் பேரில் விரசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்கள் உயர்சாதியினர் என்பதால் கைது செய்யப்படவோ தடுப்புக் காவலில் வைக்கப்படவோ சாத்தியமில்லை எனவும் தெரிவித்தார். யாழ்ப்பாணம் எங்க நிக்குது பாத்தியளே!

இந்தப் புதினங்கள் பற்றி யாழ் பத்திரிகைகள் ஒண்டும் வாய் திறக்கேல பாருங்கோ!

அப்ப நான் போட்டு வரட்டே....

சிலோன் சின்னத்தம்பி



# நீங்கள் நீரிழிவு நோயாளரா?


டொக்டர். எம்.கே. முருகானந்தன்.

## பழங்கள் சாப்பிடுங்கள்! தோலுடன் சாப்பிடுங்கள்!


அப்பிள்


பியர்ஸ்


மாதுளை


அவகாடோ


அப்ரிகொட்


புளுபெரீஸ்

"பழங்கள் இனிப்பானவை. எனக்கு நீரிழிவு இருக்கிறது. எனவே சாப்பிடுவது கூடாதுதானே" எனப் பழங்கள் சாப்பிடத் தயங்கும் நீரிழிவு நோயாளர்கள் அதிகம். "இல்லை. நீரிழிவு நோயாளர்கள் தினமும் பழங்கள் சாப்பிடுவது நல்லது" என நான் பலமுறை பத்திரிகைகளில் எழுதியும், கருத்தரங்குகளில் பேசியும், நோயாளர்களுக்கு நேரடியாக விளக்கியும் இருக்கிறேன். இருந்த போதும் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியுள்ளது.

மாறாக பழங்களை உட்கொண்டு வரும் சிலர் "எவ்வளவு பழங்கள் வேண்டுமானாலும் சாப்பிடலாமா?" எனக் கேள்வி எழுப்புவர். "எந்தப் பழம் சாப்பிடலாம்?" எனக் கேட்பவர்களும் பலர். இத்தகைய கேள்விகளுக்கான சில விளங்கங்களாக அமைகிறது இக்கட்டுரை.

### நார்ப்பொருள்

பொதுவாக நார்ப்பொருள் அதிகம் உள்ள பழங்கள் நல்லது. ஏனெனில் பழங்களில் உள்ள நார்ப்பொருட்கள் சமிபாடு அடைவதைத் தாமதப்படுத்தும். இதனால் குருதியில் சீனியின் அளவு திடீரென அதிகரிப்பதைத் தடுக்கும். தோல் நீக்காது உண்ணும் பழங்களில் நார்ப்பொருள் அதிகளவு உண்டு. ஏனெனில் பழங்களின் தோற்பகுதியிலே அதிகளவு நார்ப்பொருள் உண்டு. அப்பிள், பியர்ஸ் போன்றவற்றை குறிப்பிடலாம். மாம்பழம், கொய்யாப் பழம், இலந்தைப் பழம், நாவல் பழம் ஆகியவையும் தோலுடன் சாப்பிடப்படுபவையே. ஆயினும் இலந்தை, நாவல் ஆகியவை பற்றிய போசாக்குத் தகவல்கள் என்னிடம் இல்லை.

விதைகளுடன் உண்ணக்கூடிய பழங்களிலும் நார்ப்பொருள் அதிகம் இருப்பதால் குருதியில் சீனியின் அளவு திடீரென அதிகரிப்பதைத் தடுக்கும். அதிக நார்ப்பொருள் உள்ள பழவகைகளில் மேற்கூறிய அப்பிள், பியர்ஸ் ஆகியவற்றுடன் மாதுளை, அவகாடோ போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

### சில பழங்களில் உள்ள நார்ப்பொருளின் அளவுகள் வருமாறு...

அப்பிள் (2.5 %), பியர்ஸ் (2.2 %) ஆகியவற்றுடன் மாதுளை (3.4 %), அவகாடோ (6.7 %), அப்ரிகொட் (apricots) (2.1 %), புளுபெரீஸ் (blueberries) (2.7 %), கிவிபுருட் (kiwifruit) (2.1 %) ஆகியவை மேல்நாட்டுப் பழங்களாயினும் இப்பொழுது இங்கும் கிடைக்கின்றனவே.

இவற்றுள் அவகாடோ மிக அதிகளவான நார்ப்பொருள் உடையது என அவதானித்திருப்பீர்கள். அத்துடன் அதிலுள்ள கொழுப்பானது Monounsaturated fat வகையானதாகும். இது இருதய நோய்களைத் தடுப்பதற்கு நல்லதாகும். நீரிழிவு நோயாளருக்கு மாரடைப்பு போன்ற இருதய நோய்கள் வருவதற்கான சாத்தியம் அதிகம். எனவே அவர்களுக்கு உகந்த பழங்களில்


கிவிபுருட்





இது அடங்கும். பப்பாளிப் பழத்தில் நீரும் நார்ப்பொருளுமே (7 சதவிகிதம்) அதிகம். அத்துடன் இனிப்பு மிகக் குறைவு. எனவேதான் நீரிழிவு நோயாளருக்கு அதிகம் பயன்படுகிறது.

### பழங்களின் இனிப்புகள்

பழங்களில் பலவகை இனிப்புகள் உள்ளன. ஆனால் அதிகளவுள்ளது ப்ரக்டோஸ் (Fructose) என்ற வகை இனிப்பாகும். அத்துடன் குளுக்கோஸ், சுகுரொஸ் ஆகியனவும் ஓரளவு உண்டு. சீனியில் உள்ளது சுகுரொஸ் (Sucurose) மட்டுமே. ப்ரக்டோஸ்சை பயன்படுத்துவதற்கு இன்சுலின் தேவையில்லை. இதனால் நீரிழிவு நோயாளருக்குப் பாதகமில்லை. ப்ரக்டோஸ் அதிகமுள்ள பழங்களில் பொதுவாக குளுக்கோஸ் குறைவாக இருக்கும். இதனால் Fructose to glucose ratios விகிதாசாரம் அதிகமாக இருக்கும். வழமையாக இந்த விகிதாசாரம் 1 ஆக இருக்கும். ஆனால் அப்பிள், பியர்ஸ் ஆகியவற்றில் இது 2 ஆக இருக்கிறது. இத்தகைய பழங்கள் நல்லது. கொய்யா, மாம்பழம் போன்றவை அத்தகையவையே. அப்பிள் பழமானது அதிகளவு நார்ப்பொருளும் ப்ரக்டோஸும் இருப்பது மட்டுமின்றி அதில் பெக்டின் என்ற பொருளும் உள்ளது. இது இன்சுலின் தேவையைக் குறைப்பதன் மூலம் இரத்த குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

ப்ரக்டோஸுக்குப் பதிலாக குளுக்கோஸ் அதிகமுள்ள பழங்களும் உண்டு. திராட்சை (7.2 சதவிகிதம்) தோடம்பழம், வத்தகைப் பழம், பேரீச்சம் பழம், வாழைப்பழம் (5 சதவிகிதம்) ஆகியன இதனுள் அடங்கும். ஆயினும் இவை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டியவை அல்ல. ஆரோக்கியமான சமபல வலுவுள்ள உணவின் அங்கமாக இவற்றை உட்கொள்ளலாம்.

அன்னாசிப் பழத்தில் ப்ரக்டோஸ் குறைவு. அதேபோல குளுக்கோஸும் குறைவே. ஆனால் சுக்குரொஸ் மிக அதிகம். எனவே ஓரளவே சாப்பிடலாம். தினசரி இரு தடவைகள் 1 1/2 துண்டுகள் வீதம் சாப்பிடலாம்.

வாழைப்பழம் எமது உணவின் ஒரு முக்கியமான அங்கமாக இருக்கிறது. இனிப்புவருத்தம் உள்ள போதும் தவிர்க்க வேண்டியது அல்ல. அளவோடு அதனை உண்ணலாம். கப்பல், இதரை போன்ற பெரிய பழங்களாயின் ஒரு நேரத்திற்குப் பாதிப் பழமும், கதலியாயின் முழுப்பழமும் சாப்பிடலாம். எமது முன்னோர்கள் வாழைப்பழம் சாப்பிடும்போது உட்தோலையும் சேர்த்து உண்டார்கள். அவ்வாறு உட்கொள்ளும்போது அதிகளவு நார்ப்பொருள் சேர்வதால் நன்மை கிடைக்கிறது.


நார்ப்பொருள், கிளைசீமிக் இன்டெக்ஸ் (Glycemic index - GI) போன்ற விஞ்ஞானப் பூர்வமான விடயங்கள் தெரியாதபோதும் இவ்வாறான நல்ல உணவு முறைகளை மூதாதையர் கைக்கொண்டார்கள். எந்தப் பழத்தையும் அவ்வாறு தோல் நீக்காது சாப்பிடுவது நல்லது. அதற்காக அன்னாசி, பலாப்பழம் போன்றவற்றையும் தோலுடன் சாப்பிடலாமா எனக் கேட்பீர்களோ தெரியவில்லை.

### பழச்சாறுகள், பதப்படுத்தப்பட்ட பழங்கள்

தகவல் தொழில் நுட்பத்தை விரல் நுனியில் வைத்திருக்கும் நாம் அவ்வாறு தோலுடன் சாப்பிடத் தெரியாது இருக்கிறோம். அது மட்டுமின்றி பலர் பழங்களை உண்பதற்குப் பதிலாக பழச்சாறுகளை பெருமளவில் அருந்துகிறார்கள். வீட்டில் சாறாகப் பிழிந்தாலும்கூட நார்பொருள் பெருமளவில் அகன்றுவிடும். விற்பனைக்குக் கிடைக்கும் பழச்சாறுகளில் சீனியின் அளவும் அதிகம். எனவே நீரிழிவுக்கு நன்மை பயக்காது.

அதேபோல தகரத்தில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வரும் பழங்களில் பெருமளவு இனிப்புக் கூழ் (Syrup) சேர்ந்திருப்பதால் நல்லதல்ல. சிரப்பை நீக்கிவிட்டு உட்கொண்டாலும் அளவோடு உண்பது நல்லது.

உலரவைத்த பழங்களான பிளம்ஸ், பேரீச்சம் பழம் ஆகியவற்றில் இனிப்பின் செறிவு அதிகம். எனவே மிகக் குறைவாகவே உட்கொள்ள வேண்டும். உதாரணமாக பழத்தேவைக்காக பேரீச்சம் பழம் உண்பதாயின் ஒரு நேரத்திற்கு 3 பழங்கள் என ஒருநாளில் இரு தடவைகள் எடுக்கலாம். அத்துடன் வேறு பழங்கள் சேர்க்கக் கூடாது. அந்தளவிற்கு அதன் இனிப்பின் செறிவு அதிகம் ●




அவள் என்னை விட்டுப்
பிரிந்தாள்...
மது குடிக்க மாட்டேன்...
தாடி வைக்க மாட்டேன்...
அழுது புலம்ப மாட்டேன்...
அமைதியாக தூங்கிக்
கொண்டிருப்பேன்...
அவள் தங்கையின் மடியில்...
கொய்யாலே...
கல்லறையில் தூங்குவேன்னு
நினைச்சியா....
நீ இன்னும் வளரணும் தம்பி...



**ஆறுமுகம் சந்திரமோகன், மருதமுத்து நவனீதன்**



# மலையகத்தில் அதிகரிக்கும் சிறுவர் தற்கொலைகள்



'அந்த காலத்தில எமது அதிபர், ஆசிரியர்கள் எம்மை கண்டிப்பாக வழி நடத்தியதால்தான் இப்போது நாம் சமூகத்திலும் தொழிலிலும் உயர் அந்தஸ்தில் இருக்கின்றோம். இப்போது உள்ள பிள்ளைகள் வாய் விட்டு ஒன்றும் சொல்ல முடியல. கண்டிக்கவும் முடியல. காலம் கெட்டுப்போய்விட்டது' இது புசல்லாவை பிரதேச வாசிகளின் உள்ளக் குமுறல்.

அண்மைக்காலங்களாக பெருந்தோட்டப்புறங்களில் வசிக்கும் மாணவர்களின் தற்கொலை முயற்சிகள் அதிகரித்து வருவதை நாம் நாளாந்தப் பத்திரிகைகளில் அடிக்கடி பார்க்கின்றோம். மலையகப் பகுதிகளைச் சேர்ந்த அதுவும் பாடசாலை செல்லும் மாணவர்கள் இப்படிச் செய்வது எம்மை மூக்கின்மேல் விரல்வைக்க வைக்கின்றது.

குறிப்பாக புசல்லாவை பிரதேசத்தில் அடுத்தடுத்து பாடசாலை மாணவிகள் தற்கொலை செய்து கொள்வது வியப்புக்குரியதாக இருக்கின்றது. கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் புசல்லாவை பிரதேசத்தில் உள்ள சோகம தோட்ட சவுக்குமணல் ஜீ.எஸ் டிவிசனைச் சேர்ந்த அந்தோனி மைக்கல் தில்ருக்ஷி தனது வீட்டில் சேலை ஒன்றினால் கழுத்தை சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம், புசல்லாவையை மட்டுமல்லாது முழு மலையகத்தையும் உலுக்கியது.


இதே தோட்டத்தில் இதற்கு முன் வீ. சஹானா என்னும் பாடசாலை மாணவி க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் தான் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காததால் குளிக்கும் அறையில் தாளிட்டுக் கொண்டு தனக்குத்தானே தீயிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இந்த துயர வடு மறையாத சந்தர்ப்பத்தில்தான் இன்னொரு தற்கொலையும் நடந்துள்ளது. இங்கு இறந்த இரண்டு மாணவிகளுமே ஒரே பாடசாலை மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தில்ருக்ஷியின் குடும்ப பொருளாதார பிரச்சினை காரணமாகவும் வறுமை காரணமாகவும் இவரது தாயான சிந்தாமணி மூன்று மாதத்திற்கு முன்பாக வெளிநாடு சென்றுள்ளார். அம்மாவின் வெளிநாட்டுப் பயணம் காரணமாக தில்ருக்ஷி பாடசாலை போவதை தவிர்த்திருந்தார். இவரது தந்தை தில்ருக்ஷியை அழைத்துக் கொண்டு சம்பவம் நடந்த அன்று பாடசாலைக்கு சென்றுள்ளார். பிரதி அதிபரிடம் சென்றபோது 'நீ ஒழுங்காக படிக்கவும் மாட்டாய். ஒழுங்காக பாடசாலைக்கு வருவதும் இல்லை என்றும் கூறி தாறுமாறாக பேசியுள்ளார். மெடிக்கல் கொண்டு வருமாறு கூறி அனுப்பியுள்ளார். வீடு திரும்பிய தில்ருக்ஷி தந்தை வேலைக்கு சென்றதும் பின்னர் பாடசாலை சீருடையுடன் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டதாக கூறப்படுகின்றது.

அதேநேரம் புசல்லாவையில் உள்ள பிரபல பாடசாலையில் க.பொ.த. உயர்தரம் கற்றுவந்த 21 வயதான சாந்தி என்ற மாணவியும் அண்மையில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டமை யாவரும் அறிந்ததே. இத்தனைக்கும் இவர் கல்வியறிவுள்ள பின்புலத்தை கொண்டவர். சம்பவம் நடந்த அன்று வீட்டின் சம்மதத்துடன் காதலிக்கும் ஒருவருடன் கதைத்ததாகவும், வீட்டிலிருந்து பிரதான பாதைக்கு சென்று வந்ததாகவும், அதற்கு பின்னால் என்ன நடந்தது என்று தெரியாது என்றும் கூறுகிறார்கள் அப்பிரதேச வாசிகள்.

இது இப்படி இருக்க புசல்லாவைப் பகுதியில் உள்ள ஒரு பிரதேசத்தில் உள்ள வேறு பாடசாலையில்






சாதாரண தரத்தில் கல்வி கற்கும் சத்தியா எனும் மாணவி நஞ்சருந்தி உயிர் பிழைத்து விட்டார். இதற்கான காரணத்தைக் குறிப்பிட்ட மாணவியிடம் கேட்டபோது தனது தாய் குடித்துவிட்டு மாணவியை அடித்ததாகவும், (பெண்களும் மது அருந்துவதென்பது மலையகத்தைப் பொறுத்தள வில் மிகச் சாதாரணமான விடயம்) பாடசாலை சீருடைகளை கிழித்ததாகவும், திருமணம் முடிக்குமாறு வற்புறுத்தியதாகவும், இதனால்தான் நஞ்சு அருந்தியதாகவும் கூறியுள்ளார்.

இவை எல்லாவற்றையும் வைத்து பார்க்கும்போது இவர் களின் தற்கொலைக்கு தூண்டுகோலாக பல விடயங்கள் காணப் படுகின்றன. இவ்வாறான விடயங்களை முற்றாக தடுத்து நிறுத்து வதற்கு என்ன நடவடிக்கைகளை யார் எடுத்தது? என்று கேள்வி எழுப்பினால் விடை என்னவோ பூச்சியமாகத்தான் இருக்கும். குறிப்பாக பெற்றோர்கள் பிள்ளைகளின் மனநிலையை புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். பிள்ளைகளும் தாங்கள் முதிர்ச்சி அடையாத நிலையில் தாங்கள் எடுக்கும் முடிவு பற்றி சிந்திக்க வேண்டும். இந்த பொறுப்பு ஆசிரியர்களையும் சாரும். ஒரு பிள்ளை பாடசாலைக்கு வரவில்லையாயின் அவளது குடும்பப் பின்னணி மற்றும் அவளது அப்போதைய மனநிலை பற்றி சிறிது யோசிக்க வேண்டும். ஏனெனில் இவ்வயதில் தாக்கமடையும் பள்ளிப் பருவத்தில் மனத்தாக்கம் சற்று அதிகமாகவே காணப்படும். தாங்கள் வாழும் சூழலும் இதற்கு காரணமாக அமையலாம்.

தற்கொலை முயற்சிகள் மட்டுமன்றி மாணவர்களின் நெறி பிறழ்வான நடத்தைகளையும் துர்நடத்தைகளில் ஈடுபடுவதையும் கேள்விப்பட்டு மாணவர்களை வாய் வார்த்தையால் ஏசுவதும் இன்று பாடசாலைகளில் வழக்கமாகிவிட்டது.

இவற்றினை விடுத்து அம்மாணவர்களின் மனவெழுச்சி களை கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் பொழுது போக்குகளையும் இணைத்துக் கொள்வது மிகவும் முக்கியமானவையாகும். அப்போது கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற விடயங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் பண்பட்டவர்களாக மாறி பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வாழ்க்கையை வெற்றி காணும் திறனைப் பெறுவர்.

இதற்கு சரியான களம் பாடசாலைகளிலும் சமூகத்திலும் வழங்கப்பட வேண்டும். அண்மையில் மாணவர்களையும் சிறுவர் சிறுமியர்களையும் திசை திருப்பும் நோக்கில் புசல்லாவை நயபனை தோட்ட சுகாதாரப் பிரிவினரும் சிறுவர் கழகமும் இணைந்து சிறுவர் களியாட்ட நிகழ்வை நடாத்தின. கலை நிகழ்ச்சிகளில் சிறுவர்கள் தங்கள் உணர்ச்சி மேலீட்டை நிறையவே வெளிப் படுத்திக் காட்டினர். தாமாகவே முன்வந்து நிகழ்ச்சிகளைப் படைத்த மாணவர்களின் முயற்சிகளை வருகை தந்தோர் வெகுவாகப் பாராட்டினர். அங்கு வந்திருந்தவர்களும், இவ்வாறான செயற்பாடு கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டுமென தெரிவித்தனர். நிகழ்வு நடந்த தினம் சிறுவர்களுக்கு பாடல், கவிதை, நாடகம், நடனம், விளையாட்டு என பெரும் கொண்டாட்டமாக இருந்தது. மிகவும் சந்தோசமாக அன்றைய பொழுதினை அவர்கள் கழித்தனர்.

சிறுவர்கள், இளைய சமூகத்தினர் தவறான வழிகளில் செல்கின்றனர் என்பதைக் கூறிக்கொண்டு இருக்காமல் இவ்வா றான பல நிகழ்ச்சிகளை கல்வித்திணைக்களங்கள், சிறுவர் நலன் காக்கும் நிறுவனங்கள் சிறுவர்களின் ஆற்றல்களை மேம்படுத்து வதற்கும் உளவளங்களை ஊக்குவிப்பதற்குமான செயற்பாட்டுத் திட்டங்களில் முன்னின்று ஈடுபட வேண்டும். இது திறன்களை வளர்ப்பதோடு பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும்.





# நீங்கள் நீண்ட தூரம் நடப்பவரா? இதோ நடைப் பயிற்சியின்

## பயன்கள் சில...

1) நடைப்பயிற்சியில் 70 மடங்கு பிராணசக்தி உடலில் திசுக் களில் அதிகம் கிரகிக்கப்படுகிறது. நடக்கும்போது நிமிடத்திற்கு 27 லீட்டர் காற்று தேவைப்படுகிறது.

2) பிராணசக்தி அதிகரிப்பதால் இரத்தம் சுத்தமடைந்து சுழற்சி வேகம் அதிகரிக்கிறது.

3) வியர்வை மூலம் கொழுப்புக்கழிவுகள், உப்புகள் வெளியே ற்றப்பட்டு உடல் துர்நாற்றம் குறைகிறது.

4) நுரையீரல், அதில் உள்ள சிற்றறை திசுக்கள் நல்ல நலம் பெறு கின்றன. சுவாசம் சீர்படுவதுடன் மேம்படுகிறது.

5) இதயத்தின் செயல்பாடுகள் சிறப்படைந்து இதயத் திசுக்கள் வலிமை பெறுகின்றன.

6) பசியின்வேகம், பசித்தன்மை, தாகம், ஜீரணம் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. தன் மயமாதல் சிறப்படைந்து எலும்பு திசுக்களில் சேரும் சத்துக்கள் அதிகரிக்கின்றன.

7) எலும்புகள், தசைகளில் திசைவுகள் குறைந்து புதிய வலுவும் வனப்பும் பெறுகின்றன.

8) அதிக உடல் எடை, பருமன், சதைக் கோளங்கள் இலகுவாக, ஆபத்தில்லாமல் குறைய நடைப் பயிற்சியில் மாத்திரமே சாத்தியம் என்கின்றனர் மருத்துவ வல்லுனர்கள்.

9) தேவையில்லாத கொழுப்பைக் குறைத்து, சீர்படுத்தி இதயத் திசுக்களுக்கு ஓய்வுதர துணைபுரிகிறது.

10) நமது முதுமை திசு அழிவு குறைந்து, புதிய செல்கள் உருவாகி, இளமை மேம்படுகிறது.

11) தொப்பை, தொங்கு சதை, பிதுங்கு சதைகள், இடுப்புச் சதைகள் மெதுவாக குறைய ஆரம்பித்து உடல் கட்டழகு அடைகிறது.

12) நீரிழிவு அன்பர்களுக்கு நடைபயிற்சிதான் ஒப்பற்ற மருந்து எனலாம். எந்த அளவு சர்க்கரை நோயின் தாக்கம் உள்ளதோ அதற்கேற்ற தூரம் தினமும் நடந்திட வேண்டும்.

13) பொதுவாக அனைத்துப் பிணிகளும் நடைப்பயிற்சியால் மட்டுப்படுவதுடன் கட்டுப்படுகிறது. மருந்து மாத்திரைகளின் தேவைகளை உடனடியாகக் குறைக்கிறது.

14) நமது மெட்டாபொலிசம் அளவு சிறப்புற்று உடலில் வெப்பசக்தி (கலோரி) உற்பத்தி பயன்பாடு மிகவும் அதிசயிக்கும் அளவில் கூடுகிறது.

15) கால்களில் இரத்த ஓட்டம் அதிகரித்து கால்வலி, பாதவலி குறைந்து நரம்பு முறுக்கு, இரத்த அழுத்த தடை நீங்கி புதுசக்தியைப் பெறுகிறது.

16) தினமும் காலையில் நீர்க் குடித்து பின் சிறிது தூரம் நடந்தாலே எப்படிப்பட்ட கடின மலச்சிக்கலும் விலகிவிடும். மூலநோயும் குறைய ஆரம்பிக்கிறது.

17) சுவாச அடைப்பை சரி செய்கிறது. சைனஸ், ஒற்றைத் தலைவலி சரியாகி நுரையீரலில் காற்று சென்று வரும் அளவை பல மடங்கு பெருக்குகிறது.

18) நடக்கும்போது பசியின்மை விலகுகிறது. உணவின் ருசி மிகுந்திடும்.

19) இரத்த அழுத்தம், மாரடைப்பு அன்பர்களும் சுகம் அடைகின்றனர்.

20) மனச்சுமை, மனஅழுத்தம், உறக்கமின்மை போன்ற வற்றில் இருந்து இலகுவாக நிவாரணம் கிட்டுகிறது.

கீர்த்தி

# விந்தை உலகில்

## விழித்தெழு மனிதா....!



கனவு காணாத மனிதனே கிடையாது. ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சராசரியாக ஆறு ஆண்டுகள் கனவு காண்பதில் செலவழிக்கிறான் என்றால் நம்புவீர்களா? கனவு என்பது உண்மையா? என்ற சந்தேகம் பெரும்பாலும் இன்றுவரை காணப்படவே செய்கின்றது. அதிலும் கனவு கலர் கலராக வருகின்றனவா? அல்லது கருப்பு வெள்ளையாக வருகின்றனவா? என்றெல்லாம் பலவாறான சந்தேகங்கள் காணப்படவே செய்கின்றன. மேலும் கனவு ஏன்? எதனால்? எப்போது ஏற்படுகின்றது? கனவு காண்பதென்பது ஒரு குறைபாடா? போன்ற சந்தேகங்கள் தொடரவே செய்கின்றன.

கனவு என்பது ஒருவர் தூங்கும்பொழுது அவரது மனதில் எழும் மனப் படிமங்கள், காட்சிகள், ஓசைகள், உணர்வுகள், நிகழ்வுகளைக் குறிக்கிறது. ஒருவர் கனவு காணும்பொழுது அவரது கண்களின் அசைவுகள் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ள போதிலும் கனவு என்றால் என்ன என்பது தொடர்பாக ஒரு பூரண அறிவியல் புரிதலை இன்றுவரை அடைந்தபாடில்லை.

நாமே சற்று சிந்தனையில் ஆழ்ந்தால் யாராவது நம்மைப் பார்த்து என்ன கனவு காண்கின்றாயா? என்று கேட்பார்கள். மற்றும் ஆழ்ந்த உறக்கத்தில் விழிப்பவர்கள் கனவு கண்டதாக ஏதாவது சந்தர்ப்பத்தை முன்வைப்பார்கள். இதில் எதை உண்மையில் கனவு என்கின்றோம் என்று சந்தேகம் வரும். கனவை இரு வகைப்படுத்தலாம்.

முதலாம் வகை ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது கண்களுக்குள் ஏதோ ஒரு நிகழ்வு படமாக முன்னகர்தல். இரண்டாவது நம் எதிர்காலம் குறித்து நாம் இப்படித்தான் வாழ வேண்டும், இப்படியான செயல்களை செய்ய வேண்டும் என இலட்சியங்களை வளர்த்துக் கொள்வதோடு, அதனை அடையும் வழிமுறைகளை சிந்தித்து அதனை அடைய முயலலும் ஆகும்.

மேலும் சமய ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் வெவ்வேறான பல கருத்துக்கள் கனவு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது மூளைக்கு செல்லும் முக்கியமான உணர்வு நரம்புகளில் மின்னோட்டம் ஏற்படுவதன் மூலம் கனவுகள் வருவதாக விஞ்ஞான ஆய்வுகள் கூறினாலும் கனவுகள் ஆழ்மனதில் படிந்து கிடக்கும் எண்ணங்களின் வெளிப்பாடுகள் என்றும், இயலாமைகளின் வெளிப்பாடுகள் என்றும், நமது ஆசைகளின் பிரதிபலிப்புகள் என்றும், நமது குணாதிசயத்தைக் கண்டுபிடிக்க உதவும் காரணிகள் என்றும் ஏகப்பட்ட விவாதங்களும் ஆராய்ச்சிகளும் உலக அளவில் பல நூற்றாண்டுகளாக நடந்து கொண்டே இருக்கின்றன என ஒரு தரப்பினரும், சமய ரீதியாக எதிர்காலத்தில் நிகழவிருக்கும் சம்பவங்களை முன்கூட்டியே அறிவிக்கும் அபூர்வ சக்தி தான் கனவு என்றும், அவற்றுக்கான சான்றுகள் உள்ளன என இன்னொரு தரப்பினரும் கூறுகின்றனர்.

சிலர் ஏதோ ஒன்றை கண்டதாக உணர்ந்து திடுக்கிட்டு அசைவர். ஆனாலும் என்ன என்பதை மறந்ததாகக் கூறுவர். சிலர் ஏதோ படக்கதை போல சொல்லிக் கொண்டே போவார்கள். சிலர் தான் முதல் நாள் கண்ட கனவு மறு நாளும் தொடர்வதாக கூறுவார்கள். இவ்வாறான தன்மையை கண்டினியூவல் எக்டிவேஷன் என்று அழைக்கின்றனர். இன்னும் சிலர் தனக்கு கனவே வருவதில்லையே என புலம்பிக் கொள்வார்கள். இதற்கெல்லாம் காரணம் அவரவர் மூளையின் அதிரடி செயற்பாடே என்கின்றது இன்னொரு ஆய்வு. பாதி உறக்கத்திலுள்ள மூளை தான் கனவுகளின் அடிப்படைக் காரணம் என்று பொதுவாக ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் காணும் கனவுகள்தான் நினைவில் இருக்கின்றன எனவும், மறந்து போய்விடும் கனவுகள் மூளை நல்ல உறக்கத்தில் இருக்கும்போது பிறப்பது எனவும் கூறுகின்றார்கள்.

கண்களின் அசைவை வைத்தே நாம் எந்த நேரத்தில் எவ்வகையான கனவை காண்கின்றோம் என அறியலாம் என்பதை முதன்முதலில் கண்டறிந்த அஸெரின்ஸ்கி 1953 இல் இவ்வாராய்ச்சியை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். மேலும் பலர் இது தொடர்பான ஆய்வுகளை இன்றுவரை நிகழ்த்திக் கொண்டே இருக்கின்றார்கள். என்றாலும் மனதின் பயம், மன அழுத்தம், ஆழ் மனதில் பதிந்துபோன ஆசைகள் எம் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளோடு ஒத்துப்போகின்ற போதுதான் கனவாக வருகின்றது என்ற பொதுவான கருத்தும் காணப்படுகின்றது. அதாவது அதிகமாக நாம் எதைப்பற்றி சிந்திக்கின்றோமோ அதுவே கனவாக வருகின்றது. ஏதோ ஒரு தீவிரமான உணர்ச்சியின் வெளிப்பாடே கனவாக அமைகின்றதாம். அதனிலும் ஆண்கள் காணும் கனவுக்கும் பெண்கள் காணும் கனவுக்கும் அனேக வித்தியாசங்கள் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு கனவுகள் பல்வேறான கோணங்களில் வெவ்வேறான கருத்துக்களைக் கொண்டு வகைப் படுத்தப்படுகின்றது. நல்ல கனவுகளால் மன மகிழ்ச்சி கிடைத்தாலும் சில தீவிரமான கனவுகளால் அசம்பாவிதங்கள் நிகழ்ந்ததே ஏராளம். எனவே இந்த கனவு காணலை விளக்கி அன்றாட வாழ்வோடு ஒட்டி உறவாட உங்களுக்கான யோசனைகள் சில....

★ மனதை எப்போதும் தூய்மையாக வைத்துக் கொள்ளல்.

★ தேவையற்ற விடயங்களைப் பற்றிய சிந்தனைகளைத் தவிர்த்தல்.

★ தினமும் குறித்த நேரத்திலேயே படுக்கைக்கு செல்ல பழகிக் கொள்ளல். அதே போல குறித்த நேரத்திலேயே விழித்தெழல்.

★ மெல்லிய இசையை கேட்டல்.

★ ஆரோக்கியமான நல்ல புத்தகங்களை வாசித்தல்.

★ உடலையும், மனதையும், தூங்கும் சூழலையும் தூய்மையாக வைத்துக்கொள்ளல்.

★ படுக்கையை வசதியானதாக அமைத்துக் கொள்ளல். (தலையணை, விரிப்பு)

★ தூங்குவதற்கான சூழல் இருக்கின்றதா எனப் பார்த்துக் கொள்ளல் (அமைதியான, இருளான அமைப்பு)

★ தூங்கச் செல்வதற்கு முன் சிறிது தூரம் நடைப் பயிற்சி செய்தல்.

★ இரவு உணவை முடித்துக் கொண்டதுமே உறக்கத்தை தேடாமல் சிறிது நேரத்தின் பின் படுக்கைக்குச் செல்லல்.

★ குடிப்பழக்கத்தைத் தவிர்த்தல்.

இவ்வாறான சில பழக்கங்களை வழக்கமாக்கிக் கொண்டால் கனவு எனும் பயங்கரத்திலிருந்து தப்பித்து ஆழ்ந்த உறக்கத்தை அடையலாம்.

## அறிவியல் துணுக்குகள்

* கெட்டுப்போகாத உணவுப்பொருள் தேன்.
* நத்தை தொடர்ந்து மூன்று வருடங்கள் தூங்கலாம்.
* பட்டாம்பூச்சிகள் தங்கள் பாதங்களினால் சுவைக்கின்றன.
* கிளியும் முயலும் தங்கள் பின்னால் இருப்பதை தலை திருப்பாமல் காணமுடியும்.
* நீர் யானை மனிதனை விட மிகப்பெரியது. ஆனால் அது மனிதனை விட வேகமாக ஓடும்.
* கண் இமைகளில் மனிதனுக்கு 550 முடி இருக்கின்றது.
* அண்டார்டிகா கண்டத்தில் மட்டும் நிலங்கள் கடல் மட்டத்திற்கு கீழே எங்கும் இல்லை. எல்லா இடமும் கடல் மட்டத்திற்கு மேல் தான் உள்ளது.
* வாத்தின் குவாக் குவாக் சத்தத்தை கேட்டிருக்கின்றீர்கள் அல்லவா? அதன் ஒலி மட்டும் எதிரொலிப்பதே இல்லை.
* டைப் ரைட்டரில் முதன் முதலாக தட்டச்சப்பட்ட நாவல் "டொம் சாயர்"
* தங்க மீனை இருட்டு அறையில் வைத்திருந்தால் அது வெண்மையாக மாறிவிடுமாம்.
* பனிக்கரடிகள் ஒரே அமர்வில் 86 பென்குயின்களை விழுங்குமாம்.



■ ஷிமால் ஸையாப்

# வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றத்துக்கு வயது 20

"ஒரு மாதமா? ஒரு வருடமா? இருபது வருடங்களை இந்த முகாமுக்குள்ளேயே கடத்திவிட்டோம். இன்னும் நாம் இதே தகரக் கொட்டில்களில்தான் கிடந்து மடியவேண்டுமா...?"

48 வயதான ஹதீஜா பீபியின் குமுறல் இது. புத்தளம் ஆலங்குடா வீதியோரம் நடந்து செல்கிறேன். நடுப்பகல் 12 மணிக்கு வாசற்படியில் இரண்டு கால்களையும் நீட்டிப்போட்டு முருங்கைக்கீரை சுத்தம் செய்து கொண்டிருக்கும் ஹதீஜா பீபியிடம் பேச்சுக் கொடுக்கிறேன்.

முந்தானையை இழுத்து முக்காட்டை சரி செய்து கொண்டு அந்த 20 வருட அகதி அவலத்தை சொல்கிறார். அவரால் கட்டுப்படுத்த முயற்சித்தாலும் வந்து கொண்டிருக்கிறது கண்ணீர்!

மூன்று மணி நேரம் ஆலங்குடா வீதியில் சுற்றிய போது தான் ஒன்றிரண்டல்ல ஆயிரம் ஹதீஜாக்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்க முடிந்தது.



ஆம், கடந்த ஒக்டோபர் 30 உடன் வடக்கு முஸ்லிம்கள் உடுத்த உடையுடன் விரட்டியடிக்கப்பட்டு 20 வருடங்கள் கடந்துவிட்டன. இலங்கை வரலாற்றில் இப்படியொரு நீண்ட நெடிய அகதி வாழ்க்கையில் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கும் அந்த முஸ்லிம் மக்களின் துயரக்கதைகள் ஒன்றிரண்டல்ல.

உலக வரலாற்றில் இடம்பெற்ற பெரும் துன்பியல் நிகழ்வுகளில் வடமாகாண முஸ்லிம்களின் வெளியேற்றம் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. இரண்டு தசாப்தங்களாய் 'அகதி' என்ற முத்திரையை நெஞ்சில் ஒட்டிக்கொண்டு அவர்கள் அனுபவித்துவரும் துயரங்களுக்கு அவ்வப்போது வழங்கப்பட்ட உலர் உணவு நிவாரணங்களைத் தவிர வேறெந்த ஆதரவும் கிடைக்கவில்லை.

இவர்கள் விடயத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடந்து வந்திருக்கின்றனர். வடக்கு முஸ்லிம்கள் நாடு பூராகவும் சிதறி அகதி வாழ்க்கை வாழ்ந்து வந்தாலும் புத்தளம் மக்களின் பரோபகாரம்தான் வடக்கு முஸ்லிம்களுக்குக் கிடைத்த பெரும் ஆதரவு.

இஸ்லாமிய வரலாற்றில் முகம்மது நபியவர்களுடைய காலத்தில் மக்காவில் எதிரிகளின் தொல்லை தாங்க முடியாமல் மதீனாவுக்கு அகதிகளாக சென்ற போது மதீனாவாசிகள் தமது சொத்து, செல்வங்கள் அனைத்திலும் சரிபாதியை மக்காவாசிகளுக்கு வழங்கி, அடைக்கலம் கொடுத்திருக்கிறார்கள். இந்த 'ஹிஜ்ரத் வரலாற்றை மீண்டும் ஒரு தடவை ஞாபகப் படுத்துவது போலமைந்த புத்தளம் முஸ்லிம்களின் உதவி ஒத்தாசைகளைத் தவிர வடக்கு முஸ்லிம்களுக்கான சொல்லும்படியான ஆதரவை இந்த இரண்டு தசாப்தங்களில் காணமுடியாது.

ஒவ்வொரு வருட ஒக்டோபர் மாதத்தையும் வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்ற ஞாபகமாக

அனுஷ்டித்து பின்னர் மறந்துவிடுவதுதான் இந்த இரண்டு தசாப்த வரலாற்றின் எச்ச சொச்சம். இது தவிர அம்மக்களின் முறையான மீள்குடியேற்றம் குறித்தோ நிலையான வாழ்வாதாரம் குறித்தோ குறிப்பிட்டுச் சொல்லும்படியான எந்த நடவடிக்கையும் இதுவரை நடைபெறவில்லை. ஓரிரு அசைவுகளைத் தவிர.

யுத்தம் முடிவுற்று நாட்டில் சமாதானம் நிலவுவதாகச் சொல்லிக் கொள்ளும் நிகழ்காலத்தில் கூட வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் குறித்த நடைமுறைகளும் முன்னெடுப்புக்களும் இன்னும் கிடப்பில்தான் போடப்பட்டுள்ளன. 1990 இல் 80 ஆயிரம் அங்கத்தவர்களுடன் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இந்த இரண்டு தசாப்தங்களிலும் இரு மடங்கு எண்ணிக்கையாக அதிகரித்துள்ளனர்.

எனவே வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் எடுத்தோம் செய்தோம் என்ற அவசர நிகழ்ச்சி நிரலுக்குள் சேர்க்கப்படாமல் பாரிய திட்டமிடலுடன் காத்திரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

★ அவர்களுக்கான நஷ்டஈடு முறைப்படி வழங்கப்பட வேண்டும்.

★ காணிகள் ஒழுங்காக எல்லையிடப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

★ வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படுவதுடன் பள்ளிவாசல்கள், பாடசாலைகள் மற்றும் பொது வசதிகள் சீராக செய்து கொடுக்கப்பட வேண்டும்.

★ தொழில் ஏற்பாடுகள், அரச வேலைவாய்ப்புக்கள் என்பவற்றுக்கான உத்தரவாதமும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

★ மீள்குடியேற்றப் பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் யாவும் சிறப்பாக வழங்கப்படல் வேண்டும்.

மேற்குறித்த ஒழுங்கமைப்புக்கள் செய்யப்படாமல் வெறுமனே மீள் குடியேற்றம் என்ற பூச்சாண்டி அரசியல், வடக்கு முஸ்லிம்களை சொந்த மண்ணில் அகதி முத்திரையோடு வாழவைக்குமே தவிர, அவர்களது விடிவிற்கு வழிவகுக்காது. நாட்டில் யுத்தம் தலைவிரித்து ஆடிய காலத்தில் அவற்றைக் காரணம் காட்டி வடக்கு முஸ்லிம்களும் ஓரங்கட்டப்பட்டிருந்தனர். ஆனால் இன்றைய சமாதான சூழலில் வெளியேற்றத்தின் இருபதாவது வருடமாவது அம்மக்களின் துன்பியலுக்கான சாவுமணி அடிக்கப்படும் வருடமாக இருக்கவேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்புமாகும்●



## உண்மையான அன்பு

அதிகாலை குளிரில் நடுங்கிக்கொண்டு 80 வயது மதிக்கத்தக்க ஒரு முதியவர் என்னை பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு வந்தார். தன் பெருவிரலில் உள்ள காயத்திற்காக போடப்பட்டிருந்த கட்டை அவிழ்த்து டிரெஸ்ஸிங் செய்வதற்காக வந்ததாக தெரிவித்தார். தனக்கு ஓர் முக்கிய அப்பாயின்ட்மென்ட் 7.30 மணிக்கு உள்ளதால் விரைவில் சிகிச்சையளிக்கும் படி வேண்டினார். அவரின் அவசரத்தைப் புரிந்துகொண்ட நான் அதிகாலை நேரத்தில் வேறு நோயாளி இல்லாததால் அவரை இருக்கையில் அமரச் செய்து அவரின் காயத்தைப் பார்வையிட்டேன். அவரின் கட்டை அகற்றி புதிய கட்டைப் போட்டு கொண்டே, இவ்வதிகாலை நேரத்தில் எந்த வி.ஐ.பியை பார்க்கப் போகின்றார் என்று தெரிந்துகொள்வதற்காக "இக்கட்டு போட சிறிது தாமதமானால் பரவாயில்லையா...?" என்று கேட்டேன்.

"நேரம் தவறிப் போக விரும்பவில்லை. சிகிச்சைக்கு தாமதமாகுமென்றால் மாலை வந்து கட்டு போட்டுக் கொள்கின்றேன்" என்றார்.

ஆச்சரியம் அதிகரித்தவனாய், "இவ்வளவு அதிகாலையில் செல்கின்றீர்களே... ஒருவேளை வேறு ஏதேனும் முக்கிய சிகிச்சைக்காக வேறு மருத்துவரைப் பார்க்க செல்கின்றீர்களா?" என்று கேட்ட போது. இல்லை என்று மறுத்துவிட்டு மருத்துவமனையில் உள்ள தன் மனைவியைப் பார்த்து அவளுடன் அதிகாலை உணவை சேர்ந்து உண்ணவேண்டும் என்றார். தன் மனைவி தினந்தோறும் சாப்பிடும் நேரத்திலேயே போய்விட வேண்டும் என்பதாலேயே அவசரப்படுவதாகவும் சொன்னார்.

முதிய வயதிலும் அவரின் மனைவி மேல் அவருக்கு உள்ள பாசத்தை வியந்தவனாக அவரின் மனைவியின் உடல் நிலை குறித்து விசாரித்தேன். அவரின் மனைவி சில காலமாகவே அல்ஜீமீர் (கடந்த காலத்தை மறத்தல் இந்நோயின் அறிகுறியாகும்) நோயால் அவதிப்படுவதால் மருத்துவமனையில் சில காலமாகவே உள்ளதாக தெரிவித்தார்.

ஒருவேளை தாமதமாக அவரின் மனைவியை சந்திக்க சென்றால் அவரின் மனைவி அதிருப்தி அடைவார்களோ என்று கேட்டபோது அல்ஜீமீர் நோயின் காரணத்தால் தன் மனைவிக்கு தன்னை யார் என்றே தெரியாது என்றும் கடந்த ஐந்து வருடத்தில் தன்னை நோக்கி எதுவும் கேட்டதில்லை என்றும் தெரிவித்தார்.

வியப்பின் உச்சிக்கே சென்ற நான் "உங்களை யாரென்றே தெரியாத மனைவியைப் பார்க்க நீங்கள் தினந்தோறும் சரியான நேரத்துக்கு செல்கின்றீர்களா?" என்று கேட்டபோது அவர் என் முதுகைத் தட்டிச் சொன்னார். "அவளுக்கு என்னை யாரென்று தெரியாவிட்டாலும் எனக்கு அவளை யாரென்று தெரியும்"

கண்களில் வழிந்த நீரை துடைத்தவனாக, இத்தகைய உண்மையான அன்புக்காகத்தானே உலகமே ஏங்கிக்கொண்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். உண்மை அன்பு சட்ட ரீதியான ஒன்றோ, கவர்ச்சிகரமான ஒன்றோ அல்ல. மாறாக தனக்கு கிடைப்பதை அதன் நிறை குறைகளோடு அப்படியே மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வது. உலகின் மிக மகிழ்ச்சியான மனிதர்கள், உலகின் மதிப்பு வாய்ந்த பொருட்களை கொண்டவர்கள் அல்ல. மாறாக தங்களுக்கு கிடைத்த பொருட்களை மதிப்பு மிக்கதாக வடிவமைத்துக் கொண்டவர்கள் என்பது தான் உண்மை●

—[illegible]—

# MP3 பாடலை ஒன்லைன்-இல் வெட்டி ரிங்டோன் உருவாக்கலாம்.

MP3 பாடல்களை ஒன்லைன்-இல் எந்த சொப்ட் வெயார் துணையும் இல்லாமல் வெட்டி நாம் விரும்பியபடி ரிங்டோன் உருவாக்கலாம். http://mp3cut.net இந்த இணையதளத்திற்கு சென்று முதலில் நாம் எடிட் செய்ய வேண்டிய பாடலை நம் கம்பியூட்டரிலிருந்து தரவேற்றம் (UPLOAD) செய்ய முதல் ஸ்டெப் படம் 1-இல் காட்டியபடி Upload mp3 என்ற பட்டனை அழுத்தி பாடலை அப்லோட் செய்ய வேண்டும்.




இப்போது நாம் அப்லோட் செய்த பாடல் படம் 2-இல் காட்டியபடி வந்து விடும். இப்போது ஸ்டெப் 2. நமக்கு தேவையான பகுதியை ஸ்லைடர் கண்ட்ரோல் பட்டன் இடது பக்கத்தில் உள்ளதில் இருந்து தொடங்கி வலது பக்கம் உள்ள ஸ்லைடர் கண்ட்ரோல் மூலம் எங்கு முடிய வேண்டும் என்பதையும் படம் 3-இல் காட்டியபடி தேர்வு செய்துகொள்ளவும்.






எந்த பகுதி வேண்டுமோ அதைத் தெரிவு செய்த பின் பிளே செய்தும் சரி பார்த்துக்கொள்ளலாம். சரியான பகுதியைத் தேர்ந்தெடுத்து முடித்த பின் ஸ்டெப் 3. படம் 4-இல் காட்டியபடி ஸ்பிளிட் அண்ட் டவுன்லோட் (Split and Download) என்ற பட்டனை அழுத்தி நம் கம்பியூட்டரில் தரவிரக்கிக்கொள்ளவும். இந்த முறையை பின்பற்றி எந்த ஒரு சொப்ட்வெயார் துணையும் இல்லாமல் நாமாக எளிதாக ஒரு ரிங் டோன் அல்லது பாடலின் சில பகுதியை மட்டும் எடிட் செய்து கொள்ளலாம்.

# கணனியில் வந்திருக்கும் புது விளையாட்டு என்ன என்பதை வீடியோவுடன் அறியலாம்.




விளையாட்டு குழந்தைகளை மட்டுமல்ல அனைத்து தரப்பு மக்களையும் தற்போது ஈர்த்து வருகிறது. முப்பரிமாணம்(3D)-யில் உருவாக்கப்படும் விளையாட்டுக்கள் பெரும்பாலும் எல்லாத் தரப்பு மக்களையும் கவர்கிறது. தினமும் பல புதிய விளையாட்டுக்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் புதிய விளையாட்டு பற்றிய அனைத்து தகவல்களையும் கொண்ட ஒரு தளம் உள்ளது.

இணையதள முகவரி : http://gotgame.com

இந்தத் தளத்திற்கு சென்று நாம் புதிதாக வந்திருக்கும் விளையாட்டைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம். புதிய விளையாட்டின் டிரைலர் மட்டுமல்ல அந்த விளையாட்டின் சிறப்பு வீடியோவையும் பார்க்கலாம். இது மட்டுமின்றி எந்த விளையாட்டு நிறுவனம் இப்போது போட்டி அறிவித்திருக்கிறது என்று தெரிந்து, நேரடியாக போட்டியில் ஒன்லைன் மூலம் பங்கு பெறலாம். மைக்கல் ஜக்சன் விளையாட்டு முதல் ரோபோ விளையாட்டு வரை அத்தனை புதிய விளையாட்டுத் தகவல்களும் இந்தத் தளத்தில் இடம் பெற்றுள்ளது. இந்தத் தளத்திற்கு சென்று புதிதாக ஒரு பயனாளர் கணக்கு உருவாக்கி விளையாட்டு பற்றிய பல அறிய தகவல்களை தெரிந்து கொள்ளலாம்.

**சிந்தனை**

**உதவி கேட்கப்படாமல் மற்றவர்களின் விஷயங்களில் தலையிடாதீர்கள். உங்கள் வேலையில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.**




# கணனியை பயன்படுத்தும் குழந்தைகளை கண்காணிக்க

நமது கணனியை, குழந்தைகள் அல்லது பிறரோ பயன்படுத்தும்போது அவர்கள் என்னென்ன தளங்களுக்கு செல்கின்றனர் அவர்களின் username , password உள்ளிட்ட அனைத்தையும் கண்காணிக்கலாம்.

கணனியில் உள்ள keyboardஇல் அவர்கள் செய்யும் அனைத்தையும் இந்த software பதிவுசெய்து கொள்ளும் . இதன்மூலம் அவர்கள் செல்லும் விரும்பத்தகாத தளங்களை கண்டறிந்து அவற்றைத் தடை செய்யலாம்,

இந்த keylogger தரவிறக்கம்செய்திருப்பதை Desktop, Add/Remove Programs, Control pane போன்றவற்றிலும் கண்டறியமுடியாது என்பது இதன் சிறப்பாகும்.

அத்தோடு ஒன்றிற்கு மேற்பட்ட user களையும் கண்காணிக்கலாம்.

**செயல்படும் விதம்:**

கணனியில் நிறுவி start & stop time கொடுத்துவிடுங்கள் , கணனியில் உள்ள keyboard செயற்பாடுகளை கண்காணித்து பதிவுசெய்து கொள்ளும். இதில் நாம் mail Id கொடுத்தால் அந்த முகவரிக்கு யாரும் படிக்கமுடியாத வகையில் அனுப்பிவிடும் நாம் அதனைப் பார்த்து முபவிபரங் கள் மற்றும் அவர்களுடைய நடவடிக்கைகளை கண்டறியமுடியும் ..


இதனைத்தவறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாமல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவும்.

தற்போது username , password கண்டறிய hackkers பயன்படுத்தும் எளியவழி இதுதான் . தற்போது remote installation முறையில் இதனை install செய்துவிட்டால் உங்கள் அனைத்து விபரங்களும் அவர்களுக்கு சென்றுவிடும் . சாட்டிங் போது hackers கவனத்தைத் திசைதிருப்பி தரவிறக்கம் செய்துவிடுவார்கள் இதனை அவ்வளவு எளிதில் கண்டறிய இயலாது என்பதால் உங்கள் கணனியில் பிறர் இதனை நிறுவி கண்காணிக்கும் வாய்ப்பு உள்ளது . இது இலவசமாக பலதளங்களில் கிடைப்பது கூடுதல் தகவல் .

எனவே உங்கள் கணனியில் keylogger software நிறுவப்பட்டுள்ளதா ? என்பதை தெரிந்துகொள்வது அவசியம்.

# ஒன்லைன் மூலம் எளிமையாக பிஸினஸ் கார்ட் [Business Card] உருவாக்கலாம்.

முகவரி அட்டை என்று சொல்லக்கூடிய பிஸினஸ் கார்ட் ஐ யாருடைய துணையும் இல்லாமல் எளிமையான அளவில் உருவாக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கும் குறைவான





நேரத்தில் Professional பிஸின்ஸ் கார்ட் உருவாக்க விரும்புபவர்களுக்கும் உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது.

இணையத்தள முகவரி : http://www.freepdfcards.com

எளிமையான பிஸினஸ் கார்ட் ஐ சில நிமிடங்களில் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பது மட்டும் தான் இந்த தளத்தின் இலட்சியம். இந்த தளத்திற்கு சென்று நாம் படம்த்தில் இருப்பது போல் நம் பெயர், நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி அத்துடன் நம் நிறுவனத்தில் லோகோ அல்லது நம் புகைப்படம். இதை upload செய்து சில நிமிடங்களிலேயே உருவாக்கலாம். Preview என்ற பொத்தானை சொடுக்கி வலது பக்கத்தில் கார்ட் எப்படி வரும் என்பதை பார்த்துக் கொள்ளலாம். பிஸினஸ் கார்ட் ஐ உருவாக்கி முடித்ததும் Download என்ற பொத்தானை சொடுக்கி pdf கோப்பாக நம் கணனியில் சேமித்துக்கொள்ளலாம்.

நீங்க அனுப்புற எஸ்.எம்.எஸ்
எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு...
அதனால் உங்களுக்கு ஒரு சின்ன
கிஃப்ட்...
இந்தாங்க..ப்ளேங் செக்...
உங்களுக்கு தேவைப்படுற
அமவுண்டை
ஃபில் பண்ணிக்கொள்ளுங்க...
பேங்க் முகவரி...
துபாய் பேங்க்.
6, விவேகானந்தர் தெரு,
துபாய் குறுக்கு தெரு,
துபாய் மெயின் ரோடு,
துபாய் பஸ் ஸ்டாண்ட்...
துபாய் -;))





சிங்களத்தின் புதிய வியூகம்

# தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை பேச்சுக்களுக்கு முன்நிபந்தனை?

■ சன் தவராஜா

'இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தமிழ்க் கட்சிகள் மத்தியிலே கருத்தொருமைப்பாடு ஏற்பட்டால் மாத்திரமே தீர்வொன்று சாத்தியமாகும்' என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அண்மையில் தன்னைச் சந்தித்த பொதுநலவாய நாடாளுமன்ற சம்மேளன மற்றும் பிரித்தானிய நாடாளுமன்றப் பிரதிநிதிகளிடம் தெரிவித்திருந்தார்.


தமிழ் மக்களின் விவகாரத்துக்கு அரசியல் தீர்வு காண்பதைத் தட்டிக் கழித்துவிட சிங்களத் தலைமைகள் காலங்காலமாக இது போன்ற பல கதைகளைக் கூறி வந்துள்ளன. 'மூவினங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு', 'ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு', 'கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு' எனப் பலவிதமான சாக்குப் போக்குகள் காலத்துக்குக் காலம் கூறப்பட்டு வந்துள்ளன.

தமிழர்களுக்கு என்ன தேவை என அறிந்துகொண்டு அதற்குப் பரிகாரம் காணுதல் என்பதற்கு அப்பால், தமிழர்களுக்கு தங்களால் ஆகக் குறைந்த எதனைத் தர முடியும் என வரையறுப்பதற்கான உபாயமே இது என்பது அரசியல் கத்துக்குட்டிக்குக் கூட நன்கு புரியும்.

ஏனெனில் தமக்கு என்ன தேவை என்பதை 1985 இல் திம்புவில் ஆரம்பித்த பேச்சுவார்த்தை முதல் 2006 வரை நடைபெற்ற பல்வேறு பேச்சுக்களில் தமிழர்கள் தெளிவாக விளக்கிக் கூறி விட்டார்கள். அது தவிர 1977 முதல் 2004 வரை நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி இருந்தார்கள்.

ஒரு வரியில் கூறுவதானால் சிங்கள மக்கள் எத்தகைய உரிமைகளை அனுபவிக்கின்றார்களோ அத்தகைய உரிமைகளைப் பெற்றவர்களாக தமிழர்களும் வாழ வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக இருந்தது. சேர்ந்து வாழ்வதன் மூலம் இந்த உரிமைகளை அனுபவிக்க முடியாதவிடத்து பிரிந்து சென்றாவது அவற்றை அனுபவிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் அவா. அதன் அடிப்படையிலேயே தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் நடைபெற்றது. துரதிஷ்டவசமாக இந்த ஆயுதப் போராட்டம் தமிழ் மக்கள் எந்தவொரு உரிமையையும் பெற்றுக் கொள்ள முன்னரேயே முறியடிக்கப்பட்டுவிட்டது.

தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளைத் தட்டிக் கழித்துவிட புதுப்புது உபாயங்களைத் தேடிவரும் சிங்களப் பேரினவாதம் தற்போது புதிதாகக் கையில் எடுத்துள்ள உபாயமே 'தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை' என்பது. 'யுத்தம் முடிந்த பின்னர் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றைப் பரிசாக வழங்குவது' என்ற உறுதிமொழியின் அடிப்படையிலேயே யுத்தத்துக்கு எதிரான ஆதரவை மகிந்த அரசாங்கத்தினால் பெற முடிந்திருந்தது.



இந்நிலையில் யுத்தத்துக்கு ஆரதவு வழங்கிய நாடுகளைச் சமாளிப்பதற்கு மகிந்தவுக்கு ஒரு போலிக் காரணம் தேவைப்படுகின்றது. தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை நடைமுறைச் சாத்தியமற்ற ஒரு விடயம் என்பதை நன்கு தெரிந்து வைத்துள்ள நிலையிலேயே மகிந்த ராஜபக்ஸ இக் கருத்தை முன்வைத்துள்ளார்.

இதில் பல அம்சங்கள் அடங்கியுள்ளன. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளைத்தான் தமிழ்க் கட்சிகள் என அவர் குறிப்பிடுகின்றாரா எனப் பார்த்தால் இன்றைய நிலையில் நாடாளுமன்றத்தில் தனித்துப் போட்டியிட்டு ஆசனங்களைப் பெற்ற தமிழ்க் கட்சி ஒன்று மாத்திரமே உள்ளது. அது வீட்டுச் சின்னத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே. எனவே அதனுடன் மாத்திரமே பேசவேண்டும்.

வடக்கு கிழக்கைச் சேர்ந்த கட்சிகளுள் நாடாளுமன்றத்தைப் பிரதநிதித்துவம் செய்யும் ஏனைய தமிழ்க் கட்சிகள் எனும் போது ஈ.பீ.டி.பி. மாத்திரமே உள்ளது. ஆனால் அக் கட்சி நேரடியாகத் தனது வீணைச் சின்னத்தில் போட்டியிடவில்லை. மாறாக மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டே 3 இடங்களைப் பெற்றது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகளையும் மலையகத் தமிழ்க் கட்சிகளையும் தமிழ்க் கட்சிகள் என்ற வரையறைக்குள் மகிந்த அடக்குவாராயின் அவை ஒன்றில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கீழேயோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சியின் கீழேயோதான் போட்டியிட்டன என்பதை நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.


உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் எனப் பார்க்கும் போது சித்தார்த்தன் தலைமையிலான புளொட், பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், பத்மநாபா தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் ஈழவர் ஜனநாயக முன்னணி என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தற்போது தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்ற பெயரில் அணி சேர்ந்துள்ள ஈ.பி.டி.பி. தலைமையிலான கட்சிகள் எந்தவிதமான பொதுக் கருத்தின் அடிப்படையிலோ அன்றி வேலைத்திட்டத்தின் அடிப்படையிலோ ஒன்று சேர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. புரியாத புதிராக உள்ள இந்தக் கட்சிகளின் கூட்டணியில் தமிழ் மக்களின் ஜீவாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றை ஏற்றுக் கொண்ட கட்சிகளும் உள்ளன. மாகாண மட்டத்தில் கூட அதிகாரப் பகிர்வு தேவையற்றது என அடம்பிடிக்கும் கட்சிகளும் உள்ளன. 'மகிந்த ராஜபக்ஸ எதனைச் சொன்னாலும் அதுவே தேவவாக்கு' என நினைத்துச் செயற்படும் கட்சிகளும் உள்ளன.

இந்நிலையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் பேசி எத்தகைய உடன்பாட்டுக்கு வர முடியும்?

எனினும் மகிந்த ராஜபக்ஸவின் அரசியல் காய் நகர்த்தல்களுக்காக அமைக்கப்பட்டுள்ள தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் பேசுவதற்குத் தயார் என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பானது அரங்கத்தில் உள்ள கட்சிகளுடன் பேசி ஒரு உடன்பாட்டுக்கு வரும் நோக்கிலானது அல்ல. மாறாக இத்தகைய ஒரு சந்திப்பைத் தவிர்ப்பதன் ஊடாக தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை இழுத்தடிப்பதற்கு சிங்களப் பேரினவாதத்துக்கு மற்றுமொரு வாய்ப்பை வழங்குவதைத் தடுக்கும் நோக்கிலானது என்பதே உண்மை. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் நீண்டகால அரசியல் அனுபவத்தையும் ஆழ்ந்த இராஜதந்திரத்தையும் இந்த அறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது●



# வயதுக்கு வந்த பெண்களுக்கு

முன்பெல்லாம் பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்துவிட்டால் உடனே உளுந்தங்களியைத்தான் கிண்டி சலிக்க சலிக்க சாப்பிடச் சொல்லுவார்கள். மிகவும் சுவையாக இருக்கும். ஏனென்றால் இது இடுப்பு எலும்புகளுக்கு பலம் கொடுக்கும். அவர்களது கர்ப்பப்பை பலம் பெறுவதற்காக உளுந்தங்களி கொடுக்கும் வழக்கம் இருந்தது. இந்த களியில் கருப்பட்டி, உளுந்து, நல்லெண்ணெய் சேர்வதால் இரும்புச்சத்து, புரதச்சத்து, மாச்சத்து ஆகியவை நிறையவே காணப்படுகிறது. இந்த உளுந்தங்களியை செய்வது எப்படி தெரியுமா?

அரை கப் உளுந்தை வறுத்து அதோடு 1/2 கப் அரிசியை மாவாக்கி சேர்த்து, குழைத்து வைத்துக் கொள்ளவும். 2 கப் உடைத்த கருப்பட்டி, சீனியோடு தண்ணீர் 2 கப் விட்டு சூடாக்கி சீனி கரைந்ததும் அதை வடிகட்டி தனியாக எடுத்துக் கொள்ளவும்.

வடிகட்டி எடுத்த சீனிக்கரைசலுடன் 2 மேசைக்கரண்டி நல்லெண்ணெய் சேர்த்து சூடாக்கவும். அது நன்கு கொதிக்கும்போது மாவை அதனுடன் சேர்த்து நன்கு கிளறி, குறைந்த சூட்டில் சுமார் 10 நிமிடங்கள் வரை வேக விடவும்.

பின்னர் அடுப்பில் இருந்து இறக்கி 2 மேசைக்கரண்டி நெய்விட்டு கலந்து சாப்பிடலாம். மிகவும் சுவைமிக்க உணவு என்பது மட்டுமல்ல. பெண்களுக்கு திடமான உணவும்கூட.

# எதிர்காலத்தில் நான் ஒரு வைத்தியராக வரவேண்டும்

## ஜெயானந்தராஜா கிருஷிகன்

"ஒரு காற்சட்டையோடதான் எண்ட பிள்ளைய கொண்டு வந்தன். நாங்க உயிரோட வருவம் எண்டு எதிர்பார்க்கல" அண்மையில் வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் பெற்ற ஜெயானந்தராஜா கிருஷிகனின் தாய் மனமுருக கூறிய வார்த்தைகள் இவை.

பொதுவாக புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை பார்த்தோமானால் முதல் மூன்று இடங்களைப் பெறுவதில் யாழ் மாவட்டமே முன்னிலை வகிக்கும். ஆனால் வழமைக்கு மாறாக இம்முறை முதல் மூன்று இடங்களிலும் யாழ் மாவட்டத்தைக் காணக்கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் கடந்த கால யுத்த சூழ்நிலையே என்பது அங்குள்ள மாணவர்கள் மற்றும் பெற்றோரிடம் நாம் பேசியதில் தெளிவாகியது.



இம்முறை வடக்கில் இரு மாணவர்கள் 187 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றிருந்தனர். அதில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷிகனும் ஒருவர். அண்மையில் நாங்கள் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது அவரை சந்திக்கச் சென்றோம். வீட்டைத் தேடிப் பிடிக்க வெகு சிரமப்பட்டோம். நாங்கள் வருவதை கேள்விப்பட்ட அவரது முழுக்குடும்பமும் எம்மை வரவேற்க வீதியிலேயே காத்திருந்தனர்.

அம்மா, அப்பா, அக்கா என அழகிய சிறு குடும்பம். கிருஷிகனின் முகத்தில் எந்த நேரமும் ஒரு புன்னகை தாண்டவமாடும். சுட்டிப்பையன். கேள்வி கேட்டு முடியுமுன்னரே பதில் வந்து விழும் அளவுக்கு துடிப்புள்ள பையன். தரம் 1 முதல் மூன்று வரை முல்லைத்தீவு சிவசுப்ரமணிய வித்தியாலயத்தில் படித்த இவர் இடம்பெயர்ந்து 4 ஆம் தரத்தை வவுனியா அருணாச்சல முகாமில் படித்திருக்கின்றார். 8 மாதங்கள் படிக்க வழியில்லாமல் இருந்து பிறகு யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 ஐ கற்றிருக்கின்றார். இந்த சூழ்நிலைகளைக் கடந்து கற்று மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றமை பற்றி அவரிடம் கேட்டபோது...

"சந்தோஷமா இருந்தது. எனக்கு கிப்ட், காசு எல்லாம் தந்தாங்க. எண்ட அம்மாதான் என்னை பாடசாலைக்கெல்லாம் கூட்டிக்கொண்டு போவார். வீட்டிலயும் படிப்பிப்பார். அப்பாவும் வீட்ட வரும்போது எனக்கு படிப்பிக்கிறவர். என் வகுப்பாசிரியை பெயர் வளர்மதி. அவ வீட்டுக்கெல்லாம் கூட்டிப்போய் படிப்பிக்கிறவ. என்ர அக்காவும் சிலநேரம் படிப்பிக்கிறவ. இரவிலதான் படிப்பம். காலையில சிலநேரம் எழும்பிப் படிப்பம். என்னோட 63 பேர் இந்த எக்ஸாம் எழுதினாங்க. சிலர் பாஸ் பண்ணல" என்று கடகடவென பதில் சொன்ன கிருஷிகன் வீட்டில் ரொம்பவும் குழப்படியாம். இதை அவரது வாயாலேயே சொல்லிவிட்டார்.

அத்தோடு படிக்கும் பாடங்களில் சுற்றாடல் கல்வியை அதிகம் விரும்பிப் படிப்பாராம். காரணத்தைக் கேட்டபோது வருங்காலத்தில் ஒரு வைத்தியராக வந்து நம்நாட்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதுதான் அவரது குறிக்கோளாம். தான் பட்ட துன்பங்களும் தாங்கள் கண்முன் அனுபவித்த வேதனைகளும்தான் அவர்களை எதிர்காலத்தில் எவ்வகையான தொழிற்றுறையை தெரிவு செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றது என்பது அவரது பேச்சில் தெரிந்தது. காரணம் 3 மாதங்களாக போரின் இழப்புக்களுக்குள் சிக்குண்டு பல கொடுமைகளை அனுபவித்திருக்கின்றார். அந்த சந்தர்ப்பத்தில் எல்லோருக்கும் சிகிச்சைகளை மேற்கொள்வதில் கடும் சிரமம் ஏற்பட்டிருக்கின்றது. இதுவே இந்தப் பிஞ்சின் மனதில் அந்த உறுதியான இலட்சியத்தை விதைத்திருக்கிறது.

இவரது தாயாரிடம் உரையாடினோம்.

"இது எண்ட பிள்ளைக்கு கிடைச்ச அரிய சந்தர்ப்பம் எண்டுதான் சொல்லோணும். எண்ட பிள்ளைய பொறுத்தமட்டில் இன்னும் ஒரு 3 புள்ளிகள் எடுத்திருக்கலாம் எண்டு யோசிக்கிறார். புதுக்குடியிருப்பில தான் இருந்தனாங்க. அங்க இருந்து இடம்பெயர்ந்து வள்ளிபுரம், தேவிபுரம், இரணைப்பாலை, மாத்தளன் எண்டு 7 இடங்கள் இடம்பெயர்ந்து இப்ப இங்க இருக்கம். 8 மாசம் படிப்பில்லாமல் இருந்தான். நல்ல சாப்பாடும் இல்ல கல்வியும் இல்ல. இருந்திருந்தால் இன்னும் முன்னேறி இருப்பான். 24 மணித்தியாலமும் பங்கருக்குள்ளதான் இருந்தம். காலையில கஞ்சி, பகலில சோறும் பருப்பும், இரவில குரக்கன் ரொட்டி. தேங்காய், உப்பெல்லாம் கிடையாது. இப்படி ஒரு கஷ்டத்திலதான் நாங்க இருந்தம்" என்று அந்தத் தாய் யுத்த காலத்தில் தாங்கள் அனுபவித்த கஷ்டங்களை கண்கலங்க எம்மிடம் கூறினார்.

அவரது தந்தையும் எங்களுடன் இணைந்து கொண்டார்.



"நாங்க இடம்பெயர்ந்து இரணைப்பாலையில இருக்கும்போது கடும் தாக்குதல் நடந்தது. எங்களுக்கு பக்கத்தில இருந்த ஒரு குடும்பம் அப்படியே செல் விழுந்து செத்துட்டுது. என்னைத் தவிர இவையள் மூண்டு பேருக்கும் பயத்தால காய்ச்சல் வந்துட்டு. என்ர பிள்ளைகளுக்கு பிணங்கள், அதன் மணங்கள் எல்லாம் தெரியாது. அதுகள படுக்க வைத்து படுக்க வைத்துதான் கூட்டிக்கொண்டு வந்தன். சாமான் எல்லாம் கடும் விலை. செத்தல் மிளகாய் 1000 ரூபாய், சீனி 5000 ரூபாய், ஒரு பிடி கீரைக் கட்டு 500 ரூபாய். ஆக என்கிட்ட இருந்தது 3000 ரூபாதான்" என கிருஷிகனின் தந்தை கூறினார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் உங்கள் மகன் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார். உங்கள் மனநிலை எப்படி இருக்கின்றது என்று கேட்டோம்.

"நான் எதிர்பார்த்தன் தான். இன்னும் கொஞ்சம் ஊன்றி கவனித்திருந்தால் 2.3 கேள்விகள் செய்திருக்கலாம். இருந்தாலும் பரவாயில்லை. எங்களுக்கு சந்தோசம்தான்"

இவ்வாறு யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட மக்கள், அவர்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது சலுகைகள், உதவிகள் வழங்கப்படுகின்றதா என கேட்டேன்.

"அரசாங்கத்தால் வழங்கப்படும் எந்தவித சலுகையும் இவர்களுக்கு கிடையாது. அன்பழகன் என்ற ஒரு பெயர்பெற்ற ஆசிரியர் இவையளுக்கு படிப்பிச்சவர். இடம்பெயர்ந்த ஆக்கள் எண்டு சொல்லி சலுகைக் கட்டணத்துல இவையள சேர்த்துக் கிட்டாங்க. அரச வங்கிகளில deposit பண்ணியிருந்தால் ஏதாவது கிடைக்கும். மற்றபடி ஒண்டும் இல்ல" என்றார்.

கடந்த கால வாழ்க்கை அவர்களை அலைக்கழித்திருக் கின்றது. அவற்றை அவர்கள் கூறும்போது வேதனைப்படுவதை உணர்ந்த நான் கிருஷிகன் பற்றி கதைக்கத் தொடங்கினேன்.


"படிக்க வாங்க எண்டு கூப்பிட்டால் வந்துடுவான். இவ்வளவு நேரம் படி எண்டா அவ்வளவு நேரம் படிப்பான். குழப்படிதான். ஆனால் சொல்லுக் கேட்டு படிப்பான். 'தம்பி படிக்கோணும். இப்ப படிக்காமல் விட்டால் எதிர்காலம் மண்ணாப் போகும். அத யோசிச்சு படி' எண்டம். வந்து இருந்துடுவான். ஆள இருத்துறது தொஞ்சக் கஷ்டம்தான். இருத்திட்டால் ஒருமிக்க இருந்துடுவான்" என்று அவரது தாய் இயல்பாக கதைக்கத் தொடங்கினார்.

இப்பொழுது பரீட்சை என்றால் நினைவுக்கு வருவது தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை தான். தரம் நான்கில் பிள்ளை காலடி எடுத்து வைக்கும்போதே அங்கே புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆயத்தம் தொடங்கிவிடுகின்றது. சிறுவயது முதலே பிள்ளைகளுக்கு நல்ல அடித்தளம் கொடுக்கப்படும்போது அவர்களது எதிர்காலம் சிறப்படையும் என்பதில் ஐயமில்லை. கடந்தகால யுத்த சூழ்நிலை கள் மக்களை எல்லா வகைகளிலும் வெகுவாக பாதித்துவிட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தங்களுக்கு கல்வி ஒன்றே கை கொடுக்கும் என்றுணர்ந்த அந்த மக்கள் பிள்ளைகளை எப்பாடு பட்டேனும் படிக்க வைத்துள்ளனர். இருந்தும் அவர்களுக்கு எவ்விதமான அரச உதவிகளும் கிடைக்காதது மனவருத்தமாக இருக்கிறது.

கல்வியென்பது எம்மைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய சொத்து. எப்பாடுபட்டேனும் அதைக்கற்கவேண்டியது தலையாய கடமை. எங்கள் நிலம் சூறையாடப்படுகின்றது. எங்கள் கலாச்சாரம், பண்பாடு, மொழி என எல்லாம் சிதைக்கப்பட்டு வரும் இவ்வேளையில் எங்கள் ஒரே உரிமை கல்வி மட்டுமே. அதை முறையாகக் கற்க நாம் முன்வர வேண்டும். அதுவே எதிர்காலத்தில் எங்களுக்கான இருப்பை தீர்மானிக்கப் போகும் ஆயுதம் என்று கூடச் சொல்லலாம்.

## விதைகளை சேமிக்க ஒரு யோசனை...

புது மண்பானையை மாட்டு சிறுநீரால் கழுவி, ஒரு நாள் முழுக்க நிழலில் உலர வைத்து, இரண்டாவது நாள் வெயிலில் உலர வைத்து மூன்றாவது நாள் விதைகளை அதில் போட்டு மூடி வைத்தால், குறைந்தது இரண்டு வருடம் வரை விதை, முளைப்பு தன்மை குறையாமல் இருக்கும்.





# சிறையிலிருந்து விடுதலை

**அன்பழகன்**

பலவித காரணங்களுக்காக சிறை த்தண்டனையை மக்கள் அனுப வித்துக் கொண்டிருக்கின்றனர். பல்வேறு வகை யான சிறைக் கூடங் களை நாம் காணலாம். கைதிகள் எவ்விதத்திலும் சிறையிலிருந்து தப்பிவிடக் கூடாது என்பதற்காக அவற்றின் சுவர்களும் மதில்களும் மிகவும் உயரமாகவும் உறுதியாகவும் கட்டப்பட்டிருக்கும். சிறைகள் எப்படிக் கட்டப்படவேண்டும் என்பதற் கான கருத்துக்களும் ஆலோசனைகளும் கைதிகளிடமிருந்து பெறப் படுவதில்லை. அது முறையும் இல்லை.

ஆனால் விடுதலை அறிவிக்கப்பட்ட பின்னரும் சிறைக் கதவுகள் திறக்கப்பட்ட பின்னரும் கைதி ஒருவன் புறப்படாமல் இருக்கிறான் என்றால் அதன் கருத்து என்ன? சமூகத்தில் அவனை வரவேற்று அன்பு செலுத்த எவருமே இல்லாமலிருக்க வேண்டும். அல்லது சிறைக்குள்ளே அவனை ஏற்று அன்பு செலுத்துபவர்கள் இருக்கவேண்டும். அன்பு செலுத்தாவிட்டாலும் அவனை கவனிப் பவர்கள் அல்லது பயப்படுபவர்கள் இருக்கின்றனர்!

வாழ்க்கை என்ற பயணத்தில் சிலர் கைதிகளாக இருக்கின்றனர். அவர்களைச் சுற்றி ஒரு வேலி அடைக்கப்பட்டுள்ளது. அவர்களைப் பாதுகாப்பதற்காக எழுப்பப்பட்ட வேலிகள் உடைக்க முடியாத சிறைக் கம்பிகளாக மாறிவிட்டன. ஒருவரையும் நம்பாதே! என்பது ஒரு வேலி. காலப்போக்கில் எவரிடமும் நம்பி வேலையை ஒப்படைக்க முடியாத நிலையாக அது உருவாகி விட்டதால் வேலையைப் பகிர்ந்து செய்ய முடியாத நிலை. விளைவு, குழுவாக இயங்க முடியாத நிலை. குழுவாக இயங்க முடியாதவன் வாழ்வில் வெற்றிபெற முடியாமற் போய் விடும்.

"பாலியல் உணர்வும், உறவும் அருவருப்பானது" என்பது இன்னொரு வகையான வேலி. பிள்ளைகள் கெட்டழிந்து போகால் இருப்பதற்காக பெரியோர் உருவாக்கி வைத்த எச்சரிக்கை. காலப் போக்கில் கவனிப்பாரற்றுக் கிடந்து விட்டு திருமண உறவுக்குள் பிரவேசிக்கும் காலப்பகுதியில் வாழ்க்கைத் துணையுடன் மெய்யன்புடனும் ஆழமான அர்ப்பணிப்புடனும் உறவாட முடியாத நிலைக்குத் தள்ளிவிடுகின்றது. மனிதருடைய வாழ்வின் நிறைவைக் காண முடியாத தடைச் சுவராக இது அமைந்து விடுகின்றது.

மற்றவர்கள் அமைக்கும் சிறைக்கம்பிகளை விட நாமே நம்மைச் சுற்றி அடைக்கின்ற சிறைக்கம்பிகள் மிகவும் வலிமை வாய்ந்தவை. அவற்றை இனம் கண்டு கொள்வது முக்கியம். தான் பாதிப்படையக் கூடாது என்பதற்காக ஒருவன் பல்வேறு கவசங்களை அணிந்து கொள்கிறான். உதாரணமாக தன்னை ஒருவரும் ஏமாற்றக் கூடாது என்பதற்காக அல்லது தன்னைக் கண்டு மற்றவர்கள் பயப்பட வேண்டும் என்பதற்காக தனது முகத்தையும் நடத்தையையும் சற்றுக் கடுமையாக ஒருவர் வைத்துக் கொள்கிறார். நாளடைவில் அவரைப் பற்றி அவரே மக்கள் மனதில் ஏற்படுத்திய எண்ணம், மற்றவர்களிடம் அன்பைப் பரிமாறிக் கொள்ள முடியாத ஒரு சுவராக மாறிவிட்டது. ஆண்களுடன் பழகுவது நடத்தைக் குறைபாடு என்று நம்பி தனது நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆண் சகவாசத்தைத் தவிர்க்கும் ஒரு பெண், அவளை மெய்யன்புடன் அணுகும் ஒரு ஆணின் உறவை ஏற்றுக் கொள்ள முடியாத கைதியாக மாறிவிடுகி றாள். பாதுகாப்பு அவசியம்தான். அதற்காக சிறைக் கைதியாகவா மாற வேண்டும்?




# நேரம்

சாதாரண மனிதர்கள் நேரத்தை துல்லியமாகக் கணக்கிடுவதில் கவனம் செலுத்துவதில்லை. ஒரு விவசாயி இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்டு நேரத்தை அறிந்து கொள்கின்றான். சூரிய உதயம், மதியத்தில் சூரியன் இருக்கும் இடம், சூரியன் மறையும் நேரம் ஆகியவைகளைக் கண்டு நேரத்தை அறிகின்றான். அவருடைய தொழிலுக்கு அது போதுமானது.

'பழங்காலத்தில் சூரிய ஒளியால் இயங்கும் கடிகாரத்தை உருவாக்கி நேரத்தை அறிந்து கொண்டனர். அது சூரியன் மேகத்தினுள் மறைக்கப்படும்போது இயங்காது. ஐரோப்பியர்கள் 14ம் நூற்றாண்டின் இறுதியில் இயந்திரக் கடிகாரத்தைக் கண்டுபிடித்தனர். பெரிய சக்கரங்களுடனும் சுமைகளுடனும் அமைக்கப்பட்டு இயக்கப்பட்டது. ஆனால் அது மணியை மட்டுமே காண்பித்தது. அதில் நிமிடங்கள், நொடிகள் கிடையாது. அது தேவாலயங்களிலும் நகரத்தின் பிரதான இடங்களிலும் மணி ஒலியை எழுப்ப உபயோகப்படுத்தப்பட்டது.

பின்னர் கடிகாரம் சிறிய அளவில் உருவாக்கப்பட்டது. வீட்டு உபயோகத்திற்காக சுவரில் மாட்டப்படும் கடிகாரங்களும் பெரிய மேசைக் கடிகாரங்களும் தோன்றின. சுருள் ஸ்பிரிங்குகளின் கண்டுபிடிப்பு கடிகாரத் தொழில்நுட்பத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.

ஐரோப்பியத் தொழில் வல்லுனர்கள் பொக்கெட் கடிகாரத்தை உருவாக்கினர். சுவிட்சர்லாந்து நாட்டினர் 1860 ஆம் வருடங்களில் விலை மலிவான கடிகாரங்களைப் பெரும் அளவில் உற்பத்தி செய்யத் தொடங்கினர். முதல் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு தான் கைக்கடிகாரங்கள் மிகவும் பிரபல்யம் அடைந் தது. இன்று குவார்ட்ஸ் முறையில் தயாரிக்கப்பட்ட கடிகாரங்கள் வினாடிகளின் பகுதிகளைத் துல்லிய மாகக் காண்பிக்கும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. இது எதைக் காட்டுகின்றது? நேரத்தின் முக்கியத்துவத்தையும் நேர உணர்வையும் தானே?







# வினாவிடை முறைகளைக் கையாளும் திறன்

ஆசிரியரின் பணியில் மகத்தான ஒரு பங்கு வகிப்பது வினாக்களைக் கையாளும் திறன். சிறந்த முறைகளில் வினாக்களை எழுப்பக் கூடிய திறனும், அறிவும் ஒருவர் பெற்றிருப்பாரேயானால் நல்ல ஆசிரியர் ஆவதற்குரிய முயற்சியில் பெரும் பகுதி வெற்றியடைந்ததாகவே கொள்ளலாம். வகுப்பறைப் பின்னணியில் வழங்கும் வினாக்களை குறிப்பாக நான்கு முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம். இவற்றில் பூர்வாங்க வினாக்கள் ஒருவகையாகும். இவ்வகை வினாக்கள் மாணவரின் முன்னறிவைத் தெரிந்து கொள்ள உதவுகின்றன. போதிக்க வேண்டிய புதிய கருத்துக்களோடு தொடர்புபடுத்தக் கூடிய வகையில் முன்னரே மாணவர் அறிந்துள்ளவை எவை என்றறிந்துகொள்வதே இவ்வகை வினாக்களின் பிரதான நோக்கமாகும். ஆகவே எடுத்ததற்கெல்லாம் வினாக்களையெழுப்பக்கூடாது. நோக்கம் இதுவாயின் வினா கேட்கப்பட்ட பின்னர் மாணவன் சிந்தித்து பதிலிருக்கும் வரை பொறுத்திருக்க வேண்டுமேயன்றி மீண்டும் மீண்டும் எழுப்புதலோ மற்றவையில் சூட்சுமமாகத் தெரிவிப்பதோ கூடாது. காரணம் அத்தகைய நிலையில் வினாவின் நோக்கம் நிறைவேறாது.

பாடம் நடத்துகையிலும் எந்த நிலையிலும் வினாக்களை ஆசிரியர் கேட்கலாம். இவ்வகை வினாக்களால் போதிக்கப்பட்ட கருத்து சரியாக உணர்த்தப்பட்டு வருகிறதா, மாணவரின் கவனம் பாடப் பொருளில் லயித்துள்ளதா, அப் பொருளைக் கிரகித்தலில் இடர்பாடு ஏதேனும் உண்டா என்றெல்லாம் கண்டறிய ஆசிரியர் வினாக்களை எழுப்பலாம். குறிப்பாக ஆழ்ந்த, நீடித்த சிந்தனைத் தொடரைக் கோரும் பாடங்களை நடத்துகையில் இவ்வினாக்கள் மிகவும் உபயோகமாகவிருக்கும். இவ்வினாக்களுக்குப் பதில் தரும் போது மாணவர்கள் படிப்படியாக சிந்தித்துப் புது உண்மைகளை உணரவும் எடுத்துரைக்கவும் பயிற்சி பெருகிறார்கள்.

பாட போதனையின் இடையிலோ இறுதியாகவோ எந்த ஒரு நிலையிலும் போதனையை நிறுத்தி, போதிக்கப்பட்டது மாணவர்களால் கிரகிக்கப்பட்டதா என்றறியும் நிமித்தம் வினாக்கள் கேட்கப்படலாம். இவ்வகை வினாக்களையும் அளவோடு பயன்படுத்த வேண்டும். துண்டு துண்டாகக் கேள்விகள் கேட்டால் வழங்கப்படும் பதில்கள் ஒன்றோடு ஒன்று இணையாமல் உதிரியாக இருக்கும். அவற்றில் பயன் இல்லை. ஆகவே தொடர்ந்து ஒரு வாய்மொழி உரையாடல் மாணவர்களிடமிருந்து வரவிழைவோமேயானால் அவர்களிடமிருந்து முழு வாக்கியங்களில் பதில்களைக் கோரவேண்டும்.

வகுப்பறை



# புத்தகங்கள் உங்கள் நண்பன்

வாசிப்பு மனதை ஒருமுகப்படுத்துகின்றது. நமது ஞாபக சக்தியை அதிகப்படுத்துகின்றது. நமது கற்பனை வளத்தைத் துண்டுகின்றது. அரிய பல விடயங்களை அறிமுகப்படுத்துகின்றது. பல்வேறு உணர்வுத் தளங்களுக்கு உலகங்களுக்கு அழைத்துச் செல்கின்றது. மாணவர் மத்தியில் குறைந்து கொண்டு வரும் வாசிப்புப் பழக்கத்தை அறிமுகப்படுத்துவது அவசியமான தொன்றாகும்

புத்தக ஆர்வம் சிலருக்கு இயல்பாகவே ஏற்பட்டு விடுவதுண்டு. யாவருடைய தூண்டுதல் காரணமாகவும் இல்லாமல் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட நிர்ப்பந்தங்கள். தேவைகள். தேடல்கள்கூட புத்தகங்களை நாடிச் செல்லத் தூண்டுகிறது. ஆனால் பெரும்பாலான புத்தக ஆர்வமுடையவர்களை ஆராய்ந்து பார்ப்போமானால் அவர்களுடைய ஆர்வத்திற்கான தீப்பொறி பெற்றோரிடமிருந்தோ ஆசிரியரிடமிருந்தோ அல்லது அவர்கள் மதிக்கும் வேறொருவரிடமிருந்தோ வந்து இவர்களையும் பற்றுகிறது.

சின்னக் குழந்தைகளுக்கு கதை சொல்வது. புத்தகங்கள் படித்துக்காட்டுவது போன்ற ஆரம்ப காலப் பழக்கங்களால் கதைகள் மீது குழந்தைகளுக்கு ஆழ்ந்த ஆர்வத்தினை ஏற்படுத்த முடியும். அந்த ஆர்வமே பின்னர் அவர்களாகவே பலவித கதைப் புத்தகங்களைத் தேடிச்செல்ல வழிவகுக்கும். கதையார்வம் புத்தக ஆர்வமாக பரிணமிக்க வழிவகுக்கும்.

வளர்ந்த பிள்ளைகள் கதைகள். நாவல்கள் படிப்பதை பலர் தடுத்து விடுகின்றனர். ஆனால் உண்மை என்னவென்றால் நாவல்கள் வெறும் கதை சொல்லிகள் மட்டும் அல்ல அது பல விதமான சேதிகளை தன் வாசகனுக்குப் பரிமாறுகின்றது. இனிமையாகக் கதைசொல்லும் வாதம். மொழியறிவு. அதுதவிர தான் சார்ந்த இனத்தின் மற்றும் பிற இனங்களின் வரலாறு. கலாச் சாரம். உலகின் பல்வேறு இடங்கள். அங்கே நிலவும் இயற்கைச் சூழல். சமுதாய அரசியல் சூழல்கள். உலக அரங்கில் நிலவும் பல்வேறு சிந்தனைகள் என்று கிட்டத்தட்ட ஒரு இணை கல்வியைப் போதிக்கக்கூடியதாக அது அமைந்து விடுகின்றது.

அதே நேரத்தில் அந்த நாவல் அத்தகைய அனுபவங்களை அவர்களுக்குத் தரக்கூடியதுதானா என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்து தம் பிள்ளைக்கு வழிகாட்டச் செய்வது இன்றைய சூழலில் அவசியமானதொன்றாகும். குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சியோடு பரந்து பட்ட அறிவும் அவர்களின் அனுபவ அறிவும் அவர்களின் வெற்றிகரமான வாழ்க்கைக்கு அவசியமானதாகின்றது. இது வெறும் பாடப் புத்தகத்தை படிப்பதாலோ தம் குறுகிய வாழ்க்கைச் சூழலிலோ அவர்களுக்கு கிடைத்துவிடப் போவதில்லை.

இதற்கு ஒரு விதத்தில் புத்தகங்கள் உதவிசெய்ய முடியும். குழந்தைகள் புத்தகங்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளவும், அவற்றோடு உறவாடவும் தேவையான அடிப்படை ஆர்வத்தை வீட்டில் பெற்றோர்களும் பள்ளியில் ஆசிரியர்களும் தம் குழந்தைகளிடத்தே ஏற்படுத்த எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும்.

# நீங்க ஓபிஸ்ல ஓவரா சீன் போடுபவரா...??



ஒரு சலவைத் தொழிலாளிட்ட ஒரு நாயும் கழுதையும் இருந்தது. ஒரு நாள் அந்தச் சலவைத் தொழிலாளி இரவு நல்லா தூங்கிக்கொண்டிருக்கும்போது கதவை உடைத்துக்கொண்டு ஒரு திருடன் வந்திட்டான். சலவைத் தொழிலாளி நடப்பது தெரியாமல் நல்ல உறக்கத்திலிருக்க திருடனைப் பார்த்த நாய் குரைக்காமல் இருந்தது. 'சரியா சோறே போடுறதில்லை இவனுக்கு நான் ஏன் உதவிபண்ணனும்... எண்டு நாய் குரைக்கவில்லை. அதைப்பார்த்த கழுதை என்னடா இவன் சத்தம்போடாம இருக்கான். குரைச்சு முதலாளியை எழுப்புவானெண்டு பார்த்தா சும்மா இருக்கான். சரி நாமளாவது சத்தம்போட்டு முதலாளிக்கு திருடன் வந்ததை அலேர்ட் பண்ணுவோம் எண்டு கத்த ஆரம்பித்தது. சத்தம் கேட்டதும் கள்ளன் ஓடிவிட்டான். சத்தத்தில் தூக்கத்தில் இருந்து எழுந்த சலவைத் தொழிலாளி ஒருகட்டையை எடுத்து பளாரெண்டு கழுதை தலையில ஒரே அடி. கூறுகெட்ட கழுதை நேரங்காலம் தெரியாம கத்திக்கொண்டு இருக்குது எண்டு கழுதையைத் திட்டிவிட்டு திரும்பவும் படுத்துக்கொண்டான்.

நீதி : உங்களுக்கு ஒப்பீஸ்ல என்னவேலை கொடுத்திருக்கோ அதைமட்டும்தான் செய்யோணும். ஓவரா சீன் போட்டா இப்படித்தான்.

இந்தக்கதை மற்றொரு கோணத்தில்...

கழுதை கத்தியதும் எழுந்த சலவைத்தொழிலாளி கழுதை சும்மா கத்தியிருக்காது. காரணமாகத்தான் கத்தியிருக்கும் என்று எழுந்து பார்த்து திருடன் வீட்டுக்கு வந்ததால்தான் கழுதை கத்தியது எனப் புரிந்துக்கொண்டான். அடுத்த நாள் கழுதைக்கு வகைவகையான சாப்பாடு போட்டான். நாயைக் கண்டுகொள்ளவே இல்லை. கழுதையோட ஆர்வக்கோளாறும் விசுவாசமும் முதலாளிக்கு பிடித்துவிட இவன் ரொம்ப நல்லவன்டா. எவ்வளவு வேலை கொடுத்தாலும் செய்யிறான் எண்டு முதலாளியின் எல்லா வேலைகளையும் கழுதையை செய்ய வைத்தான். நாய் செய்து கொண்டிருந்த வேலையும் கழுதையின் மேல் சுமத்தப்பட்டது.

நாய் சுகமாக வேலையே செய்யாமல் கழுதையைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தது. வேலை செய்து அலுத்துப்போன கழுதை இப்போது வேறு வேலைக்கு சீவி(C.V) அனுப்பிக் கொண்டிருக்கின்றது.

நீதி: ஓபிஸ்ல ஓவரா சீன்போட்டா இப்படியும் நடக்கலாம்.



திகில் கதை மன்னர் எட்கர் ஆலன் போ ஒவ்வொரு வரியையும் ரசிக்க வைப்பவர். இவர் எழுதியதை படிப்பது ஒரு தனி அனுபவம். ஒவ்வொரு விஷயத்தையும் கவனித்து எழுதி அவற்றை மறக்க முடியாமல் செய்பவர். அவரது கதைகளில் ஒன்றை இங்கே தமிழில் தருகின்றோம்.

# இதயம் பேசுகிறது

என்னை பைத்தியக்காரன் என நீங்கள் நினைப்பது தவறு. வினோதமான ஒரு நோயால் நான் பீடிக்கப்பட்டு இருப்பது உண்மைதான். ஆனால் அந்த நோய் எனக்கு நல்லதுதான் செய்து இருக்கிறது.

ஏதாவது காய்ச்சல் வந்தால் நம் புலன்கள் பாதிக்கப்பட்டு மந்தமாகும். ஆனால் இந்த நோய் என் புலன்களை மேன்மை படுத்தி இருக்கிறது. குறிப்பாக கேட்கும் சக்தி எனக்கு நம்ப முடியாத அளவுக்கு அதிகரித்து விட்டது.

உங்களால் கேட்க முடியாதவற்றைக்கூட என்னால் கேட்க முடியும். பூமியின் ஆழத்தில் இருந்தும் வானத்துக்கு அப்பால் இருந்தும் பல விஷயங்கள் என் செவியை அடைந்த வண்ணம் உள்ளன.

என்னைபோய் பைத்தியக்காரன் என்கிறீர்கள். நடந்ததை எவ்வளவு தெளிவாக விரிவாக சொல்கிறேன் என்று பாருங்கள். அதன்பின் நீங்களே முடிவு செய்யுங்கள். நானா பைத்தியக் காரன்?

ஒரு பைத்தியக்காரன் இவ்வளவு தெளிவாக செய்ததை சொல்ல முடியுமா? அந்த எண்ணம் முதன்முதலில் எப்போது ஏற்பட்டது என சொல்வது கடினம். ஆனால் அந்த எண்ணம் ஏற்பட்டபின் இரவுபகலாக அந்த எண்ணம் என்னை ஆக்கிர மித்து விட்டது.

அந்த கிழவன் மேல் எந்த கோபமும் இல்லை. எனக்கு அவனை மிகவும் பிடிக்கும். அவன் எனக்கு எந்த தீங்கும் செய்த தில்லை. எந்த இழிவும் செய்ததில்லை. அவன் சொத்து மீது எனக்கு எந்த ஆசையும் இல்லை. வேறு கொடுக்கல் வாங்கல் தகராறும் இல்லை.

பிறகு என்ன...? அவன் கண்கள்... அதுதான் பிரச்சினை என நினைக்கிறேன். ஆமாம். அதேதான்.

பிணம் தின்னி கழுகின் பயங்கரமான கண்களை பார்த்து இருக்கிறீர்களா? இல்லை என்றால் அவன் கண்ணை பார்த்தால் போதும். அவன் கண்களில் ஒன்று... வெளிறிய நீல நிறத்தில் மெல்லிய ஒரு திரையால் மூடப்பட்டு பயங்கரமாக இருக்கும். அந்த கண் என் மேல் படும்போதெல்லாம் என் ரத்தம் உறைந்து விடுவதுபோல இருக்கும். உடம்பு நடுங்கும்.

மிகவும் யோசித்த பின்தான் அந்த முடிவுக்கு வந்தேன்.

அந்த கண்ணில் இருந்து எனக்கு விடுதலை கிடைக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அந்த கிழவனை போட்டு தள்ளுவதுதான். இதை சொன்னதுமே முடிவு கட்டி இருப்பீர்கள். நான் ஒரு பைத்தியக்காரன் என்று.

ஒரு பைத்தியக்காரனுக்கு எதுவும் தெரியாது. என் திட்டமிடலையும் முன் யோசனையும் மிகுந்த கவனத்துடன் நான் நினைத்தை செய்து முடித்ததையும் நேரில் பார்த்து இருந்தால் என்னை பைத்தியக்காரன் என சொல்ல மாட்டீர்கள்.

ஒரு வாரமாகவே அவனை கொல்ல முயன்று வந்தேன். ஒவ்வொரு இரவிலும் நள்ளிரவில் அவன் அறைக்கதவை மெதுவாக திறப்பேன். கையில் இருக்கும் விளக்கை அணைத்து வைத்து இருப்பேன். எவ்வளவு கவனமாக செயல்படுகிறேன் என்பதை நீங்கள் பார்த்து இருந்தால் ஆச்சரியப்படுவீர்கள். அவன் தூக்கத்தை கெடுத்துவிடாத அளவுக்கு மிக கவனமாக எனது ஒவ்வொரு அசைவும் இருக்கும். போதிய அளவு கதவை திறந்ததும் மெதுவாக கைவிளக்கை ஓன் செய்வேன். ஓன் செய்யும் சப்தம் எனக்குகூட கேட்காது. மெதுவாக, கவனமாக கைவிளக்கின் ஒளிக்கற்றை அந்த வல்லூறு கண்ணில் படுமாறு செய்வேன். இதுபோல ஏழு இரவுகள் செய்தேன். ஒவ்வொரு முறையும் அந்த கண் மூடியே இருந்தது. எனவே என் பணியை என்னால் செய்ய முடியவில்லை.

மீண்டும் சொல்கிறேன். எனக்கு அந்த கிழவன் மீது எந்த கோபமும் இல்லை. அந்த கண்தான் என் பிரச்சினை. கண் மூடிய நிலையில் அந்த கிழவனை எதுவும் செய்ய விரும்பவில்லை. கண் மேல் இருக்கும் கோபத்தில் அவனை எதுவும் செய்ய விரும்பவில்லை. பகல் பொழுதில் அவனுடன் ஜாலியாக பேசுவேன். அரசியலில் இருந்து, சிறுமிகளிடம் கொடூரமாக நடக்கும், அப்பாவிகளுக்கு நடக்கும் அநீதிகள் வரை பல விஷயங்களில் கருத்துக்களை பரிமாறிக் கொள்வோம்.

கிழவனுக்கு என் மேல் சந்தேகம் வர வாய்ப்பே இல்லை. எட்டாவது நாள். வழக்கத்தைவிட கூடுதல் கவனமாக இருந்தேன். கதவை மெதுவாக திறந்தேன். கடிகாரத்தின் நிமிட முள் மெதுவாக நகரும் அல்லவா. அதைவிட மெதுவாக என் கரங்கள் செயல்பட்டன. கண்டிப்பாக என் எண்ணம் நிறைவேறும் என தோன்றியது. என் எண்ண ஓட்டத்தை தெரிந்து கொள்ளாமல் நிம்மதியாக தூங்கிக் கொண்டு இருந்தான் அவன்.

இல்லை. நான் வருவதை அவன் உள்ளுணர்வு மூலம் அறிந்து விட்டான் என நினைக்கிறேன். வேகமாக அசைந்தான். புரண்டு படுத்தான். பயந்து போய் நான் பின் வாங்கி இருப்பேன் என நினைப்பீர்கள்..

இல்லை. அந்த இருட்டில் அவன் என்னை கவனிக்க முடியாது என எனக்குத் தெரியும். மெதுவாக கதவைத் திறந்து விளக்கை ஓன் செய்வதற்கு முன் கை அதில் மோதி மெல்லிய சத்தம் எழுப்பி விட்டது.

"யாரது?" கிழவன் திகிலடைந்த குரலில் கேட்டான். படுக்கையில் அமர்ந்து கொண்டான்.

நான் ஒன்றும் சொல்லவில்லை. ஒரு மணி நேரம். ஒரு சிறிய அசைவு கூட இல்லாமல் காத்து இருந்தேன். அவனும்

படுக்கவில்லை. அமர்ந்தபடியே தூங்காமல் இருந்தான். ஒவ்வொரு நாளும் நான் இப்படித்தான் இருக்கிறேன் என்பது அவனுக்குத் தெரியாது.

ஒரு மெல்லிய புலம்பல் ஓசை சத்தம்... தேம்பி அழும் ஓசை கேட்க தொடங்கியது. இது வலியாலோ துன்பத்தாலோ எழும் ஓசை அல்ல. துன்பம் வரப்போவதை அறியும் உயிர் தன் ஆன்மாவின் அடித்தளத்தில் இருந்து எழுப்பும் அவல ஓசை.

இந்த சத்தத்தை நான் நன்றாக அறிவேன். ஊர் உறங்கிய பின் நள்ளிரவு நேரங்களில் என் ஆன்மா இப்படி வேதனை குரல் எழுப்புவதை நான் பலமுறை கேட்டு இருக்கிறேன். இப்போது அதே பயங்கரமான தேம்பல் ஒலி. கிழவன் தற்போது எந்த அளவுக்கு நடுங்கிக் கொண்டு இருக்கிறான் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. வரப்போகும் அழிவை நினைத்து அவன் உயிர் துடிப்பதை நினைத்தால் பாவமாக இருந்தது.

மெல்லிய சத்தம் கேட்டு எழுந்த அவன் பிறகு தூங்கவே இல்லை. சிறிதாக ஆரம்பித்த பயம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து அவனை ஆக்கிரமித்து விட்டது. ஒன்னும் பயப்பட வேண்டாம். எலி எதாவது ஓடி இருக்கும். அதுதான் அந்த சத்தம். காத்து அடிச்சி இருக்கும். இதுக்கு போயி பயப்படலாமா? என அவன் ஏதேதோ சமாதானம் சொல்லி தைரியப்படுத்திக்கொள்ள முயன்றான்.

எல்லாமே வீண். சாவு அவனை நெருங்கிக் கொண்டு இருக்கிறது. தன் இருள் கரங்களால் மரணம் அவனை தழுவ துடிக்கிறது. வெகு நேரம் காத்து இருந்த பின் கைவிளக்கை ஒன் செய்தேன். ஒளிக்கற்றை அவன் கண்மீது விழுந்தது. அந்த வல்லூறு கண் திறந்து இருந்தது. அதை பார்த்ததுமே என் முதுகுத்தண்டு சில்லிட்டது. ரத்தம் உறைந்து விட்டது.

அவன் இதயத் துடிப்பு அதிகரித்ததை என்னால் கேட்க முடிந்தது. அமைதியாக இருந்தேன். பயந்து போய்விட்டான் என நன்றாகத் தெரிந்தது. பழைய வீட்டின் பயங்கர அமானுஷ்ய அமைதி நள்ளிரவு. இதை மீறி கேட்கும் இதய ஒலி... திகிலுடன் கவனித்துக் கொண்டு இருந்தேன்.

இதயம் வெடித்து விடுமோ என நினைத்தேன். இதய ஒலி அண்டை வீட்டாருக்கு கேட்டு வந்து விடுவார்களோ எனவும் பயமாக இருந்தது.

இனி தாமதிக்கக் கூடாது. கிழவனின் நேரம் நெருங்கி விட்டது. அறையில் பாய்ந்து நுழைந்தேன்.

அவனை இழுத்து தரையில் போட்டேன். அவன் என்னுடன் போராட முடியவில்லை. அவன் முகத்தில் தலையணையை வைத்து அழுத்தினேன். கொஞ்சம் கொஞ்சமாக இதயத் துடிப்பு நின்றது.

அவன் இறந்து விட்டான்!

பிணத்தை சந்தோஷமாகப் பார்த்தேன். இதயதில் கை வைத்து பார்த்தேன். அது இயக்கத்தை நிறுத்தி இருந்தது. ஆம் அவன் இறந்து விட்டான். இனி அந்த கண் என்னை தொல்லை செய்யாது. முன்பே யோசித்து வைத்தபடி பிணத்தின் தலை, கை, கால்களை வெட்டி தனித்தனியாக பிரித்தேன். அதே அறையில் புதைத்து முன்பு இருந்ததுபோல அதன் மேல் விரிப்பை வைத்து மூடினேன். எந்த ரத்தக் கறையும் இல்லாமல் செய்தேன்.

என்னை பைத்தியம் என சொல்ல முடியுமா? எவ்வளவு கச்சிதமாக முடித்து இருக்கிறேன்.

யாராலும் நடந்ததை கண்டுபிடிக்க முடியாது. அந்த கழுகு கண்ணால்கூட என்னை கண்டுபிடிக்க முடியாது.. ஹா... ஹா...

மறுநாள் காலை மூன்று பொலிஸ் அதிகாரிகள் வந்தனர். ஏதோ சப்தம் கேட்டு அண்டை வீட்டினர் சந்தேகத்தின் பேரில் புகார் கொடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். அட இதுதானா என சிரித்துக் கொண்டு வரவேற்றேன். நேற்று தூங்கும்போது ஒரு காமகொடூரனுக்கு கொஞ்சம் கூட ஈவு இரக்கம் இல்லாமல் ஆறு மாதம் தண்டனை விதித்தது போல கனவு கண்டு நான்தான் அலறினேன். இதற்கு போய் இவ்வளவு தூரம் வரவேண்டுமா என காவலாக அவர்களுடன் பேசினேன்.

எனக்கு என்ன பயம். வீடு முழுதும் சுற்றிக் காட்டினேன். சந்தேகப்படும்படி எதுவும் இல்லை.

உற்சாகமாக அவர்களுடன் பேசிக்கொண்டே நாற்காலியில் அமரச் செய்தேன். கிழவனை புதைத்த இடத்தின் மீது என் நாற்காலியை வைத்து தைரியமாக அமர்ந்தேன்.

அவர்களுக்கு என் பேச்சு திருப்தி அளித்தது. சந்தேகப்பட எதுவும் இல்லை என முடிவுசெய்து மற்ற விஷயங்களை பேச ஆரம்பித்தனர்.

மனித உரிமை, எந்திரன், அரசியல், குழந்தைகளை கொல்பவர்களுக்கு தேவையான சட்ட பாதுகாப்பு என் ஜொலியாக பேச்சு சென்றது. ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக என்னை பயம் சூழ ஆரம்பித்தது. அவர்கள் எப்போது போவார்கள்... தலை வலிப்பதுபோல இருந்தது. ஏதோ விநோதமான சத்தங்கள் மெதுவாக கேட்கத் தொடங்கின.


என் முகம் பயத்தில் வெளிரத் தொடங்கியது. மெதுவான, அமைதியான, விரைவான சப்தம். மரணத்தின் ஒலிபோல இருந்தது. என் பயத்தை மறைக்க அவர்களுடன் பேச்சைத் தொடர்ந்தேன். வாய்க்கு வந்ததை பேசினேன். ஏன் பேச்சை வளர்க்கிறார்கள்?

சத்தம் மேலும் மேலும் அதிகரித்தது. புதைக்கப்பட இடத்தில் இருந்து வரும் சத்தத்தை அவர்கள் கேட்டதாக தெரியவில்லை. முகத்தில் எந்த சந்தேகமும் இல்லை. அய்யோ.... நான் என்ன செய்வேன்... ஏன் இவர்கள் போக மறுக்கிறார்கள்... சத்தம் அதிகரித்துக்கொண்டே செல்கிறதே. இவர்களுக்கு கேட்டுவிட்டால் என்ன ஆவது...

திடீரென எனக்கு சந்தேகம். ஒருவேளை சத்தம் இவர்களுக்கும் கேட்டுவிட்டதோ ஒன்றும் தெரியாதது போல நடித்து என்னை கிண்டல் செய்கிறார்களோ..

சத்தம் தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்தது. இன்னும் எவ்வளவு நேரம் ஏமாற்றப் போகிறாய் என அவர்கள் கேட்பதுபோல அவர்கள் பார்வையில் கிண்டல் நிரம்பி வழிந்தது. என்னால் இதற்கு மேல் தாங்க முடியாது. அவர்களின் வஞ்சக சிரிப்பை பார்த்துக் கொண்டிருப்பதைவிட சாவதுகூட மேல். சத்தம் மேலும் மேலும் அதிகரித்தது.

எழுந்து அவர்களை நோக்கிக் கத்தினேன்.. சிரிப்பை நிறுத்துங்கடா நாய்களா.. உங்களுக்கு எல்லாம் தெரியும் என எனக்குத் தெரியும்.. நான்தான் அந்தக் கிழவனை கொன்று விட்டேன். இந்த இடத்தைத் தோண்டிப் பாருங்கள்.. இந்த அறையை தன் சத்தத்தால் நிறைக்கும் அந்த ஓசை அந்த பிணத்தின் இதய துடிப்பு ஒலிதான்... அது இங்கேதான் இருக்கிறது...!?



அவள் என்னை விட்டுப் பிரிந்தால்...
மது குடிக்க மாட்டேன்...
தாடி வைக்க மாட்டேன்...
அழுது புலம்ப மாட்டேன்...
அமைதியாக தூங்கிக் கொண்டிருப்பேன்...
அவள் தங்கையின் மடியில்...
கொய்யாலே...
கல்லறையில் தூங்குவேன்னு நினைச்சியா....
நீ இன்னும் வளரனும் தம்பி...




## பிரம்மனைப் போன்றவர் சச்சின்: பிரையன் லாரா புகழாரம்




'கிரிக்கெட் உலகின் தலை சிறந்த விளையாட்டு வீரர் என அழைக்கப்படும் பிரட்மனுக்கும் முன்னணி நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கருக்கும் இடையில் எந்தவொரு வித்தியாசத்தையும் நான் காணவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இன்றைய பிரட்மன் அவர்தான்' எனப் புகழாரம் பாடியுள்ளார் பிரையன் லாரா. மேற்கிந்திய தீவுகள் அணியின் நட்சத்திரமாகத் திகழ்ந்த பிரையன் லாரா டுபாய் நாட்டுக்கு விஜயம் செய்தபோது பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். சிறுவயதிலிருந்தே திறமையை வெளிக்காட்டி வருபவர் சச்சின். பெருந்தன்மையில்லாத அவரின் விளையாட்டு எனக்கு ரொம்பப் பிடிக்கும். இன்றைய காலத்தில் பிரட்மனைப் போன்று மிகச்சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்துபவர் அவர் என லாரா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## டெஸ்ட் தரவரிசையில் முதல் இடத்தில் சங்ககார



டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் சச்சின் டெண்டுல்கரை பின்னுக்குத் தள்ளி முதலிடம் பிடித்தார் இலங்கை வீரர் குமார் சங்ககார. பந்துவீச்சில் இந்திய வீரர் ஜாகீர் கான் 3 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) நேற்று வெளியிட்டது. மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்டில் 150 ஓட்டங்கள் குவித்தார் சங்ககார. இதன் மூலம் முதலிடத்துக்கு முன்னேறினார்.
சச்சின் 2-ஆம் இடத்துக்கு பின்தள்ளப்பட்டதுடன். தென் ஆபிரிக்காவின் டி வில்லியர்ஸ் 5 ஆம் இடத்திலும், இங்கிலாந்து வீரர் டிராட் 8 ஆவது இடத்திலும் உள்ளனர். பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் ஜாகீர் கான் 3 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார். டெஸ்ட் தரவரிசையில் ஜாகீர் கான் 3 ஆவது இடத்துக்கு முன்னேறுவது இதுவே முதல்முறை. சகலதுறை ஆட்டக்காரர் தரவரிசையில் தென் ஆப்பிரிக்காவின் ஜக்கஸ் காலிஸ் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

## உலகக்கிண்ண கிரிக்கெட : பாகிஸ்தான் அணியில் 5 வீரர்கள் இடம்பெறும் சந்தேகம்!



2011 ஆம் ஆண்டு இந்தியா, இலங்கை, வங்கதேசம் இணைந்து நடத்தும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியில் சல்மான் பட், மொஹமட் ஆசிப், மொஹமட் அமீர், கம்ரன் அக்மல், டெனிஷ் கனேரியா ஆகியோர் விளையாடுவது கடினம் என்று பாகிஸ்தான் செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சர்வதேச கிரிக்கெட் பேரவை இந்த 5 பேர் மீதும் சூதாட்ட சந்தேகம் இருப்பதால் இவர்களை டிசம்பர் 19 ஆம் திகதி அறிவிக்கும் உத்தேச அணியில் சேர்க்க வேண்டாம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தைக் கேட்டுக் கொண்டுள்ளதாய் செய்திகள் எழுந்துள்ளன. கம்ரன் அக்மலையாவது தேர்வு செய்து விடலாம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் ஐ.சி.சி.யை அணுகியபோது சாதகமான பதில் கிடைக்க வில்லை என்று தெரிகிறது. மற்றொரு வீரர் ஷொய்ப் மாலிக் பங்கேற்பது பற்றியும் சந் தேகம் எழுந்துள்ளது. ஆனால் தற்போது அவர் உள்நாட்டு கிரிக்கெட்டில் தொடர்ந்து 3 சதங்கள் அடித்து தேர்வுக்கு தயாராகி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பார்சிலோனாவிடம் ரியால் மேட்ரிட் படுதோல்வி




ஸ்பானிய கால் பந்து லீக் போட்டி ஒன்றில், பலமான ரியால் மேட்ரிட் அணியை மற்றொரு பலமான அணியான பார்சிலோனா 5-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அதிர்ச்சியளித்தது. ஆட்டம் தொடங்கி 17-ஆவது நிமிடத்திலேயே பார்சிலோனா வீரர்களான சாவி பெட்ரோ, ரோட்ரிக்ஸ் ஆகியோர் இரண்டு கோல்களை அடித்தனர். அதன் பிறகு டேவிட் வில்லா 54 மற்றும் 56 ஆம் நிமிடங்களில் மேலும் இரண்டு அபாரமான கோல்களை அடித்தார். பிறகு ஜெஃப்ரென் 5-ஆவது கோலை அடித்தார். இந்த வெற்றி மூலம் 2 புள்ளிகள் கூடுதலாகப் பெற்று அட்டவணையில் ரியால் மேட்ரிடை பின்னுக்குத் தள்ளியது பார்சிலோனா. இந்தப் போட்டிக்கு முன்பு, ரியால் மேட்ரிட் தோல்வியடையாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். கிரிக்கெட்டில் மீண்டும் கொச்சி அணி

**பல்வேறு** தடைகளைத் தாண்டி கொச்சி அணி ஐ.பி.எல் கிரிக்கெட்டில் மீண்டும் பங்கேற்க உள்ளது. கொச்சி அணியை 1533.33 கோடிக்கு விலைக்கு வாங்கிய பங்குதாரர்களுக்குள் அணியை யார் நிர்வகிப்பது என சண்டை ஏற்பட்டதால் பிசிசிஐ. ஐபிஎல் 4 இல் பங்கேற்க தடை விதித்திருந்தது. பிசிசிஐ இறுதியாக 30 நாட்கள் கெடு விதித்தது. இந்நிலையில் கொச்சி அணி ஐபிஎல் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தது. ஆனால் தற்போது பிரச்சினை முடிவுக்கு வந்ததால் கொச்சி அணி ஐபிஎல் இல் பங்கேற்க பிசிசிஐ அனுமதி வழங்கியுள்ளது.



# ஆஷஸ் முதல் டெஸ்ட் சமநிலையில் முடிவு



பிரின்பேனில் நடந்த முதல் டெஸ்ட் போட்டி இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கு வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்தது. இரு அணிகளுக்கிடையேயான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்றது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 260 ரன்களும் அவுஸ்திரேலியா 481 ரன்களும் எடுத்தன. 221 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 4 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 309 ரன்கள் எடுத்து இருந்தது. குக் 132 ரன்களுடனும் ஸ்ட்ராஸ் 54 ரன்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். 5 ஆவது நாள் ஆட்டத்தில் தொடந்து சிறப்பாக விளையாடிய குக் இரட்டைச் சதம் அடித்தார். அவரது முதல் இரட்டைச் சதம் இதுவாகும். 235 ரன்கள் குவித்து கடைசிவரை ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

இதேபோல சதம் அடித்த ஸ்ட்ராசும் 135 ரன்கள் எடுத்தார். இதையடுத்து இங்கிலாந்து அணி 1 விக்கெட் இழப்புக்கு 517 ரன்கள் குவித்து இருந்தபோது டிக்ளெயார் செய்தது. இதையடுத்து அவுஸ்திரேலியாவுக்கு 297 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தொடக்க வீரர் ஹூட்ச் 4 ரன்களில் ஆட்டம் இழந்தார். அணித் தலைவர் பொண்டிங் 51 ரன்கள் எடுத்து அரைச் சதம் அடித்தார். மற்றொரு தொடக்க வீரர் வாட்சன் 41 ரன்களில் களத்தில் இருந்தார். கடைசி நாள் ஒரு விக்கெட்டை இழந்திருந்த அவுஸ்திரேலியா 107 ரன்கள் இருந்தபோது ஆட்டம் டிரோவில் முடிந்ததாக நடுவர்கள் அறிவித்தனர்.

# மீண்டும் வருகிறார் சுசந்திகா



ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற இலங்கை ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க மீண்டும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார். அண்மைக்காலத்தில் சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கையின் செயற்பாடுகள் மோசமான நிலையில் இருப்பதால் சுசந்திகா மீண்டும் போட்டிகளில் பங்குபற்ற விரும்புகிறார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோருடன் கலந்துரையாடியதன் பின்னர் இது தொடர்பான அறிவித்தலொன்றை விடுக்கவுள்ளதாக சுசந்திகா தெரிவித்துள்ளார்.

# எவர்டன் கழகத்தில் இணைவாரா பெக்காம்?



டேவிட் பெக்காமை தமது கழகத்தில் இணைத்துக் கொள்ள ஆர்வமாக இருப் பதாக எவர்டன் உதைப் பந்தாட்ட கழகத்தின் முகாமையாளர் டேவிட் மொயஸ் தெரிவிக்கின்றார். டேவிட் பெக்காம் சிறந்த தொரு வீரரெனவும் அவரை அவர் எந்நேரமும் தனக்கு இது தொடர்பாக தொலைபேசியில் அறிவிக்க முடியுமெனவும் மொயஸ் குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்து தேசிய அணி வீரரான பெக்காம் தற்போது அமெரிக்க லா கெலக்ஸி அணிக்காக விளையாடி வருகின்றார். இவர் 2007 ஆம் ஆண்டில் இக்கழகத்தில் இணைந்தார். இக்கழகத்துடனான இவரது ஒப்பந்தம் அடுத்த வருடம் நவம்பரில் முடிவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யா, கட்டாருக்கு
## உலகக் கோப்பை வாய்ப்பு



உலகக் கோப்பை கால் பந்து தொடரை வரும் 2018 இல் நடத்தும் உரிமையை ரஷ்யா தட்டிச் சென்றது. இத்தொடரை 2022 இல் நடத்தும் வாய்ப்பை கட்டார் பெற்றது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் ஏமாற்றம் அடைந்தன. அடுத்த தொடர் வரும் 2014 இல் பிரேசிலில் நடக்கிறது. இதற்கு பின் 2018 இல் உலகக் கோப்பைத் தொடரை நடத்த ரஷ்யா, இங்கிலாந்து இடையே கடும் போட்டி நிலவியது. தவிர, ஸ்பயின்-போர்த்துக்கல், பெல்ஜியம்-நெதர்லாந்து நாடுகள் இணைந்து உரிமை கோரின. 2022 இல் தொடரை நடத்த அமெரிக்கா, கட்டார், அவுஸ்திரேலியா, தென் கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் போட்டியிட்டன. இந்நிலையில் உலகக் கோப்பைத் தொடரை நடத்தும் நாட்டைத் தெரிவு செய்ய, சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின்(பிபா) செயற்குழு கூட்டம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜூரிச்சில் அண்மையில் நடந்தது. வரும் 2018 இல் இங்கிலாந்துக்கு வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. பிரதமர் டேவிட் கமரான், இளவரசர் வில்லியம், கால்பந்து நட்சத்திரம் பெக்காம் ஆகியோர் ஜூரிச்சில் முகாமிட்டு கடும் முயற்சி மேற்கொண்டனர். அதே நேரத்தில் ஓட்டெடுப்பில் ஊழல் நடப்பதாகக் கூறி ஜூரிச் செல்ல, ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புட்டின் மறுத்தார். முடிவில், இங்கிலாந்தை பின்னுக்குத் தள்ளிய ரஷ்யா, வரும் 2018 இல் உலக கோப்பைத் தொடரை நடத்தும் வாய்ப்பைப் பெற்றது. அமெரிக்காவுக்கு அதிர்ச்சி கொடுத்த கட்டார், வரும் 2022 இல் போட்டியை நடத்தும் உரிமையைப் பெற்றது. இதனை பிபா தலைவர் செப் பிளாட்டர் அறிவித்தார்.



# ஊடக மயக்கம்.

## வெற்றிவாகை சூடும் வெற்றியின் வெற்றிபெற்றவர்கள்

நான் அனைத்து வானொலிகளையும் கேட்பதுண்டு. ஆனால் ஒவ்வொன்றையும் சிறிதளவு நேரம்தான் கேட்பேன். அண்மையில் இப்படி ஒருநாள் ஒவ்வொன்றாக திருப்பிக் கொண்டிருக்கும் போது வெற்றி fm இல் 'வெற்றி பெற்றவர்கள்' நிகழ்ச்சியைக் கேட்டேன். நிகழ்ச்சியில் பிரபல ஊடகவியலாளர் வித்தியாதரன் அவர்கள் உரையாடி இருந்தார்கள். அந்நிகழ்ச்சியின் நெறியாழ்கை மிகவும் சிறப்பாக இருந்தது. காரணம் சீரியசாக இல்லாமல் அழகான ஒரு பின்னணி இசையில் ஒரு அருமையான உரையாடல். அந்நிகழ்ச்சியில் ஊடகத்துறையில் அவர் எதிர்நோக்கிய அச்சுறுத்தல்கள், இன்னல்கள், கெடுபிடிகள் பற்றி காத்திரமான கருத்துகளை முன்வைத்ததுடன் ஒவ்வவொரு ஊடகவியலாளரும் எவ்வாறான மனநிலையில் காலையில் வீட்டை விட்டு வெளியேறுகின்றனர் என்பதை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தினார்.

**பா.நுட்**
**கொழும்பு 14**

## நேரமாற்றம் செய்திகளுக்கு அவசியமில்லை

ஓய்வில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் நான் எனது நேர அட்டவணையில் அரைமணி நேரம் கட்டாயமாக ஒதுக்குவது சக்தி தொலைக்காட்சியில் 8 மணி தொடக்கம் 8.30 மணி வரை ஒளிபரப்பாகும் செய்திகளுக்காகத் தான். உண்மைச் சம்பவங்களை உடனுக்குடன் தருவது சக்தி செய்திகள் தான் என்று கூறமுடியும். எனினும் ஒரு சில காரணங்களுக்காக அச் செய்தித்தொடர் நேரம் மாற்றி மாற்றி ஒளிபரப்பு செய்யப்பட்டது என்னை ஆதங்கப்படுத்திவிட்டது. இது நிகழ்ந்து சில மாதங்கள் ஆகிவிட்டாலும் எடுத்துச் சொல்வதற்கு ஒரு இடம் கிடைக்காமல் போய்விட்டது. இருக்கிறமின் ஊடக மயக்கத்தின் மூலம் இதனை சுட்டிக்காட்டவே இதனை எழுதுகிறேன்.

**எஸ். ஸ்ரீகாந்த்.**
**கொட்டாஞ்சேனை**

## திறமைக்கு களம்

இன்று வானொலி நிகழ்ச்சிகளில் நகைச்சுவை உணர்வு அதிகமாகவே மேலோங்கிவிட்டது எனலாம். நிகழ்ச்சிகளின் போது நேயர்களை போட்டு கடியோ கடி என்றி கடித்துவிடுவார்கள். வானலை முதல்வன் சூரியனில் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை இடம்பெறும் 'கூத்துப் பட்டறை' சிரிப்பின் அட்சயபாத்திரம். வெறுமனே நகைச்சுவை மட்டும் இல்லாமல், இந்நிகழ்ச்சி இன்று எத்தனையோ மிமிக்ரி கலைஞர்களை வெளியுலகிற்கு கொண்டுவந்துள்ளது. இவ்வாறான காத்திரமான நிகழ்ச்சிகள் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**கு. லக்ஷி, மருதானை**

## அச்சுத்துறையின் மவுசு

ஊடகங்களின் வரிசையில் மிகவும் கடினமாகச் செயற்படுவது பத்திரிகைத்துறை என்று கூறுவது மிகையானதல்ல. அக்கடினங்களுக்குள்ளும் வாசகப் பெருமக்களைக் கட்டியாள்வது அதன் திறன். அவ்வகையில் வாசகர்களிடம் மவுசு பெற்றிருப்பது ஒரு சில பத்திரிகைகளே. ஏனையவை தங்கள் உரிமைகளை இழந்துவிட்டனவா? இல்லை உண்மைக்கும் நீதிக்கும் காலமில்லாமையே அதன் பிரதிபலிப்பு. உண்மைகளைத் தாங்கி வரும் பத்திரிகைகள் இன்னும் கடைகளில் விற்கப்படாமல் எஞ்சியிருக்கும் நிலை உள்ளது. உண்மை எங்கே? விற்கப்படாமல் அடுக்கப்பட்டிருக்கும் அறைக்குள்ளே. இதுவே இன்றைய அச்சுத்துறையின் நிலை.

**ஏ. சீ. போல் அன்டனி**
**கலஹா வீதி, கண்டி**

## சோகத்தை மறக்க வைத்து மனதுக்கு சுகம் சேர்க்கும் 'வசந்த நிலா'

இன்று அனைத்து வானொலிகளும் தத்தமது நிகழ்சிகளை புதிய மாற்றத்துடன் வடிவமைத்துத் தருகின்றது. பொதுவாக இரவு நேர நிகழ்ச்சிகள் என்பது சவால் மிக்கது. எங்களது சோகத்தை மறக்கச் செய்து மனதை இனிமையாக்கி பல அறிவுரைகளுடன் தெவிட்டாத கானங்களையும் கவிதைகளையும் உணர்வுகளையும் தரும் வசந்தத்தின் 'வசந்த நிலா' அன்ஸாரின் தொகுப்பில் இதமாகவுள்ளது. நிகழ்ச்சிப் பொறுப்பதிகாரியின் சிறந்த வழிகாட்டலில் வசந்தம், வானொலிகளின் வரலாற்றில் தனக்கென தனியிடம் பிடித்து சாதனைகள் புரிய என் இதய வாழ்த்துக்கள்.

**தர்ஷினி, சாய்ந்தமருது**

## விடியலின் ராகம்

காலைக் கதிரவன் வானில் எழும்வேளை தெருவின் கடைகளிலும், அலுவலகம் செல்லத் தயாராகும் வேலையாட்களின் வீடுகளிலும், பரபரப்பாகத் தொடங்கும் தெருமுனைகளிலும் ஒலிப்பது என்றால் அது சூரிய ராகமாகத் தான் இருக்கும். அந்நிகழ்ச்சியை ஒலிபரப்புகின்ற இருவரது பேச்சுத்தொனி ஒரு உற்சாகத்தையள்ளித்தருகிறது. இரவு வானம் மின்னும்வேளையில் நேற்றைய காற்றின் இனிமையான பாடல்களுடன் கண்கள் மெல்ல மூடுகின்றன. விடிந்ததும் 'சூரியன்' வரும் என்ற எண்ணங்களோடு.

**நா.அரன்**

*'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.*

'ஊடக மயக்கம்'
'இருக்கிறம்'
3, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு – 07,
மின்னஞ்சல் – irukiram@gmail.com



இலங்கையிலிருந்து மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் ஜனரஞ்சக பொழுதுபோக்கு சஞ்சிகையான 'இருக்கிறம்' தற்பொழுது நாடுமுழுவதும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

# விநியோகஸ்தர்கள் தேவை

இதற்கென வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளை உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து 'இருக்கிறம்' சஞ்சிகைக்கான விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடு முழுவதும் சஞ்சிகையை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்ய முடியும். விநியோகஸ்தர்கள் தங்களது சுயவிபரங்களை கீழுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மின்னஞ்சல் மூலமாகவும் உங்களது சுயவிபரங்களை அனுப்பி வைக்கலாம்

முகாமையாளர்,
விளம்பர சந்தைப்படுத்தல் பிரிவு, இருக்கிறம்,
03, டொரிங்டன் அவனியு, கொழும்பு - 07
தொலைபேசி - 011 - 3150836, 011 - 2555529மின்னஞ்சல் - irukiram@gmail.com

Jeya Offset Printers, No. 29 St`Sebastian


அச்சம் ஒழிந்த நாட்டினிலே
சூரிய சந்திரர் நீங்களே
மெச்சும் வளமிகு நாளையிலே
ஜனாதிபதியும் நீங்களே!
நீடூழி
204-5801
ஊர்களை இழந்தோம்!
ஊனங்களானோம்!
ஊரூராய் அலைகின்றோம்!
நீர் நீடூழி வாழ்வதற்காய்!